DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1352 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 4, 2022

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# முதல் முறையாக, டொராண்டோ நகரத்தில் ஒரு சாதாரண தனிக் குடியிருப்பு வீட்டின் விற்பனை விலை 2 மில்லியன் டாலர்களைத் தாண்டியது




முதல் முறையாக, டொராண்டோ நகரத்தில் உள்ள ஒரு சாதாரண தனிக் குடியிருப்பு வீட்டின் சராசரி விற்பனை விலை 2 மில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் வீடு விற்பனைத் துறையில் பணியாற்றுபவர்களை மட்டுமல்ல. இந்தத் துறையோடு சம்பந்தப்பட்ட பல துறை சார்ந்தவர்களும் ஆச்சரியத்தில் உள்ளதாகவும் கனடாவின் தேசிய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன

வீடு விற்பனையில் இது இரண்டாவது பரபரப்பான மாதமாக பிப்ரவரி கருதப்பட்டாலும் என்றாலும், கடந்த ஆண்டு சாதனை யாக காணப்பட்ட இதே மாதத்தோடு ஒப்பிடும்போது 16.8 சதவீதம் குறைவான வீடு விற்றல் மற்றும் வாங்குதல்கள் ஆகியன இடம்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விற்பசைன் சாதனை தொடர்பாக கருத்து வெளியிட்ட ரொறன்ரோ வீடு விற்பதை ஆணைக்குழுவின் தலைவர் தலைவர் கெவின் கிரிகர், கருத்துத் தெரிவிக்கும் போது, ரொறன்ரோவி வீடுகளை வாங்குபவர்களிடையே கடுமையான போட்டி தொடர்ந்து செல்வதால் பல பகுதிகளில் விலை அதிகரிப்பு இவ்வாறான சாதனை நிலைக்குத் தள்ளுவதால், விற்பனை நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றம் வீடுகள் வாங்குகின்றவர்களுக்கும் விற்பவர்களுக்கும் வெளிப்படையாக தெரிந்த ஒன்றாக இருந்திருக்கும் என்று ஒப்புக்கொண்டார்.

இப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் தொடர்மாடிக் குடியிருப்புகளுக்கான சராசரி விற்பனை விலை 1.33 மில்லியன் டாலர்களாக இருக்கும் நிலையில், கடந்த பிப்ரவரியில் 28 சதவீதம் மற்றும் ஜனவரி மாத சராசரியை விட 90,000 டாலர்கள் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொற்றுநோயான 'கொரோனா' ஆரம்பித்த முதல் ஆண்டில் விலையில் வீழ்ச்சியடைந்த உயர்மாடிக் குடியிருப்புக்கள் கூட கடந்த மாதம் இரட்டை இலக்க அதிகரிப்புகளைப் அடைந்திருக்கின்றன என்று அறியப்படுகின்றது.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

# Century 21 Innovative Realty Inc வீடு விற்பனை முகவர் நிறுவனம் சிறப்பபாக நடத்திய 12வது ஆண்டு வெற்றியாளர் விருதுகள் வழங்கும் வைபவம்




கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Century 21 Innovative Realty Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனம் கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள அழகிய மண்டபம் ஒன்றில் தனது 12வது ஆண்டு வெற்றியாளர் விருதுகள் வழங்கும் வைபவத்தை சிறப்பாக நடத்தியது.

நிறுவனத்தின் ஸ்தாபகரும் பொறியியுலாளரும். வீடு விற்பனை முகவருமாக சமீம் மொகமட் அவர்கள் தனது நிறுவனத்தின் பங்காளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரோடு இணைந்து விருது வழங்கும் நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்து நிறைவு செய்தார். *(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுறோவில் Taste of Madurai
உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா – 2 $ 9.99 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்

**Jeya 647-669-2739**

### Basement Rent

ஸ்காபுறோவில் **Brimley & Finch** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் **Walkout Basement** வாடகைக்கு உள்ளது.
**1 Bedroom 1 Parking** ஆகியன உண்டு. ஏப்ரல் மாதம் 1ம் திகதி தொடக்கம் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு அழைக்க வேண்டியவர்:

**பாலா: 647-449-7709**




### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Trainee Dental Assistant Wanted

Looking for a Trainee Dental Assistant.
Requirements:-
Science, Math, Computer Skill, Communication skill.
Team player, Fast learner.
Training will be given to the right Candidate.
Please forward resume to

**cydentalcare@gmail.com**

### Part-Time Medical Receptionist Wanted

Part-time Medical Receptionist wanted for a Medical Clinic in Scarborough., 15-20hrs/ week. Candidate must be fluent in English and Tamil. Must be proficient in computer skills. Duties include answering phone calls, preparing paperwork, scanning documents, etc.
Wages Negotiable.
Please send resume to:

**vahishan@gmail.com**

### Basement for Rent

Newly renovated BASEMENT
4 ROOMS + 2 washroom
Pharmacy and Eglington (MAIN INTERSECTION)
Call 647-808-9022 / 416-302-9022

---------------------------------------------

1 ROOM Private room
Basement available
( Warden and Lawrence)
647-808-9022

உதயன் கதிரோட்டம்

# யாருக்கும் கட்டுப்படாதவராக கடும்போக்கைக் கடைப்பிடிக்கும் புட்டின் உலகின் அழிவிற்கு அத்திவாரம் இடுகின்றாரா?

சோவியத் யூனியன் என்னும் உலகிற்கு வழிகாட்டும் நாடாக விளங்கிய ரஸ்யாவை கொம்யூனிசத்தை எதிர்ப்பவர்களே போற்றிப் புகழ்ந்த காலம் ஒன்று இருந்தது. அன்றைய நாட்களில் சோவியத் யூனியனில் ஒரு குழந்தை பிறந்தால் 'இந்த நாட்டிற்கு ஒரு மூளை கிடைத்துள்ளது என்று அந்த தேசத்தவர்கள் கொண்டாடுவர்களாம்.

ஆனால் அமெரிக்கா என்னும் 'எசமானின்' கைங்கரியத்தால் உடைந்து போன சோவியத் யூனியன் வழித் தொடராக உள்ள ரஸ்யாவின் ஜனாதிபதி புட்டின் உக்ரைன் நாட்டு குழந்தைகளை கொன்று குவிக்கப்போவதாக கர்ச்சிக்கின்றார். இவ்வாறாகவே, தனது நாட்டு படையினர் யுத்தத்தில் கொல்லப்பட, அவர்களின் குழந்தைகள் அனாதைகளாக விடப்படுகின்றார்கள். இறந்து போகும் படையினரின் மனைவிமார் விதவைகள் ஆகின்றனர். இவ்வாறாக புட்டின் என்னும் தனி மனிதனின் அகங்காரம் அப்பாவி உயர்களைப் பறித்தெடுக்கின்றது. உக்ரைன் என்னும் அற்புதமான நாட்டின் வளங்களை அழிக்கின்றது.

உக்ரைன் மீது ரஸ்யா மேற்கொண்ட படையெடுப்பு காரணமாக ஆமாம், அவ்விரு நாடுகளுக்கிடையே உருவெடுத்துள்ள போர்ப் பதற்றம் மற்றும் பொருளாதார பாதிப்புகளுக்கு அப்பால் உலகின் மற்றைய நாடுகளிலும் தற்போது பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராக நேட்டோ கூட்டணி நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையானது அனைத்து நாடுகளிலும் பெரும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

ர்ஸ்யா-உக்ரைன் பதற்ற நிலைமையானது இலகுவில் முடிவுக்கு வந்து விடும் என்ற அறிகுறிகள் தென்படவில்லை. இந்த நிலமையானது உக்ரைனுக்கு மாத்திரமன்றி, ரஸ்யாவுக்கும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தவே போகின்றது. ஏனைய நாடுகளிலும் மறைமுகப் பாதிப்பு தவிர்க்க முடியாததாகி விடும்.

இவற்றில் பிரதானமானது எரிபொருள் விநியோகத்தில் ஏற்படவுள்ள தாக்கமாகும். அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகள் ரஸ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. உலகின் பிரதானமான எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாக ர்யாவும் விளங்குகிறது. ரஸ்யாவில் இருந்து பல்வேறு நாடுகள் எரிபொருளை இறக்குமதி செய்து வருகின்றன.

ரஸ்யா மீதான பொருளாதாரத் தடையின் காரணமாக உக்ரைனுக்கு ஆதரவான நாடுகள் அந்நாட்டில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் தற்போது பின்வாங்கியுள்ளன. உலகின் பிரதான ஏற்றுமதி நாடொன்றில் இருந்து எரிபொருள் வர்த்தகம் வீழ்ச்சி அடையுமாயின் உலகநாடுகள் அனைத்திலும் எரிபொருளுக்கான பற்றாக்குறை தவிர்க்க முடியாததாகி விடும். எனவே உலகநாடுகள் அனைத்தும் நெருக்கடியையே எதிர்நோக்கப் போகின்றன. அதுமாத்திரமன்றி, உலகின் அனைத்துப் பொருட்களுக்குமான வர்த்தகப் போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்படவே செய்யும்.

நிலக்கரியை மூலப்பொருளாகக் கொண்ட அனல் மின்சாரத்திலும், திரவ எரிபொருளை மூலப்பொளாகக் கொண்ட மின்பிறப்பாக்கி ஊடான மின்சார உற்பத்தியிலுமே பல நாடுகள் அதிகம் தங்கியுள்ளன. இந்நிலையில், கொவிட் காரணமான பொருளாதார நெருக்கடியினால் டொலருக்கு கட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக திரவ எரிபொருளை இறக்குமதி செய்வதில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன. அதன் காரணமாக பல நாடுகள் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சமீப காலமாக சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்வதையும் நாம் அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# இலங்கை அரசியலில் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஒன்று அரங்கேறியது....

## பங்காளிகளின் பகை வெளிச்சத்திற்கு வந்தது..

### ஊழல் பேர்வழியான விமல் வீரவன்ச அமைச்சர் பதவியை இழந்தார்...



குழப்பங்கள் பல கூடிக் கூத்தாடும் இலங்கை அரசியலில் நீண்ட நாட்கள் எதிர்பார்ந்திருந்த அரசியல் குழப்ப நிலை ஒன்று முடிவிற்கு வந்துள்ளமை தொடர்பான செய்திகள் வெளியாகி வருகின்றன. அரசாங்கத்திற்குள் பங்காளிகளாக இருந்து மக்கள் சேவைக்கு பதிலாக "சொந்தத் தேவை"களைக் கவனித்தவர்களின் நீண்ட பகை வெளிச்சத்திற்கு வந்த நிலையில் இடது சாரிக் கொள்கை உடையவராக தன்னைக் காட்டிக் கொண்டாலும் முதன்மையான தமிழ் இனவெறியனாக அமைச்சரவையில் "குந்தியிருந்த" ஊழல் பேர்வழியான விமல் வீரவன்ச அமைச்சர் பதவியை இழந்தார் என்ற செய்தியும் வெளியாகி இலங்கையில் பலர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளின் படி இலங்கையின் அமைச்சரவையில் அங்கம் வகித்த. அமைச்சர்கள் உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவங்ச ஆகியோரை அமைச்சரவையில் இருந்து நீக்கீள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி கோட்டாபய நாளை அமைச்சரவையில் மாற்றங்களை செய்யவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எஸ்.பி.திஸாநாயக்க கல்வி அமைச்சராகவும், பவித்ரா வன்னியாரச்சி மின்சக்தி அமைச்சராகவும், தினேஷ் குணவர்தன கைத்தொழில் அமைச்சராகவும், காமினி லொக்குகே எரிசக்தி அமைச்சராகவும் நியமிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

அதேவேளை பவித்ரா வன்னியாராச்சியின் போக்குவரத்து அமைச்சு பதவி ராஜாங்க அமைச்சரான திலும் அமுனுகமவுக்கு வழங்கப்படலாம் என பேசப்படுகிறது.

அமைச்சர்கள் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதனிடையே புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவும் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் அமைச்சர்களாக பதவி வகிக்கும் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியார் அரசாங்கத்தை விமர்சித்து வருவதால், அவர்களை பதவிகளில் இருந்து நீக்குமாறு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகளின் தலைவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றில் அரசாங்கத்தின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்து, வீரவங்ச, கம்மன்பில ஆகியோர் உரையாற்றி இருந்தனர்.

அதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகிகும் பங்காளி கட்சிகளின் அமைச்சர்களை அழைக்காது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களை மாத்திரம் அழைத்து இன்று காலை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தார். இதன் போது இந்த அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் பேசப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


சாஸ்திரம்





மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல்
அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை
சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம்
சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக
துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.
தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரை சேர்ந்த தேசிய உதைப்பந்தாட்ட வீரர் மாலைதீவில் உயிரிழப்பு




இலங்கை உதைபந்தாட்ட அணி வீரரும் மாலைதீவின் கழக அணி வீரருமான பியூஸ் சனிக்கிழமை (26) மாலைதீவில் உயிரிழந்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் என்பவரே மேற்படி உயிரிழந்துள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர். பாடசாலை காலத்தில் மத்திய களத்தில் (CD) தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இருந்தார்.

இலங்கை அணியின் தேசிய அணியில் இடம் பிடித்த இவர், கால்பந்து உலக கிண்ண கோப்பைக்கான (FIFA World Cup) தகுதிகான் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

அதே நேரம் இலங்கை தேசிய அணியில் சிறந்த பின் கள வீரராக விளங்கினார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற **SAFF** கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில், இந்திய அணியுடனான போட்டியில் சிறந்த வீரருக்கான விருந்தினை பெற்றுக்கொண்டார்.

இந்த போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. இவ்வருடத்திற்கான மிக பிரபலமான வீரருக்காக இடம் பெற்ற கருத்து கணிப்பில் ரன்னரப்பாக பியூஸ்லஸ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது மரணத்திற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

**- மன்னார் நிருபர்**

# சொந்த நாட்டில் தொழில்சார் அங்கீகாரம் இன்மையே இன்று பியூஸின் மரணத்திற்கு காரணம்



விளையாட்டுத்துறையை கொண்டாடும் ஒவ்வொருவருக்கும் பியூஸின் மரணம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பெரும் இழப்பாகும்.

மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியில் இருந்து பட்டி தொட்டி எல்லாம் தெரியும் அளவுக்கு தனது கால்பந்தாட்டத்தின் திறமையினால் மிளிர்ந்தவன் பியூஸ்.

1990 ஆண்டு பிறந்த பியூஸ் சிறுவயதில் இருந்தே கால்பந்தாட்டத்தின் தீவிர ரசிகன் ஆவான்.

கால் பந்தின் மேல் கொண்ட தீரா காதல் காரணமாக பாடசாலை காலங்களில் பாடசாலை அணிக்காக பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளுக்கு சொந்தக்காரன்.

பாடசாலை மட்டத்தில் மாத்திரம் இல்லை கழக ரீதியான போட்டிகளிலும் பிரகாசித்த பியூஸ் ஒரு கட்டத்தில் கால்பந்தாட்டத்தில் தமிழர்களுக்கான அடையாளம் ஆனான்.

தேசிய போட்டிகள் மாத்திரமின்றி சர்வதேச போட்டிகளிலும் பல விருதுகளை வாங்கி குவித்துள்ளார்.

தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்த பியூஸ் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளை கடந்து பல காயங்கள் உபாதைகளை பொருட்படுத்தாமல் நாட்டுக்காகவும் தனது அடையாளத்தை நிலைப்படுத்த போராடிய ஒரு வீரன்.

சொந்த நாட்டில் கால்பந்தாட்ட அணிக்காக விளையாடினாலும் தொழில் சார் அங்கீகாரம் என்பது தமிழர்களுக்கு எப்போதும் எட்டாக்கனியாக உள்ளது.

நீண்ட போராட்டங்களின் பின்னர் தனக்கான அங்கீகாரத்துக்காக மாலைதீவில் கிடைத்த வாய்ப்பின் காரணமாக அங்குள்ள கழக அணி ஒன்றுடன் ஒப்பந்த ரீதியில் பணியாற்றி வந்த நிலையிலே சனிக்கிழமை (26) இந்த துயர் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல கால்பந்தாட்ட வீரர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்த வீரன் தனக்கான தொழில் ரீதியான அங்கீகாரம் தன் நாட்டில் கிடைக்காமையினால் வேறு ஒரு நாட்டில் தனது திறமையை வெளிப்படுத்தி நிரப்ப முடியாத வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தி சென்றுள்ளமை மன்னார் மாவட்டத்தையும் இல்லை கால்பந்தாட்டத்தில் பால் ஈர்க்க முடியாத பலருக்கு மீள முடியாத துயராகும்.

சொந்த நாட்டில் தனக்கான அங்கீகாரம் இன்றி போராடும் பலருக்கு இவன் ஒரு அத்தியாயத்தை ஆரம்பித்து செல்கின்றான்.





# அனுசரனையில் கேகாலை மாவட்டத்தில் உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு!



வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் ரட்னம் பவுண்டேசன் பிரித்தானியா நிறுவனங்களின் நிதி அனுசரனையில் கேகாலை மாவட்டத்தில் உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது.

கேகாலை மாவட்டம் கேகாலை கல்வி வலயத்திற்குட்பட்ட உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் திரு. ரஞ்சன் சிவஞானசுந்தரம் மற்றும் வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் மாலதி வரன் ஆகியோரால் கணனி ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கேகாலை கல்வி வலய கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி. ரங்சிகா சிறிவர்த்தன அவர்கள், பிறைட் சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திரு. என். முரளிதரன், வரக்காபொர தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையின் தலைவர் திருமதி. கோமதி அவர்கள், பாடசாலை அதிபர் திரு. பொன்னம்பலம் அவர்கள், வரக்காபொல தமிழ் சமூ அபிவிருத்தி போவையின் உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர். இந்த பாடசாலையானது கேகாலை மாவட்டத்திற்குட்பட்ட கேகாலை கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலையாக உள்ளதுடன் இங்கு தோட்டதொழிலாளர்களின் பிள்ளைகளே பெரும்பாலும் கல்வி பயிலுகின்றனர். வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் தன்னுடைய உரையில் வன்னி ஹோப் மற்றும் ரட்ணம் பவுண்டேசன் ஆகிய நிறுவனங்கள் இணைந்து திறன் வகுப்பறை வழங்கும் முதலாவது வேலைத்திட்டத்தை கேகாலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதையிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.



கேகாலை கல்வி வலய கோட்டக் கல்வி பணிப்பாளர் திருமதி. ரங்சிகா சிறிவர்த்தன தனது உரையில் தோட்டப்புற பாடசாலைகளுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்களை எமது புலம்பெயர் உறவுகள் முன்னெடுக்க முன்வந்தமை வரவேற்க தக்க விடயமாகும். நீங்கள் வழங்கிய திறன் வகுப்பறையானது இங்குள்ள தோட்டப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்தார். எதிர்காலத்தில் உங்களது தொண்டு நிறுவனத்தின் ஊடாக இவ்வாறான உதவிகளை பின்தங்கிய வழங்களற்ற பாடசாலைகளுக்கு வழங்குவதன் ஊடாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

# லண்டன் கற்பக விநாயகர் ஆலய சிவஸ்ரீ ச. லம்போதர குமாரசாமி குருக்கள் அவர்களால் சித்தன்கேணி கணேசா வித்தியாலயத்தில், அமைக்கப்பெற்ற நவீன திறன் வகுப்பறை



யாழ்ப்பாணம் - சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில், பாடசாலையின் பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்கள் அவர்கள் தமது பாட்டன், பாட்டியாகிய சிவஸ்ரீ மு.குமாரசாமி குருக்கள் கு.வல்லவாம்பிகை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நான்காவது நவீன திறன் வகுப்பறையானது (SMART PANEL) வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.தி.ஜோன் குயின்ரஸ் அவர்களால் 27-02-2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இத்திறன் வகுப்பறையின் நினைவுப் பலகையை வலிகாமம் வலயக் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. முரளிதரன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்ததோடு வித்தியாலயத்தின் பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவுமாகிய இத்திறன் வகுப்பறையை அமைத்துத் தந்தவருமாகிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்கள் அவர்கள் திறன் பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததோடு வைபவ ரீதியாக இயக்கியும் வைத்தார். அத்துடன் இத்திறன் வகுப்பறைக்குரிய உள்ளக வசதிகளையும் செய்து தந்துள்ளார்.



இப்பேருதவியை வழங்கிய சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமி குருக்கள் அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலக செய்திகள்
World News

# தீவிரமடையும் ரஷ்யாவின் தாக்குதல் - உயிர் பிழைக்க மொத்தமாக வெளியேறும் உக்ரைன் மக்கள்

கீவ் நகரத்தை ரஷ்யா கைப்பற்ற ரஷ்யா முனைப்பு காட்டுவதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அங்குள்ள உக்ரேனியர்கள் அவசரமாக வெளியேறத் தொடங்கியுள்ளனர். உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து 6 ஆவது நாளாக போராட்டம் நடத்தி வருகிறது. தொடக்கத்தில் தாக்குதலை தீவிரம் காட்டாத ரஷ்யா, அடுத்தடுத்து நாட்களில் தொடர்ந்து ஏவுகணைகளை வீசியும் வீரர்கள் தரைவழியாக புகுந்தும் தாக்குதலை தீவிரப்படுத்தினர். இதற்கு உக்ரைன் வீரர்கள் பதிலடி கொடுத்து வருகின்றனர். உக்ரைன் தலைநகர் கீவ் நகரத்தை ரஷ்யா கைப்பற்ற ரஷ்யா முனைப்பு காட்டுவதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அங்குள்ள உக்ரேனியர்கள் அவசரமாக வெளியேறத் தொடங்கியுள்ளனர். இதனால் கீவிலுள்ள ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர்.

மக்கள் தங்கள் வீடுகள், சொத்துகள் உள்ளிட்டவற்றை கைவிட்டு அவசியப் பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்கள் வெளியேறி வருகின்றனர். ரயில் மூலம் நாட்டின் கிழக்கு எல்லையை அடைந்து அங்கிருந்து அண்டை நாடுகளில் தஞ்சமடைய கீவ் நகர மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். உக்ரைனின் கிழக்கு எல்லையை அடைந்த பலர் போலந்திற்கு செல்ல காத்துக்கொண்டுள்ளனர். இதற்கு மேல் உக்ரைனில் இருந்தால் உயிர் தப்புவது கடினம் என அவர்கள் கூறுவதாக ஏஎ.ஃப்பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. சுமார் இரண்டரை லட்சம் பேர் 12 இடங்களில் தங்கள் நாட்டில் தஞ்சம் புக எல்லையில் காத்திருப்பதாக போலந்து ஊடகங்கள் தெரிவித்துள்ளன. உக்ரைனை விட்டு வெளியேற முடியாத பலர் வீடுகளுக்கு கீழ் உள்ள சுரங்களில் பதுங்கியுள்ளனர். ஏற்கனவே முன்னதாக போர் தொடர்ந்தால் உக்ரைனில் இருந்து 70 லட்சம் மக்கள் வெளியேறுவர் என ஐரோப்பா யூனியன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.





# 40 மைல் நீளத்துக்கு அணிவகுத்த ரஷ்ய ராணுவம்: உக்ரைனில் கூடுதல் பதற்றம்

உக்ரைனில் தாக்குதல் நடத்திவரும் ரஷ்யா, தனது ராணுவ பலத்தைக் காட்டும் வகையில் 40 மைல் நீளத்துக்கு ராணுவ டாங்குகள் அடங்கிய அணிவகுப்பை நடத்தியிருக்கிறது.

பலம்பொருந்திய ரஷ்ய ராணுவத்தை எதிர்கொண்டு உக்ரைனியர்கள் தீரத்துடன் போராடிவருகின்றனர். அந்நாட்டின் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் எனப் பல நகரங்கள் மீது ஷெல் குண்டுகள், பீரங்கித் தாக்குதல் என தாக்குதல் நடத்திவரும் நிலையிலும், ரஷ்ய ராணுவத்தால் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என எதையும் அடைய முடியவில்லை என்கின்றன சர்வதேச ஊடகங்கள். அதேவேளையில் உக்ரைனில் தனது படைகளின் எண்ணிக்கையை ரஷ்யா அதிகரித்துக்கொண்டே வருகிறது. மறுபுறம், உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை வழங்கி உதவிவருகின்றன. எனினும் இந்தப் போரைத் தனித்துத்தான் எதிர்கொள்கிறது உக்ரைன். ஸெலன்ஸ்கி தலைமையிலான உக்ரைன் அரசைக் கவிழ்க்கும் முனைப்பில் ரஷ்ய ராணுவம் முன்னேறி வருவதாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், 40 மைல் நீளத்துக்கு ராணுவ டாங்குகள் அடங்கிய அணிவகுப்பை உக்ரைன் தலைநகர் கீவின் வடக்குப் பகுதியில் ரஷ்யா நடத்தியிருக்கிறது. இந்தக் காட்சி அமெரிக்காவைச் சேர்ந்த மக்ஸார் டெக்னாலஜி எனும் தனியார் நிறுவனத்தின் செயற்கைக்கோள் புகைப்படமாக வெளியாகியிருக்கிறது. இந்தத் தகவலை வெளியிட்டிருக்கும் மக்ஸார் நிறுவனம், கூடுதலாகத் தரைப்படை ராணுவத்தையும், ஹெலிகாப்டர் அணியையும் பெலாரஸின் தெற்குப் பகுதியில் ரஷ்யா குவித்திருப்பதாகக் கூறியிருக்கிறது. உக்ரைன் எல்லையிலிருந்து 20 மைல் தொலைவில் கூடுதல் படைகள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

உக்ரைனுக்குக் கூடுதலாக ஆயுதங்கள் வழங்கப்படும் என்றும், ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப்படும் என்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் கூறியதாக உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் த்மைட்ரோ குலேபா கூறியிருக்கிறார்.

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி தடைசெய்யப்பட்ட வெற்றிட வெடிகுண்டை (vacuum bomb) ரஷ்யா பயன்படுத்தியதாக அமெரிக்காவுக்கான உக்ரைன் தூதர் ஒக்ஸானா மார்கரோவா கூறியிருக்கிறார். இந்த வகை வெடிகுண்டு, சுற்றுப்புறத்தில் உள்ள காற்றிலிருந்து ஆக்சிஜனைப் பயன்படுத்தி அதிக வெப்ப உமிழ்வுடன் வெடிக்கக்கூடியது. வழக்கமான வெடிகுண்டுகளைவிடவும் நீண்ட நேரத்துக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தக்கூடியது. இந்தச் சூழலில் ரஷ்ய விமானங்கள், ஹெலிகாப்டர்கள் பறக்கவும் ஏவுகணைகள் செலுத்தப்படவும் தடை விதிக்கும் வகையில் "நோ-ஃப்ளை ஸோன்" உக்ரைனில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று மேற்கத்திய நாடுகளிடம் உக்ரைன் அரசு கோரிக்கை விடுத்திருக்கிறது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ரஸ்ய சிப்பாய்களின் தாய்மார்களுக்காக உக்ரைன் அரசு அறிமுகம் செய்துள்ள "உக்ரைனில் இருந்து உயிருடன் திரும்பி வாருங்கள்" என்னும் திட்டம்

உலக செய்திகள்
World News



தற்போது உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் உக்ரேனுக்கு எதிரான அராஜகப் போர் காரணமாக அங்கு உக்ரேன் இராணுவத்தால் பிடித்து வைக்கப்பட்டுள்ள ரஸ்யாவின் இராணுவச் சிப்பாய்களின் குடும்பத்தார், அவர்களின் நாடு போரில் ஈடுபடுவதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் ஒரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது இந்த hotline தொலைபேசி திட்டத்திற்கு 'Come Back Alive from Ukraine' (உக்ரைனில் இருந்து உயிருடன் திரும்பி வாருங்கள்) என பெயரிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது மனிதாபிமான அடிப்படையில் செய்யப்பட்ட விடயம் என்றாலும், இதன் மூலம் உக்ரைனுக்கு எதிரான படையெடுப்பில் தங்கள் உறவினர்களும் ஆட்களும் சென்றுள்ளனர் என ரஷ்ய வீரர்கள் குடும்பத்தார் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் ரஷ்ய வீரர்கள் மற்றும் துருப்புகளை உக்ரைன் ராணும் பிடித்து வைத்துள்ளது போன்ற புகைப்படங்களும் வீடியோக்களும் இணையத்தில் வைரல் ஆகியுள்ளது.

அதே சமயம், ரஷ்ய வீரர்களை காட்டிலும் உக்ரைன் வீரர்கள் தான் அதிகளவில் காயம் மற்றும் உயிரிழப்பை சந்தித்துள்ளனர் என ரஷ்ய பாதுகாப்பு துறை சமீபத்தில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் பாதுகாப்பு துறையானது போர் தாக்குதலில் காயமடையும் ரஷ்ய வீரர்களை அவர்களின் குடும்பத்தார் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்களை வெளியிட்டுள்ளது.

நெருக்கடியான காலத்திலும் கூட, சிறிய ஐரோப்பிய நாடான உக்ரைன் தனது மனிதாபிமான செயலை கடைபிடிப்பது இதன் மூலம் உலகத்திற்கு தெரிவிப்பதை உக்ரைன் ஜனாதிபதி விரும்புகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் ரஷ்ய படையினர் 6வது நாளாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் மற்றும் வீரர்களுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் போர் கைதிகளாக கொல்லப்பட்ட அல்லது பிடிப்பட்ட ரஷ்ய வீரர்களுக்கு என ஹாட்லைன் எனப்படும் நேரடித் தொலைபேசி இணைப்புகளை உக்ரைன் அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்த எண்களுக்கு நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் ரஷ்ய தாய்மார்களிடம் இருந்து வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ரஷ்ய சிப்பாய்களின் தாயார்கள் மற்றும் குடும்பத்தார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனில் போரிடும் ரஸ்யப் படைகள் அங்கு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த மறுப்பு தெரிவிக்கின்றார்களாம்







ரஷ்யா - உக்ரைன் இடையே 8-வது நாளாக போர் நடைபெற்று வரும் நிலையில், தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வரும் ரஸ்யப் படையினர் பலர் மனக்குழப்பமடைந்துள்ளனர் என்றும் அவர்கள் உக்ரைனில் கூட்டமாக உக்ரைன் இராணுவுத்திடம் சரணடைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உக்ரைன் பிரதேசத்தில் போரிட்டு வரும் ரஸ்யப் படைச் சிப்பாய்கள் அங்கு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த அதிகாரிகள் உத்தரவிட்டும், மறுப்பு தெரிவித்துள்ளதாகவும் அவர்களுக்கு இடையில் இடம்பெறும் தொலைபேசி உரையாடல்களில் இருந்து தெரிய வந்துள்ளதாகவும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், உயர்ரக இராணுவ வாகனங்களில் உக்ரைனுக்குள் புகுந்த ரஷ்யப் படைவீரர்கள் தற்போது உணவு தட்டுப்பாட்டால், வாகனங்களை கைவிட்டு, தப்பியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் நாட்டில் ரஷ்யப் படைகள் மனக்குழப்பத்திலும் சோர்வடைந்தும் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, பல ரஷ்யப் படையினர்கள் தாங்கள் உக்ரைனில் போருக்கு அனுப்பப்பட்டுள்ளோமா என்பதும் தெரியவில்லை என கூறுவதாகவும் தங்கள் உணவுத் தேவைகள் கூடு சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, உக்ரைனில் புகுந்துள்ள ரஷ்யப் படையினருக்கு உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளும் எரிபொருளும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், வெறிச்சோடிய உக்ரைன் நகரங்களில் உணவுக்காக சில ரஷ்ய இராணுவத்தினர் கொள்ளை சம்பவங்களிலும் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, போர் களத்தில் இருந்து தப்பிக்க ரஷ்யப் படையினரே சொந்த நாட்டு வீரர்களையே உக்ரைன் பாதுகாப்புத்துறையினருக்கு காட்டிக்கொடுக்கும் வேலைகளும் முன்னெடுக்கப்படு வருவதாக தெரிய வந்துள்ளது.

உக்ரைன் மீது 8-வது நாளாக ரஷ்ய போர் தொடுத்து வரும் நிலையில், இதுவரை ரஷ்ய தரப்பில் 6,000 வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். மட்டுமின்றி, மூன்றே நாளில் உக்ரைன் தலைநகரை கைப்பற்ற புறப்பட்ட ரஷ்ய ராணுவத்தினர், தற்போது எதிர் தாக்குதலால் ஸ்தம்பித்துப் போயுள்ளனர்.

இதேவேளை, பல ரஷ்யப் படையினர்கள் உக்ரைனில் தங்களின் பணி என்ன என்பது தொடர்பில் மேலிடத்து தகவலுக்காக காத்திருப்பதாகவும், ஆனால் ஒருபக்கம் உணவு கேட்டு முறையிடுவதுடன், தாக்குதலுக்கு மறுத்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைனில் உள்ள ரஷ்யப் படைகள் உயர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளும் தொ-லைபேசி உரையாடல்களை பிரித்தானிய உளவுத்துறை நிறுவனம் ஒன்று பதிவு செய்துள்ளது. பல ரஷ்ய விரர்கள் மூன்று நாட்களாக சாப்பிடவில்லை எனவும், மேலிடத்து உத்தரவுகளை மதிக்கவும் மறுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸ் மரணத்தின் உண்மை தன்மை குறித்த அறிக்கை வேண்டும்

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரீஸிடம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை



தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மரணம் அதன் உண்மை தன்மை தொடர்பான விசாரணை உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களுக்கு புதன்கிழமை (2) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மாவட்டத்தின் பனங்கட்டு கொட்டு கிழக்கு கிராமத்தை தனது பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர் தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்.

இவர் 2018 முதல் இன்று வரை இலங்கையின் தேசிய கால்பந்து அணி வீரராக இருந்து வருகிறார். தனது விளையாட்டு திறமையால் பல சாதனைகளை படைத்த ஓர் சிறந்த வீரன். இந்த விளையாட்டு துறையில் தன்னை முற்றும் முழுவதுமாக ஈடுபடுத்தி தன்னை வளர்த்துக் கொண்டு தனது மாவட்டத்திற்கும், தாய் நாட்டிற்கு புகழை தேடித் தந்தவர். தன்னை முழுவதுமாக கால் பந்திற்காக அர்ப்பணித்த வீரன்.

அவருடைய விளையாட்டு திறமையின் நிமித்தம் மாலைதீவுக்கு வலன்சியா விளையாட்டு கழகத்தினரால் அழைக்கப்பட்டு அந்த கழகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி அங்கும் பல சாதனைகள் படைத்து பல வெற்றிக்கு வழி வகுத்தவர். இவ்வாறானதோர் சிறந்த விளையாட்டு வீரனின் (26.02.2022) அகால மரணம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.




அவருடைய மரணம் கொலையா? என்ற சந்தேகத்தையும் எல்லோர் மட்டிலும் எழுப்பியுள்ளது. எனவே இவ்வாறான ஓர் அகால மரணத்திற்கான காரணத்தை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை ஆவணப் படுத்துமாறு குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னார் நிருபர்

# ஒரே நிலைப்பாட்டில் தமிழ்க் கட்சிகள் இருந்திருந்தால். ஜெனீவாவுக்கு கடிதங்கள் போக வேண்டிய தேவையிருந்திருக்காது என்கிறார் எம்.கே.சிவாஜிலிங்கம்



இலங்கையில் தமிழ் மக்களது பிரச்சனைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி இலங்கை தமிழரசுக் கட்சி போன்றவை இதுவரை சர்வதேச சமூகத்திடம் சரியான கருத்துக்களை ஆக்கபூர்வமாகத் தெரிவிக்கவில்லை அத்துடன் பொதுஜன வாக்கெடுப்பு தேவை என்ற விடயத்தையும் வலியுறுத்தவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தாலே, நாங்கள் தனியாக ஜெனிவாவுக்கு கடிததததே அனுப்பியுள்ளோம். ஒரே நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்குமானால் ஜெனீவாவுக்கு பல்வேறு கடிதங்கள் போக வேண்டிய தேவையிருந்திருக்காது.தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால், ஜெனீவாவுக்கு தனியாக கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கட்சிகள் ஒவ்வொன்றும் தனியாக ஜெனிவாவுக்கு கடிதம் எழுதியமை தொடர்பாக வல்வெட்டித்துறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை ஜெனிவாவுக்கு தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி,தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய 05 கட்சிகள் கூட்டாக தமிழர் பிரச்சினையை தீர்க்க வடக்கு கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தி கடிதங்களை எழுதியுள்ளன. இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒருபோதும் கிடையாது. ஒற்றையாட்சியை விட்டு ஒரு அங்குலமும் அரசாங்கம் வழங்காது. அரசியல் தீர்வு வழங்கப்படும், ஆனாலும் ஒற்றையாட்சியை மலினப்படுத்துவதாக அந்த தீர்வு இருக்காது. சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் இலங்கையின், வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொதுஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். அதுவே அரசியல் தீர்வுக்கான வழி என்பதை நாங்கள் இறுக்கமாக வலியுறுத்தி இருக்கின்றோம் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "சந்தேகத்திக்கிடமான இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரரின் டக்ஸன் பியூஸ்லஸ் மரணம் தொடர்பாக நீதியான விசாரணை வேண்டும்"

### - தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை



இலங்கையின் சிறந்த தேசிய கால்பந்தாட்ட தமிழ் வீரர் மன்னாரைச் சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் என்பவர் கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்பு மாலைதீவில் தூக்கில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும் இவரது மரணம் தொடர்பில் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை மிகுந்த சந்தேகங்கொள்கின்றது.

மேலும் பியூஸ்லஸ் சிறு பராயம் தொடக்கம் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரராவர் அவரது அதீத திறமையினால் இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம் பிடித்திருந்தார் என்பதும் இவர் ஒரு தமிழர் என்பதால் இவர் மீது இலங்கையின் பெரும்பான்மை இன விளையாட்டு வீரர்கள் காழ்ப்புணர்ச்சியில் இருந்தார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எனவே மாலைதீவில் கால்பந்தாட்ட போட்டி ஒன்றுக்காக சென்றிருந்த வேளை அங்கு தங்கியிருந்த இடத்திலே தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டுள்ளார் இது திட்டமிட்ட படுகொலை யாக இருக்கலாம் என தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை கருதுகின்றது.

எனவே டக்ஸன் பியூஸ்லஸ் அவர்களின் மரண விசாரணை நீதியான முறையில் இடம் பெற வேண்டும் எனவும் அவரது மரணத்திற்கான உண்மையான காரணம் அறியப்பட்டு பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்த விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரிகளையும், இலங்கை அரசையும் கேட்டுக் கொள்கிறோம்.



# மன்னார் மாவட்டத்தில் நெல் அறுவடையை மேற்கொள்ள உள்ள விவசாயிகளுக்கு விசேட திட்டத்தில் எரிபொருள்

### மன்னார் அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல்



மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி டிசல் மற்றும் ஏனைய எரிபொருட்களை கேன்களில் பெற்றுக் கொண்டு வெளியில் அதி கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் செவ்வாய்க்கிழமை (1) ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி டீசலை கேன்களில் பெற்றுக் கொண்டு வெளியில் கொண்டு சென்று 135 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் தற்போது நெல் அறுவடை செய்பவர்களுக்கு என மன்னார் மாவட்டத்தில் எரிபொருளை வழங்க விசேட நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் விவசாயிகள் பெரும் போக நெல் செய்கை அறுவடையினை மேற்கொள்ள இருக்கும் விவசாய செய்கையின் ஏக்கர் அளவினை குறித்த பகுதிக்கான கம விதானை, விவசாய அமைப்பின் தலைவர், அல்லது செயலாளர் உறுதி படுத்தி வழங்குவதன் ஊடாக நெல் அறுவடையை மேற்கொள்ள உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான எரி பொருளை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்விடயம் தொடர்பில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரிய அமைப்புக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளார்.

எனவே மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே நெல் அறுவடையை மேற்கொண்ட மன்னார் மாவட்ட விவசாயிகள் மீண்டும் எரி பொருட்களை கொள்வனவு செய்து சேமிக்காது, இச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# "தேசிய சிறுநீரக வைத்தியசாலையை இன்று, ஒரு வெள்ளை யானை" முன்னாள் ஜனாதிபதி

**பொ**லன்னறுவையில் 100 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலை நோயாளர்களுக்கு உகந்த சேவையை வழங்கத் தவறியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

"இந்த வைத்தியசாலையின் பெறுமதி இன்று மக்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த வைத்தியசாலை வெள்ளை யானையாக இருப்பதைத் தவிர வேறெதுவும் செய்வதில்லை என்ற பேச்சு அடிபடுகின்றது. அது உண்மை. இன்று இந்த வைத்தியசாலையில் ஒரே நேரத்தில் சிகிச்சை அளிக்கக்கூடிய 100 இரத்த சுத்திகரிப்பு கருவிகள் உள்ளன. இன்று 22 நோயாளிகளுக்கு மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது".

வார இறுதியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசாலையின் தற்போதைய நிலை குறித்து முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் தற்போதைய சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் கலந்துரையாடினாலும் பலனில்லை என முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

"நான் எனது நிலையிலிருந்து இறங்கி இந்த வைத்தியசாலை சார்பாக அனைவரிடமும் பேசினேன். ஆனால் இன்று இந்த வைத்தியசாலை சரியாக இயங்கவில்லை. உயர்தொழில்நுட்ப உபகரணங்கள் அழிந்து வருகின்றன. சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் பேசினேன். பவித்ராவிடம் பேசினேன். அது எதுவும் பலனளிக்கவில்லை. வைத்தியசாலை செயலிழந்து வருகிறது".

வைத்தியசாலையின் உயர் தொழில்நுட்ப உபகரணங்களுக்கு நேர்ந்த கதி குறித்தும் முன்னாள் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

"இன்னும் சில நாட்களில் உயர்தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படாமல் அழிந்துவிடும். முழு இலங்கையிலும் சிறுநீரக நோயாளர்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலை இதுவாகும். நோயாளிகள் வெகு தொலைவில் இருந்து வருகிறார்கள்.

அவர்களுக்கு சேவையை வழங்குங்கள். ளநநவை இயந்திரம் இன்று சரியாக இயங்கவில்லை, நான் சத்தமிட்டு அதனை சரி செய்தேன். அது இருபத்தி இரண்டு கோடி பெறுமதியானது. வீணாக சிதைகிறது".

குறித்த வைத்தியசாலைக்கு பணிப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி, இது தொடர்பில் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பொலன்னறுவையில் 12 பில்லியன் ரூபா செலவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் 30 மாத காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட, தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலையை 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி திறந்து வைத்தார்.



மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எல்லாத்துக்கும் "யெஸ் சர்"

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, பொலன்னறுவை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மூன்று மக்கள் பிரதிநிதிகளும் மக்கள் பிரச்சினைகளை பேசுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

"விவசாயிகள் பிரச்சினையை நான் எங்கெல்லாம் பேச முடியுமோ அப்போதெல்லாம் பேசுவேன். என்னைத் தவிர பொலன்னறுவையில் இருந்து நாடாளுமன்றம் சென்ற மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் யாரும் விவசாயிகள் பிரச்சினைத் தொடர்பில் பேசுவதில்லை. அனைத்திற்கும் "யெஸ் சேர்" என காலத்தை வீணடிக்கின்றனர். நாடு இன்று சோகத்தில் உள்ளது. எங்கும் ஒரு மனக்குறை உள்ளது. மக்கள் வாழ்க்கை சீரழிந்துள்ளது. வறுமை தலைவிரித்தாடுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை சீரழிந்துள்ளது." என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் முதற் தடவையாக "தமிழர் மரபுரிமை மாதம்" தொடர்பாக உரையாற்றிய உறுப்பினரை கௌரவித்த மொன்றியால் பிரதிநிதிகள்

கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் முதற் தடவையாக "தமிழர் மரபுரிமை மாதம்" தொடர்பாக உரையாற்றிய உறுப்பினர் கார்லோஸ் ஜே. லீடாவ் (ராபர்ட் பால்ட்வின் பாராளுமன்ற உறுப்பினர்) MNA Carlos Jleitao அவர்களை நேரடியாக பாராட்டி கௌரவித்த மொன்றியால் திருமுருகன் ஆலய பிரதிநிதிகள் தமிழ் மக்கள் சார்பில் தமது நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

கார்லோஸ் ஜே. லீடாவ் (ராபர்ட் பால்ட்வின் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள் அண்மையில் கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது மொன்றியால் வாழ் தமிழ் மக்களின் பெருமைகளையும் அவர்கள் கனடிய பிரதான நீரோட்டத்தில் எவ்வாறு நீண்ட காலமாக பங்கெடுத்து வருகின்றார்கள் என்பதையும் குறிப்பாக் மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலயத்தின் மகத்துவத்தையும் புகழ்ந்துரைத்துள்ளார்.

அவர் தனது உரையில் பின்வருமாறு தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. "தை பொங்கல் தமிழ் பாரம்பரியத்தின் பண்டிகையாகவும் அந்த பண்டிகை கொண்டாடப்படும் தை மாதம் (ஜனவரி) முக்கிய மாதமாகவும், திகழ்கின்றது.

தை பொங்கல் தமிழ் சமூகத்திற்கு மிகவும் முக்கியமான பாரம்பரிய விழாவாகவும் இருந்து வருகின்றது, ஏனெனில் ஏராளமான அறுவடைகளைக் கொண்டாடுவதன் மூலம், அவர் இறைவனுக்கும் இயற்கை கடவுளான சூரியனுக்கும் நன்றி செலுத்துகின்றார்கள்.

இது தமிழர்களின் மதிப்புகளான அமைதி, ஒற்றுமை மற்றும் இரக்கத்தை நன்கு பிரதிபலிக்கிறது. தமிழ் பாரம்பரிய மாதம் கியூபெக் மற்றும் கனடாவின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார கட்டமைப்பிற்கு இந்த ஆற்றல்மிக்க சமூகத்தின் பங்களிப்பைக் கொண்டாடுவதற்கான ஒரு வாய்ப்பாகும். தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கியூபெக் வாழ் மக்கள்.

அவர்களின் உள்ளடக்கம் மற்றும் சகிப்புத்தன்மை போன்றவை நமக்கு மிகவும் பிடித்தமானவை. அத்துடன் உலகளாவிய கலை கலாச்சார அரசியல் விவகாரங்களையும் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் போற்றி வருகின்றனர்.



நான் ராபர்ட் பால்ட்வின் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்வதன் மூலம் அருள்மிகு முருகன் கோவில் மற்றும் சைவ மிஷன் உறுப்பினர்களின் பங்களிப்பை நன்கு அறிவேன் கனடாவில் உள்ள கியூபெக்கில் உள்ள மொன்றியால் நகரில் உள்ள பெரிய தமிழர் சமூகத்தின் கட்டமைப்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நான் இந்த சபையில் எடுத்துரைக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

நீங்கள் எப்போதும் எனக்குக் காட்டிய அன்பான வரவேற்புக்கும் இந்த சமூகத்தின் உறுப்பினர்களுக்கும் எனது நன்றி" என அவர் கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மொன்றியால் நகரில் உள்ள அவரது அலுவலகத்திற்குச் சென்று (ராபர்ட் பால்ட்வின் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) கார்லோஸ் ஜே. லீடாவ் (MNA Carlos Jleitao) அவர்களை பாராட்டி மகிழ்ந்த வெஸ்ட் ஐலண்ட் தமிழ்க் கலாச்சார சங்கத்தின் பொருளாளரும் அருள்மிகு திருமுருகன் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ ஸ்ரீ ஐயா சங்கத்தின் தலைவர் நடராஜா வாகீசன் மற்றும் ஸ்ரீ மணிகண்டன் ஐயா ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு பொன்னடை போர்த்தி மாலை அணிவிப்பதை படத்தில் காணலாம்.

- செய்தி கணேஸ்

# கனடாவில் காலமான திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளை அவர்களின் 31ம் நாள் நினைவு நாளையொட்டி ஓமந்தையைச் சேர்ந்த பெண் தலைமைதாங்கும் குடும்பத்தின் நலன் கருதி பசுமாடு ஒன்று வழங்கப்பெற்றது



அண்மையில் கனடாவில் காலமான திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளை அவர்களின் 31ம் நாள் நினைவு நாளையொட்டி ஓமந்தையைச் சேர்ந்த பெண் தலைமைதாங்கும் குடும்பத்தின் நலன் கருதி பசுமாடு ஒன்று வழங்கப்பெற்றது இந்த வாழ்வாதார உதவியானது கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் கனடா வன்னிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி பசுமாட்டைப் பெற்றுக்கொண்ட பெண் தலைமை "தாங்கும் குடும்பத்தின் தலைவியான செ. சுமதி அவர்கள் கனடாவில் வசிக்கும் காலஞ்சென்ற திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளை அவர்களின் பிள்ளைகளுக்கு நன்றி தெரிவிக்கும் கடிதம் தனது கைபட எழுதியனார்.

இந்த மனித நேயப் பணியைச் செய்த அமரத்துவ மாது திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளை அவர்களின் கனடா வாழ் பிள்ளைகள் அனைவரையும் மற்றும் இந்த திட்டததின் மூலம் தனக்கு பசு மாடு கிடைக்க வழி செய்த கனடா யவன்னிச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் தலைவி செ. சுமதி நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த மனித நேயப் பணியில பங்கெடுத்த அனைவருக்கும் கனடாவில் இயங்கிவரும் "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" அமைப்பின் இயக்குனர் சபையினர் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.

Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD



HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting
Ntax
24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

# உக்ரைனில் இருந்து மேலும் 3 விமானங்களில் 25 தமிழக மாணவர்கள் உட்பட 450 இந்தியர்கள் நாடு திரும்பினர்




உக்ரைன் எல்லை நாடுகளிலிருந்து இன்று மேலும் மூன்று விமானங்களில் சுமார் 450 இந்தியர்கள் டெல்லி வந்தனர். இவர்களில் 25 தமிழக மாணவர்களும் அடங்குவர்.உக்ரைன் மீதானத் தாக்குதலை அதன் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ரஷ்யா இன்று தீவிரப்படுத்தி உள்ளது. இதன் காரணமாக, அந்த மூன்று பகுதிகளின் கல்வி நிலையங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் தங்கள் நாடுகளுக்கு திரும்பி வருகின்றனர். இவர்களில் இந்தியர்களை மத்திய அரசு, 'ஆப்ரேஷன் கங்கா' எனும் பெயரில் மீட்டு அழைத்து வருகிறது. உக்ரைனின் எல்லையில் உள்ள ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, போலாந்து, ருமேனியா மற்றும் மால்டோவா ஆகியவற்றிலிருந்து ஏர் இந்தியா விமானங்கள் மூலம் டெல்லி திரும்புகின்றனர்.

இந்த மீட்பு விமானங்கள் இன்று முதன் முறையாக அதிக அளவில் எட்டு என்ற அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் இன்று காலை வரை இரண்டு விமானங்கள் டெல்லி வந்தன. மேலும் மூன்று விமானங்கள் சுமார் 450 இந்தியர்களுடன் மதியம் வந்து சேர்ந்துள்ளன. இவற்றின் முதல் விமானத்தில் தமிழகத்தைச் சேர்ந்த இருவரும், இரண்டாவதில் ஒருவர் மற்றும் மூன்றாவதில் 22 மாணவர்களும் டெல்லி வந்துள்ளனர். இவர்களை டெல்லியிலுள்ள தமிழ்நாடு அரசு இல்ல அதிகாரிகள் வரவேற்று உபசரித்து தமிழகத்திற்கு விமானங்களில் அனுப்பி வைக்கின்றனர்.

தொடக்கத்தில் இந்த மாணவர்கள் அனைவருமே சென்னைக்கு நேராக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கிருந்து தமிழக அரசால் அமர்த்தப்பட்ட வாகனங்கள் மூலமாக இந்த மாணவர்கள் தம் வீடுகளுக்குச் சென்றனர். இதில் பிடிக்கும் கூடுதல் பயணநேரத்தை குறைக்கும் பொருட்டு தற்போது அவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு அருகிலுள்ள விமான நிலையங்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதன்படி, இன்று டெல்லி வந்த ஐந்து விமானங்களின் 53 தமிழக மாணவர்களும் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இதுவரையும் வந்த தமிழக மாணவர்கள் எண்ணிக்கை 143 ஆகும். மேலும், மூன்று விமானங்கள் இன்று உக்ரைனில் பயிலும் இந்தியர்களுடன் டெல்லிக்கு வருகை தரவுள்ளன.

# 'ஜெயலலிதா' பாணியில் மேயர் வேட்பாளர் தேர்வு? முதல்வர் ஸ்டாலினின் முடிவால் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் அதிர்ச்சி



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் மேயர் வேட்பாளர் தேர்வு நடத்தும் முதல்வர் ஸ்டாலினின் திடீர் முடிவால் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மாநகராட்சி மேயர் வேட்பாளரை, திமுக தலைவர் ஸ்டாலின் நேரடியாக முடிவு செய்வார் என்றும், மண்டலத் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மட்டும் மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதனால், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரைப் பட்டியலில் இல்லாதவர்களைக் கூட மேயர் வேட்பாளராக ஸ்டாலின் அறிவிக்கலாம் என்ற பரபரப்பு, திமுகவில் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் 21 மாநகராட்சிகளில் இன்று புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் பதவியேற்றுக் கொண்டனர். அனைத்து மாநகராட்சி மேயர், துணை மேயர் பதவிகளையும் திமுகவே கைப்பற்றும்நிலை ஏற்பட்டுள்ளது. அதில், சில மாநகராட்சிகளின் துணை மேயர், மண்டலத் தலைவர் பதவிகளை திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகள் கேட்கின்றன.

அவர்களுக்கு துணை மேயர், மண்டலத் தலைவர்கள் பதவி வழங்குவது பற்றி தற்போது வரை ஒரு முடிவுக்கு ஸ்டாலின் வரவில்லை என்று கூறப்படுகிறது.இதற்கிடையில், மேயர் வேட்பாளரை தேர்வு செய்ய அந்தந்த மாநகராட்சிகளுக்கு உட்பட்ட மாவட்ட செயலாளர்கள், அமைச்சர்களிடம் மேயர் வேட்பாளர் பரிந்துரைப் பட்டியல் கேட்கப்பட்டது. முன்பு இதுபோல், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி காலத்தில் பரிந்துரைப் பட்டியல் கேட்கப்பட்டு. அதில் இருந்து ஒருவர்தான் வேட்பாளராக தேர்வு செய்வது வழக்கமாக திமுகவில் கடைபிடிக்கப்பட்டு வந்தது. அதுபோல் தற்போதும் மாவட்டச் செயலாளர்களிடம் பரிந்துரைப் பட்டியல்கேட்கப்பட்டதால், அந்தப்பட்டியலில் இருந்துதான் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்கள் என திமுக மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள் நினைத்திருந்தனர். தற்போது திடீர் திருப்பமாக மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரைப் பட்டியலில் இடம்பெறாத கவுன்சிலர்களைக் கூட மேயராக்க ஸ்டாலின் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இளம் கவுன்சிலர்களுக்கு மேயர் வாய்ப்பு: இதுகுறித்து திமுகவினர் கூறுகையில், ''மேயர் வேட்பாளரை, பெரும் பொருளாதார பலம், அவர்கள் குடும்ப அரசியல் பின்னணி அடிப்படையில் தேர்வு செய்யாமல் இதுவரை பெரிய அறிமுகம் இல்லாத உளவுத்துறை போலீஸார் விசாரிப்பின்படி படித்த, குற்றப் பின்னணி இல்லாத இளம் கவுன்சிலர்களைக் கூட மேயராக்க ஸ்டாலின் திட்டமிட்டி ருப்பதாக கூறப்படுகிறது. அதனால், ஒரு சில மாநகராட்சிகளில் மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரைப் பட்டியலில் இடம்பெறாத கவுன்சிலர்கள் பெயரையும் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட பட்டியலில் சேர்த்து அவர்களை உளவுத்துறை போலீஸார் மூலம் விசாரிக்கும் பணி கடந்த 2 நாளாக சத்தமில்லாமல் நடக்கிறது.

மாநகராட்சி மண்டலத் தலைவர்களை மட்டும் தேர்வு செய்யும் அதிகாரத்தை அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கிவிட்டு மேயர் வேட்பாளரை ஸ்டாலினே நேரடியாக தேர்வு செய்ய உள்ளதாக கட்சி மேலிடம் கூறியிருக்கிறது. அதனால், ஜெயலலிதா பாணியில் திமுகவிலும் வெற்றி பெற்ற கவுன்சிலர்களில் யாரை வேண்டுமென்றாலும் ஸ்டாலின் மாநகராட்சி மேயர் வேட்பாளராக அறிவிக்கலாம்'' என்று அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் திருநங்கையை மங்கையாக அங்கீகரித்து குடும்பத்தினர் நடத்திய மஞ்சள் நீராட்டு

விருத்தாசலத்தில் திருநங்கை ஒருவரை மங்கையாக அங்கீகரித்து, அவரது குடும்பத்தினரே மஞ் சள் நீராட்டு விழா கொண்டாடியுள்ளனர்.பதின்ம வயதில் தாங்கள் மூன்றாம் பாலினம் என அறிந்த நபர்கள் பெரும்பாலானோர், தங்கள் குடும்பத்தை விட்டு விலகி, மூத்த திருநங்கைளிடம் தஞ்சமடைவதை வாடிக்கையாக கொண் டுள்ளனர்.

அந்த திருநங்கைகள் தங்கள் குடும்ப விவரத்தைக் கூட யாரிடமும் தெரிவிப்பதில்லை. அதேபோன்று திருநங்கையின் குடும்பத்தாரும், அந்தநபர் குறித்த எந்த தகவலையும் யாருக் கும் தெரிவிப்பதில்லை. தற்போது ஏற்பட்டு வரும் விழிப்புணர்வால், திருநங்கைகளுக்கான குடும்ப அங்கீகாரம் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. அந்த வகையில், திருநங்கை ஒருவரை மங்கையாக அங்கீகரித்து அவரின் குடும்பத்தினரே முன்நின்று மஞ் சள் நீராட்டு விழாவை நடத்தியுள்ளனர்.

விருத்தாசலம் இந்திராநகரில் வசிக் கும் கொளஞ்சிஅமுதா தம்பதியி னரின் மகன் நிஷாந்த் (21). இவரது தந்தை விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சுமை தூக்கும்



தொழிலாளியாகவும், தாய் விருத்தாசலம் நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு பணியாளராகவும் பணிபுரிந்து வரு கின்றனர்.நிஷாந்த் டிப்ளமோ கேட்டரிங் முடித்துள்ளார். தன் உடலின் பாலியல் செயல்பாடுகள் மாற, தான் ஒரு திருநங்கை என்பதை அவர் உணர்ந்துள்ளார். வீட்டை விட்டு வெளியேறி திருநங்கைகளிடம் தஞ்சமடைய, பின் தனது பெயரை நிஷா என மாற்றிக் கொண்டார்.நிஷாவின் உணர்வுக்கு மதிப்பளித்து, உயிரியல் யதார்த்தை உணர்ந்த அவரது பெற்றோர் நிஷாவை வீட்டுக்கு அழைத்தனர். பின்னர் அவருக்கு பாலியல் மாற்று அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது.

தற்போது முழுமையான திருநங்கையாக நிஷா மாறியுள்ளார்.அவருக்கு நேற்று மஞ்சள் நீராட்டு விழா நடத்தி அவரை மங்கையாக அவரது பெற்றோர் அங்கீகரித்துள்ளனர். இந்த நிகழ்வில் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர். நிஷாவுடன் பயின்ற பள்ளி நண்பர்கள் என பலரும் கலந்து கொண்டு அவருக்கு வாழ்த்து தெரிவித்து, விருந்து உபசரிப்பில் பங்கேற் றனர்.பொதுவாக ஒரு நபர் சிகிச்சை மூலம் திருநங்கையாக மாறிய பின், மூத்த திருநங்கைகளின் இருப்பிடத்திற்குச் சென்று அங்கு ஐக்கியமாகி விடுவது வழக்கம்.அவ்வாறு ஐக்கியமாகும் நபருக்கு மூத்த திருநங்கைகள், மஞ் சள் நீராட்டு விழா நடத்தி, அவரை பெண்ணாக அங்கீகரிப்பதுண்டு.

இந்நிகழ்வை முதன்முறையாக ஒரு திருநங்கையின் குடும்பத்தினரே செய்தி ருப்பது குறிப் பிடத்தக்கது.இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற சமூக ஆர்வலர்கள், முதன்முறையாக திருநங்கை ஒருவரை அங்கீகரித்து, அவருக்கு அவரது குடும்பத்தினரே விழா நடத்தியிருப்பது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தனர்.


# தமிழக வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றுங்கள்: ஸ்டாலினுக்கு மோடி பிறந்தநாள் வாழ்த்து



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பிரதமர் மோடி தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு '' தமிழக வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றுங்கள்'' என்று பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இன்று பிறந்தநாள். அவர் தனது 69வது பிறந்தநாளை குடும்பத்தினருடன் கேக் வெட்டி கொண்டாடினார். மேலும் பெரியார், அண்ணா மற்றும் கருணாநிதி நினைவிடங்களுக்குச் சென்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்புகொண்ட, பிரதமர் நரேந்திர மோடியை தமது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, "தமிழகத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்'' என்று தமது விருப்பத்தைத் தெரிவித்தார். தமிழக முதல்வர், "தங்களின் ஒத்துழைப்புடன் நான் தொடர்ந்து தமிழகத்தின் வளர்ச்சிக்காக உழைப்பேன்'' என உறுதியளித்தார்.

உலக செய்திகள் World News

# உக்ரைன் – ரஷ்யா போரில் இந்தியாவின் நவீன் சேகரப்பா என்ற மாணவர் பரிதாபமாக உயிரிழந்தார்




தற்போது உக்கிரமாக நடைபெறும் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போரில் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த நவீன் சேகரப்பா என்ற மாணவர் பரிதாபமாக உயிரிழந்த செய்தி இந்தியா எங்கும் பரவியுள்ளதால் அங்கு கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் பெற்றோர் மிகுந்த கவலையடைந்துள்ளனர். அத்துடன் இந்த மாணவரின் பெற்றோருக்கு தொலைப்பேசி வாயிலாக இந்தியப் பிரதமர் மோடி ஆறுதல் கூறியுள்ளார்.

உக்ரைனின் முக்கிய நகரமான கார்கீவ் பகுதியில் உள்ள அரசு கட்டடங்களை குறி வைத்து ரஷ்யா ஏவுகணைகள் தாக்குதல் நடத்தி வந்தது. அப்போது அத்தியாவசிய பொருட்கள் வாங்க வெளியில் சென்றபோது, ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் எம்.பி.பி.எஸ் படித்து வந்த 21 வயதான மாணவர் நவீன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உக்ரைனில் 6-வது நாளாக ரஷ்ய படைகள் உக்கிரமாக தாக்குதல் நடத்தி வந்தன. அந்த வகையில், உக்ரைனில் உள்ள தெற்கு பிராந்தியத்தில் உள்ள கெர்சன் நகருக்குள் ரஷ்ய படைகள் நுழைந்துள்ளன. உக்ரைனில் உள்ள மரியபோல் நகரில் ரஷ்யா ராணுவ படைகளுக்கும், உக்ரைன் ராணுவ படைகளுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

இரு நாட்டு ராணுவ படைகளுக்கும் பலத்த சண்டை நடந்து வருவதால் அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.



# ரஷ்யாவை யுத்தநிறுத்த நிலைக்கு கொண்டு வருவதே உலகின் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பு

யுத்தம் நீடிப்பதால் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள்தான் இலாபமடையுமேயொழிய மக்கள் அல்ல. எனவே உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ரஷ்யாவை யுத்தநிறுத்த நிலைக்கும் சமாதான வழிக்கும் கொண்டு வருவதே உலகின் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும். இருந்தும் இப்போர் உருவாவதைத் தவிர்க்கத் தவறிய உலகம் இனியாவது விரைவாக செயற்பட்டு உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவும் சமாதான வழிக்கு இரு தரப்பையும் கொண்டு வரவும் முயற்சிக்க வேண்டும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து மனிதநேயர்களதும் எதிர்பார்ப்பாகும்.

யாரும் எதிர்பார்த்திராத வேளையில் ரஷ்யா பெரும் எடுப்பில் உக்ரைன் மீது கடந்த வியாழக்கிழமை படையெடுப்பை ஆரம்பித்தது. ஆகாயம், கடல் மற்றும் தரை வழி ஊடாக முடுக்கி விடப்பட்டுள்ள இப்போரினால் முதல் நாள் தொடக்கம் கடும் சேதங்களுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றது உக்ரைன். இந்நிலையில் உக்ரைன் மீதான போர் சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன், சோவியத் ரஷ்யாவில் இருந்து 1991இல் பிரிந்து தனிநாடுகளான நாடுகளில் ஒன்றாகும். ரஷ்யாவுக்கு அடுத்த பெரிய நாடு இது. 41 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டின் வடக்கில் பெலாரஸும், மேற்கில் போலந்து, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி ஆகிய நாடுகளும், தெற்கில் மோல்டோவாவும், ருமேனியாவும் கிழக்கிலும் வடகிழக்கிலும் ரஷ்யாவும் எல்லை நாடுகளாக அமைந்திருக்கின்றன. இந்நாடு ரஷ்யாவில் இருந்து பிரிந்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஆனால் மொழி, கலாசார அடையாளங்கள் என்பவற்றில் உக்ரைனின் சில பிரதேசங்கள் ரஷ்யாவுடன் ஒத்துப்போகின்றன. அதனால் உக்ரைனைத் தன்னுடைய அங்கமாக ரஷ்யா கருதுகிறது. ஆனால் அந்நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்திடவே விரும்புகின்றனர்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்திலும், நேட்டோ அமைப்பிலும் இணைவதற்கான முயற்சிகளை உக்ரைன் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் அளித்து வரும் ஊக்குவிப்புகளும் உசுப்பேற்றல்களும் காரணமாக உள்ளன.

ஆனால் உக்ரைனின் இந்நடவடிக்கைகளையும் நேட்டோவில் இணையும் முயற்சியையும் ரஷ்யா விரும்பவில்லை. அதனை ரஷ்யா பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியது. இருந்தும் அவற்றை உக்ரைன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மேற்குலக நாடுகளின் ஊக்குவிப்பு வார்த்தைகள் அந்தளவுக்கு உக்ரைனின் கண்களை மறைத்தன.

இந்நிலையில் உக்ரைய்னின் ஒரு பகுதியான கிரீமியாவை 2014இல் ரஷ்யா தனதாக்கிக் கொண்டது. இருந்தும் கூட உக்ரைன் தன் செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பக்கம் சாயவும், நேட்டோவில் இணையவும் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. குறிப்பாக 2021-2022 - நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் தீவிரம் காட்டத் தொடங்கியது. இதற்கு உக்ரைனின் தற்போதைய ஜனாதிபதி வொலொடிமிர் ஜெலன்ஸ்கி மேற்குலக சார்பு மனப்பான்மையைக் கொண்டவராக இருப்பது இதற்குப் பெரிதும் உதவியது. இந்நடவடிக்கைகளுக்கும் ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் நம்பி ரஷ்யாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் உக்ரைன் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது.

ஆனால் ரஷ்யா தமக்கு அருகிலுள்ள நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இருந்து நேட்டோ படைகளை திரும்பிப் பெறுமாறு 1997இன் பின்னர் கோரத் தொடங்கியது. அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள் அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றன.

ரஷ்யா உலகில் ஒரு பலம் மிக்க அணுவாயுத வல்லரசாக இருப்பதையும் கருத்தில் கொள்ளாது உக்ரைன் தனது நகர்வுகளை முன்னெடுத்தது. இதற்கு அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளதும் வார்த்தைகள் பக்கபலமாக அமைந்தன.

இந்த நிலையில் உக்ரைனின் எல்லைப் பிரதேசங்களில் கடந்த டிசம்பராகும் போது தனது படைகளை ரஷ்யா குவிக்கத் தொடங்கியது. ஆனாலும் இது உக்ரைய்ன் மீது படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை அல்ல என்று ரஷ்யா தரப்பில் பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டது. ஆனால் உக்ரைன் மீது ரஷ்யப் போர் ஆரம்பமானதும் கூடிய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய உக்ரைன் தூதர் செர்கி கிஸ்லிட்ஸியா, ரஷ்ய தூதர் நெபன்ஸியாவை நோக்கி இவ்வாறு குறிப்பிட்டார்.



“உக்ரைன் மீது படையெடுப்பு நடக்காது என்று இதே அரங்கில் எத்தனை முறை கூறியிருப்பீர்கள். ஆனால், இன்று என்ன நடக்கிறது? நாஜிப் படைகள் போல் தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வார்த்தைகள் மதிப்பற்றவை” என்றார் உக்ரைன் தூதுவர்.

அதேநேரம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், உக்ரைன் மீதான போருக்கான உத்தரவை விடுத்ததும் உக்ரைன் ஜனாதிபதி உடனடியாக ரஷ்ய அதிபருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் அதற்கு அவர் பதிலளிக்கவில்லை.

இந்நிலையில், தாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் எனப் பகிரங்கமாக அறிவித்த உக்ரைன் ஜனாதிபதி, தம் நேச ஐரோப்பிய நாடுகளோடும் ஏனைய நாடுகளோடும் நேரடியாக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி யுத்தத்தை நிறுத்துவதற்கான உதவிகளைக் கோரினார். ஆனால் அவற்றை ரஷ்யா கண்டு கொள்ளாது போரை ஆரம்பித்து முன்னெடுத்து வருக்கின்றது.

இந்த நிலையில் ரஷ்யா முன்னெடுத்திருக்கும் இப்போரை முடிவுக்குக் கொண்டு வர உலக நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களில் உதவி கேட்டு அபயக்குரல் எழுப்பினார். ஆனால் அவர் இணைய முயற்சித்த நேட்டோவோ, ஐரோப்பிய ஒன்றியமோ நேரடியாக உதவ முன்வரவில்லை. “நீங்கள் எங்கள் உறுப்பு நாடு இல்லை” எனக் கூறி உதவ மறுத்து விட்டன. அமெரிக்க ஜனாதிபதி ஜே பைடன் “உக்ரைய்ன் நேட்டோ உறுப்பு நாடு இல்லை. அதனால் நேட்டோ படைகளை அனுப்ப முடியாது” எனப் பகிரங்கமாகக் கூறினார். இதே போன்ற அறிவிப்பை நேட்டோ அமைப்பும் விடுத்தது.



உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, யாரை நம்பி ரஷ்யாவை ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டாரோ அவர்கள் எவரும் உதவிக்கு முன்வராத நிலையில் “ரஷ்யாவுக்கு எதிராக நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம். எங்களுடன் நின்று போரிட யாருமில்லை. எங்களுக்கு நேட்டோ பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய யாரும் முன்வரவில்லை. எல்லோருக்கும் பயம்” என்று உருக்கமாகத் தெரிவித்தார்.

இதேவேளை உக்ரைனின் இந்தியாவுக்கான தூதுவர், ரஷ்ய ஜனாதிபதியுடன் பேசி உக்ரைன் மீதான யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்யுமாறு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்தார். அதற்கேற்ப இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ரஷ்ய ஜனாதிபதியுடன் பேசினார். ஆனால் ஆக்கபூர்வமான பதிலை ரஷ்யா அளிக்கவில்லை.


இதேவேளை இப்போர் ஆரம்பமானதும் போப்பாண்டவர் பிரான்சிஸ், ரோமிலுள்ள ரஷ்ய தூரதரகத்திற்கு நேரில் சென்று உக்ரைய்ன் மீதான போரை நிறுத்தி சமாதான வழிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டார். அது ஒரு முன்மாதிரி மிக்க நடவடிக்கையாகும். யுத்தம் இரத்தம் சிந்துதலுக்கும், மனித அழிவுகளுக்கும் மாத்திரமல்லாமல் சேதங்களுக்குமே வழிவகுக்கும். அதனால் யுத்தத்தை நிறுத்திடவும் அனைத்து விடயங்களுக்கும் சமாதான வழிகளில் தீர்வுகளைத் தேடவுமே ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அதுவே தார்மீகமானது. அந்த வகையில் போப்பாண்டவரின் நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆனால் உக்ரைன் நம்பி நின்ற எந்தவொரு நாடும் இவ்வாறான நடவடிக்கையை முனனெடுக்கவில்லை. ரஷ்யாவை சமாதான வழிக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் தவறிவிட்டன. அதனால் உக்ரைய்ன் ஜனாதிபதி மற்றொரு சந்தர்ப்பத்தில் உரையாற்றும் போது, “ரஷ்யாவின் முதல் இலக்கு நானே. இரண்டாவது எனது குடும்பம். நானும் எனது குடும்பத்தினரும் இன்னும் தலைநகரில் தான் இருக்கிறோம். ரஷ்யப் படைகளின் இலக்கு நாங்கள்தான் என்று தெரிந்தும் இங்கேயே இருக்கிறோம்” என்றும் உருக்கமாகக் குறிப்பிட்டார். மேலுமொரு சந்தரப்பத்தில் உரையற்றும் போது “உலகம் என்னைப் பார்க்கும் இறுதி சந்தர்ப்பமாக இது இருக்கும்” என்று கூட கூறினார்.

ஆனால் உக்ரைன் நம்பி நின்ற நாடுகள் ரஷ்யாவுக்கு கோபமூட்டும் செயற்பாடுகளிலும் இக்கோர யுத்தத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றும் வகையிலுமே செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன. ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிப்பதால் ரஷ்யா உடனடியாக யுத்தத்தை நிறுத்தி விடும் என எதிர்பார்க்க முடியாது. பொருளாதாரத் தடையின் தாக்கம் உடனடியாக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் என எதிர்பார்க்கவும் முடியாது. அதேநேரம் உக்ரைனுக்கு ஆயுத ரீதியாக உதவுவதாலோ ஆயுதக் கொள்வனவுக்கு நிதி வழங்குவதாலோ ரஷ்யா யுத்தத்தை நிறுத்தி விடும் என எதிர்பார்க்கவும் முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளின் விளைவாக பேரழிவு யுத்தம் தொடரும். இரத்தம் சிந்துதலும் அழிவுகளும் நீடித்துக் கொண்டிருக்கும்.

# ஐநாவுக்குக் கடிதம் எழுதும் கட்சிகள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஐநா மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது. வழமைபோல தமிழ்க் கட்சிகள் ஐநாவுக்கு தனியாகவும் கூட்டாகவும் கடிதங்களை அனுப்பியுள்ளன.

கூட்டமைப்பு தனியாக ஒரு கடிதம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு கடிதம், ஐந்து கட்சிகளின் கூட்டு தனியாக ஒரு கடிதம், என்று மூன்று முக்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன.

இதில் சம்பந்தர் கையெழுத்திட்ட கடிதம் எனைய கட்சிகள் எல்லாவற்றுக்கும் முதலில் அனுப்பப்பட்டுவிட்டது. அக்கடிதம் ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது. ஆனால் கடந்த திங்கட்கிழமை 5 கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றன. அக்கடிதத்தில் ஒரு பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் காணப்படுகிறது. கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எவையும் கிடையாது.

ஆனால் மேற்கண்ட கடிதத்தை அனுப்பிய ஐந்து கட்சிகளில் மூன்று இப்பொழுதும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கின்றன. கடந்த செப்டம்பர் மாத ஐநா கூட்டத்தொடரை முன்னிட்டும் அவை இவ்வாறு ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பின. அக்கடிதத்தை வரையும் முயற்சிகளை தொடக்கத்தில் ஆதரித்த மாவை சேனாதிராஜா கடைசி வேளையில் அதில் கையெழுத்து வைப்பதை தவிர்த்து விட்டார். அதேசமயம் ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சிக்காக காத்துக் கொண்டிராமல் ஒரு கடிதத்தை கூட்டாக அனுப்பி வைத்தன. அது அப்பொழுது ஒரு சர்ச்சையாக எழுந்தது. கூட்டமைப்பு இரண்டாக உடையப் போகிறதா என்ற கேள்விகளையும் எழுப்பியது. எனினும் சம்பந்தர் நிலைமைகளை ஒருவாறு சமாளித்து கூட்டமைப்பை பாதுகாத்தார். இப்பொழுது மறுபடியும் அதே பிரச்சினை. முன்பு நடந்தது போலவே இந்த முறையும் மாவை சேனாதிராஜா கடிதத்தை வரையும் முயற்சிகளில் கடைசிவரை ஒத்துழைத்ததாக தெரியவருகிறது. ஆனால், அவர் கடிதத்தில் கையெழுத்திடவில்லை.

அதேசமயம் சம்பந்தர் கூட்டமைப்பின் சார்பாக ஒரு கடிதத்தை தயாரித்தபோது அதில் பங்காளி கட்சிகளின் பங்களிப்பை கேட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. முதல் வரைபை வரைந்த பின் அதை பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் அனுப்பி அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு இறுதிவரைபை தயாரித்து ஐநாவுக்கும் அனுப்புவது என்று சம்பந்தர் சிந்தித்ததாக கூறப்படுகிறது. ஆனால் பங்காளிக் கட்சிகளைக் கேட்டால் அவர்கள் வேறு விதமாக கூறுகிறார்கள். தமிழரசுக்கட்சி ஒரு கடிதத்தை வரைந்து அதில் சம்பந்தர் கையெழுத்திட்ட பின் அதனை ஏனைய பங்காளிக் கட்சிகளின் பார்வைக்கு அனுப்பியதாகவும், கடிதத்தின் முதல் வரைவை தம்மிடம் அனுப்பி அபிப்பிராயம் எதுவும் கேட்கப்படவில்லை என்றும் பங்காளிக் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரே கூட்டுக்குள் இருந்து இருவேறு கடிதங்கள் அனுப்பப்படுவது என்பது கூட்டமைப்பு ஒரு இறுக்கமான கூட்டாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடயத்திலும் முதலில் ஒத்துழைக்காத தமிழரசுக் கட்சி கடைசிக் கட்டத்தில் ஒத்துழைத்தது. ஆனால் ஒன்றாகக் கடிதம் எழுதிவிட்டு தனியாக சம்பந்தரும் சுமந்திரனும் இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்திருக்கிறார்கள். மேலும், ஒரு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்போடு இணைந்து தமிழரசுக் கட்சி தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. இது தவிர பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து போராட்டத்தை தமிழரசுக் கட்சி தனியாக முன்னெடுக்கின்றது.

அதாவது ஒரே கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தனியாக ஓடுகிறது. ஏனைய கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த கட்சிகளோடு இணைந்து வேறு ஒரு தனி கூட்டம் ஓடுகின்றன. அதேசமயம் கூட்டமைப்பு என்ற பெயரிலும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது? கூட்டமைப்பின் தலைமை இறுக்கமாக இல்லை என்பதைத்தானே? பங்காளிக் கட்சிகள் தனி ஓட்டம் ஓடும் போது அதனை தடுத்து கூட்டமைப்பின் கட்டுக்கோப்பைப் பேண ஏன் சம்பந்தரால் முடியவில்லை?

அவர் உடல் ரீதியாக மற்றவர்களில் தங்கியிருக்கும் ஒருவராக மாறிவிட்டார். கூட்டமைப்பு அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதைத்தான் கடந்த ஓராண்டுக்கு மேலான நிலைமை நமக்கு உணர்த்துகிறது. தலைமை இருக்கத்தக்கதாக ஏனைய முக்கியஸ்தர்கள் கருத்துக் கூறுவதும், தலைமைக்கு எதிராக பகிரங்கமாக கருத்துக் கூறுவதும், பங்காளிக் கட்சிகள் வெளியில் உள்ள கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டுக்குப் போவதும், கடிதங்களை அனுப்புவதும் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன.

ஆம் தமிழ் மக்களுடைய அரசியலில் அண்மைக்காலமாக ஏற்படும் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் ஸ்திரமற்ற தலைமைத்துவம்தான். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதவராக காணப்படுகிறார். அதேபோல மூத்த கட்சியும் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க முடியாதவராகத் தெரிகிறார். கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விக்குப் பின் தன்னை மீளக் கட்டியெழுப்ப முடியாத ஒருவராகவே தொடர்ந்தும் காணப்படுகிறார். குறிப்பாக கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிகழும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை சேனாதிராஜாவின் இயலாமையும் வழுவழுத்த தன்மையும் வெளிப்படக் காணலாம். கூட்டமைப்புக்கு வெளியே நிகழும் ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை உறுதியான முடிவுகளை எடுக்கவில்லை. ஒன்றில் தமிழரசுக் கட்சியை தனியாகப் பலப்படுத்துவது என்று முடிவெடுக்க வேண்டும். அல்லது ஐந்து கட்சிகளோடு இணைந்து அக்கூட்டைப் பலப்படுத்த வேண்டும். அவர் இரண்டையுமே செய்யவில்லை.

ஆனால் அதற்காக ஐந்து கட்சிகளின் கூட்டோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ கூட்டமைப்புக்கு மாற்றாக பலமடைந்து வருவதாக இக் கட்டுரை கருதவில்லை. ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள் இணைத் தலைவர்கள் உண்டு. ஆனால் அது உருகிப் பிணைந்த ஒரு பலமான கூட்டாகத் தெரியவில்லை. அதுபோலவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தன்னை ஒரு பிரதான கட்சியாக வளர்த்தெடுக்கும் வழிவரைபடத்தை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அக்கட்சி எப்பொழுதும் பிரதான நீரோட்டத்திற்கு எதிராக எதிர்ப்பு அரசியலை செய்யும் ஒரு கட்சியாகத்தான் தொடர்ந்தும் காணப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயிக்கும் ஒரு மிகப் பலமான கட்சியாக வளர வேண்டும் என்ற வழி வரைபடம் அக்கட்சியிடம் இருக்கிறதா?

தேர்தல் மைய அரசியலில் அவ்வாறு சிந்திப்பது என்றால் இரண்டு வழிகள்தான் உண்டு. முதலாவது வழி, இருக்கிற கட்சிகள் சிதையும் பொழுது அவற்றை சேர்த்துக்கட்டி ஒரு பெரும் கட்சியாக உருவெடுப்பது. இரண்டாவது வழி ஒரு மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்பி அம்மக்கள் இயக்கத்தால் வழிநடத்தப்படும் ஒரு தேர்தல் மைய அரசியலை முன்னெடுப்பது. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த இரண்டு வழிகளிலும் முன்னேறத் தேவையான வழி வரைபடத்தை கொண்டிருப்பதாக தெரியவில்லை. ஏனைய கட்சிகள் காலப்போக்கில் சிதைந்து போக தான் படிப்படியாக பலமடையலாம் என்று அக்கட்சி நம்புகின்றதா?

கடந்த நாடாளுமன்ற தேர்தலையொட்டி கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு அணியை பலப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களுக்கு அது நன்கு தெரியும். ஒரு மாற்று அணியை அப்பொழுது மிகப் பலமாக கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அவ்வாறு ஒரு மாற்று அணி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் ஒரு பலமான அணியாக கட்டியெழுப்பப்பட்டு இருந்திருந்தால் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெருமளவுக்கு தோற்கடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. கூட்டமைப்பு இழந்த ஆறு ஆசனங்களில் மூன்றைத்தான் மாற்று அணி பெற்றது. ஏனைய மூன்றும் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளிடம் சென்றன. இவ்வாறு வாக்குகள் சிதறியதற்கு பிரதான காரணம் மாற்று அணி ஒரு பலமான கூட்டாகத் திரட்சியுறாமைதான்.

எனவே இப்பொழுது படம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. கூட்டமைப்பின் தலைமையும் பலமாக இல்லை, தமிழரசுக் கட்சியின் தலைமையும் பலமாக இல்லை, ஐந்து கட்சிகளின் கூட்டும் உருகிப்பிணைந்த ஐக்கியமாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி நிலைமைகளை வெற்றிகரமாக கையாண்டு தன்னை ஒரு பெரும் கட்சியாக வளர்த்துக்கொள்ளும் என்று நம்பத்தக்கதாக கடந்த 10 ஆண்டுகளும் அமையவில்லை.

இது மிகப் பலவீனமான ஒரு நிலைமை. கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் தொடர்ந்து நீடித்தால் மிகக்குறிப்பாக சம்பந்தர் முழுமையாகத் தலைமை தாங்க முடியாத ஒரு நிலைமை தோன்றினால் கூட்டமைப்பு சிதையக் கூடிய வாய்ப்புகளே அதிகமாக தெரிகின்றன. தமிழரசுக் கட்சி தனியாகவும் ஏனைய கட்சிகள் ஐந்து கட்சிகளின் கூட்டாகவும் செயற்படக்கூடிய வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றன. அதாவது அரங்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகள் எவையும் தமிழ் மக்களை இப்போதைக்கு ஒரு தேசமாக திரட்டப்போவதில்லை என்று பொருள்.

### வீணாவின் கவிக்கணை

உழைக்கும் ஒருவனுக்கு
கிடைக்கும் ஊதியம்,
குறைவாகும் பட்சத்தில்
அவன் குடும்பத்தில்
தலைதூக்குகிறது வறுமை,
அதுபோல ஒருவன்
வாங்கும் ஊதியத்தை
தாண்டி செலவினை
கூட்டுவது ஆடம்பரம்,
வறுமையின் கொடுமையும்,
ஆடம்பரத்தின் ஆராவாரமும்,
ஒன்றல்ல என்பதறியாமல்
இவ்வுலகமே இங்கு
உறங்கிக்கிடப்பதும் ஏனோ?
துயில் கலைந்து யோசித்தால்
போதும், அவர் நிலைமாறி,
கடன் தீர்ந்து, சுகம் கொண்டு
வாழும் வழி காண்பர் என்பதுறுதி!

# Canada's, Century 21 Innovative Realty Inc. Celebrated it's 12th Annual Awards Gala last Saturday in Scarborough

# கனடா Century 21 Innovative Realty Inc. வீடு விற்பனை முகவர் நிறுவனம் சிறப்பபாக நடத்திய 12வது ஆண்டு வெற்றியாளர் விருதுகள் வழங்கும் வைபவம்



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் Century 21 Innovative Realty Inc. வீடு விற்பனை முகவர் நிறுவனம் கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள அழகிய மண்டபம் ஒன்றில் தனது 12வது ஆண்டு வெற்றியாளர் விருதுகள் வழங்கும் வைபவத்தை சிறப்பபாக நடத்தியது.

நிறுவனத்தின் ஸ்தாபகரும் பொறியியுலாளரும். வீடு விற்பனை முகவருமாக சமீம் மொகமட் அவர்கள் தனது நிறுவனத்தின் பங்காளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரோடு இணைந்து விருது வழங்கும் நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்து நிறைவு செய்தார்.




































விருதுகள் வழங்கும் விழாவில் கனடா உதயன். ரூபம் இணைய ஊடகம் மற்றும் பல ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கு அழைக்கப்பெற்றிருந்தனர்.

இவ்வருடத்திற்குரிய அதி உயர் விற்பனை விருதுகளைத் தட்டிக் கொண்ட முதல் பத்து வெற்றியாளர்களில் தமிழ் பேசும் விற்பனை முகவர்களான திருவாளர் அருள் சிவசுப்பிரமணியம் மற்றும் யூட் ஞானேந்திரன் ஆகியோரும் அடங்கியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் பல முகவர்களின் பிள்ளைகளுக்கு பல்கலைக் கழக புலம் பரிசுத் தொகையும் வழங்கப்பெற்றன.

இந்தியா செய்திகள்
India News

# போட்டோவுக்கு போஸ் கொடுப்பதில் திமுக கவுன்சிலர்களிடையே மோதல்



போட்டோவுக்கு போஸ் கொடுப்பதில் திமுக கவுன்சிலர்களுக்கு இடையே நடந்த மோதல் திருச்சி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. போலி-யோ சொட்டுமருந்து முகாம்கள் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. திருச்சி பெரிய மிளகுபாறை பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் சொட்டு மருந்து முகாமை ஆட்சியர் சிவராசு துவக்கி வைத்தார்.

அப்போது மிளகுபாறை பகுதியைச் சேர்ந்த 54 வது வார்டு திமுக கவுன்சிலர் புஷ்பராஜ் பங்கேற்று ஆட்சியருடன் நின்று போட்டோவுக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் கருமண்டபம் பகுதியைச் சேர்ந்த 55 வது வார்டு திமுக கவுன்சிலர் ராமதாசும் ஆட்சியர் பங்கேற்ற நிகழ்வில் பங்கேற்றார். அவர் ஆட்சியருக்கு பின்னால் நின்று போஸ் கொடுத்துக்கொண்டிருந்தார். ஆட்சியர் சென்ற பின்னர், என் வார்டுக்கு நீ எப்படி வரலாம் என்று புஷ்பராஜ் கேட்டபோது, அதற்கு சரியாக பதில் சொல்லாமல் நகர்ந்தார் ராமதாஸ். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. எனக்கு முன்பாக நீ எப்படி முந்திக்கொண்டு போஸ் கொடுக்கலாம் என்று ராமதாஸ் இருவருக்குமிடையில் வாக்குவாதம் முற்றி இருதரப்பு ஆதரவாளர்களும் தகராறில் ஈடுபட்டனர்.

இதை பார்த்து பதறிப்போன போலீசார் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். ஆனாலும் அவரது ஆதரவாளர்களால் அப்பகுதியில் பதற்றம் நிலவியதால் போலீஸார் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

# சிறந்த முதலமைச்சர் யார் என்பதில் ஸ்டாலினுக்கும் பிரனாய் விஜயனுக்கும் போட்டி நிலவுகிறது என்கிறார நடிகர் சத்தியராஜ்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எழுதியுள்ள "உங்களில் ஒருவன்" சுயசரிதை நூலை ராகுல்காந்தி வெளியிட்டார். சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முதல்வரின் உங்களில் ஒருவன் புத்தகத்தை ராகுல் காந்தி வெளியிட, துரை முருகன் பெற்றுக்கொண்டார். ராகுல் காந்தி, உமர் அப்துல்லா மற்றும் பினராயி விஜயன், தேஜஸ்வி யாதவ்,கவிஞர் வைரமுத்து, நாசர், சத்யராஜ் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய சத்யராஜ், பல நினைவுகளை பகிர்ந்துகொண்டார். அதில், "எனது ஆங்கிலம் சற்று மோசம்தான். ஆனாலும் நான் கொஞ்சம் ஆங்கிலத்தில் பேசுகிறேன். அது ராகுல்காந்திக்காக. ராகுலை நான் வரவேற்கிறேன். அவர் நம்முடைய தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார். ஒரு சிங்கத்தைப்போல அவர் குரல் கொடுத்தார். நாம் மனிதனாக இருக்க வேண்டுமென்றால் நமக்குள் மனிதநேயம் இருக்க வேண்டும். அதற்கு நாம் பெரியார் மற்றும் கார்ல் மார்க்ஸ் புத்தகங்களை படித்திருக்க வேண்டும். திராவிட முறைப்படி ராகுலை தம்பி என்று அழைக்கிறேன். சமூக நீதியும், பொருளாதார நீதியும் இணைந்ததே திராவிட மாடல். 4 வருடத்துக்கு முன் கேரளா சென்றபோது சிறந்த முதலமைச்சர் பினராயி என்றேன். எங்களுக்கு அப்படி ஒரு முதலமைச்சர் கிடைக்கவில்லை என்றேன். அப்படியென்றால் பினராயியை தமிழ்நாட்டுக்கு கூட்டிச் செல்லுங்கள் என்றனர். நான் கூட்டிச் சென்றால் உங்களுக்கு நல்ல முதலமைச்சர் கிடைக்காமல் போவார்கள் என்றேன். இப்போது தேவையில்லை மு.க ஸ்டாலின் இருக்கிறார். பினராயி விஜயன், மு.க.ஸ்டாலின் இடையே யார் சிறந்த முதலமைச்சர் என்று போட்டி நடைபெறுகிறது" என்றார்.

சினிமா

# ரஜினி அடுத்து நடிக்கவிருக்கும் படத்தில் இணைகிறார் வடிவேலு

தலைவர் 169 திரைப்படத்தில் நடிகர் வடிவேலு நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அண்ணாத்த திரைப்படத்தின் வெற்றியை தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த் அடுத்ததாக இயக்குனர் நெல்சன் திலீப் குமார் இயக்கத்தில் 169 திரைப்படத்தில் நடிக்கவுள்ளார்.

இந்த திரைப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பதாகவும் இசையமைப்பாளர் அனிருத் ரவிச்சந்தர் இசையமைப்பாளராகவும் முன்னதாக அறிவிப்பு வெளியானது. இந்த அறிவிப்பை தொடர்ந்து படத்தில் நடிக்கும் நடிகர்கள் குறித்து அவ்வப்போது சமூகக வலைதளத்தில் செய்திகள் கசிந்து கொண்டு வருகிறது. அந்த வகையில் தற்போது கிடைத்த தகவலின் படி தலைவர் 169 திரைப்படத்தில் நடிகர் வடிவேலு நடிக்க உள்ளதாக தகவல்கள் பரவி வருகிறது.

நீண்ட ஆண்டுகளாக படங்களில் நடிக்காமல் இருந்த வடிவேலு தற்போது சுராஜ் இயக்கத்தில் நாய் சேகர் ரிட்டன்ஸ் என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். இதனைத் தொடர்ந்து சில படங்களிலும் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த நிலையில், தற்போது ரஜினியின் 169-வது படத்தில் வடிவேலு நடிப்பதாக பரவும் செய்தியால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். ஏற்கனவே ரஜினியின் வள்ளி, குசேலன், முத்து, சந்திரமுகி ஆகிய திரைப்படங்களில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# கோவிட் -19 மதிப்பீட்டு மையம்

New!

## மருத்துவ மதிப்பீட்டு மையத்திற்கு யார் செல்ல வேண்டும்?

உங்களுக்கு **COVID-19** இருப்பது தெரிந்தாலோ அல்லது சந்தேகப்பட்டாலோ மருத்துவ மதிப்பீட்டை பதிவு செய்ய வேண்டும்.

- உங்கள்முதன்மை பராமரிப்பு வழங்குநர் அல்லது பிற சுகாதாரப் பாதுகாப்புநிபுணரால் இயக்கப்பட்டது; அல்லது
- வீட்டில்உங்கள் அறிகுறிகளை பாதுகாப்பாக கண்காணிக்க முடியவில்லை; அல்லது
- கடுமையானநோய்களின் அதிக ஆபத்தில் உள்ளன, இதில் அடங்கும்:
  - தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல் **18** வயது மற்றும் அதற்குமேல் உள்ள நோயெதிர்ப்பு குறைபாடுள்ளநபர்கள்
  - **60** வயது மற்றும் அதற்குமேல் தடுப்பூசி போடப்படாத நபர்கள்
  - **50** மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தடுப்பூசி போடப்படாத நபர்கள் **(From First Nation, Inuit and Métis** சமூக )
  - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆபத்து காரணிகளைக் கொண்ட **50** வயது மற்றும் அதற்குமேற்பட்ட தடுப்பூசி போடப்படாத நபர்கள்.
- பின்வரும்அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால், நீங்கள் உடனடியாக **911**ஐ அழைக்கவும் அல்லதுஅவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லவும்:
  - சுவாசிப்பதில் கடுமையான சிரமம் (ஒவ்வொரு மூச்சுக்கும் போராடி, ஒற்றை வார்த்தைகளில் மட்டுமே பேச முடியும்)
  - கடுமையான மார்பு வலி (நிலையான இறுக்கம் அல்லது நசுக்கும் உணர்வு)
  - நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதில் குழப்பம் அல்லது நிச்சயமற்ற உணர்வு
  - சுயநினைவை இழப்பது

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
https://www.picktime.com/assessmentcentre
**Absolutely No Walk-ins**

SCAN ME

**105 Gibson Centre**
**105 Gibson Drive., Markham, ON L3R 3K7 (Warden & Gibson)**

ஒவ்வொரு புதன் கிழமையும் (ஆலோசனைக்கு மருத்துவர் கிடைக்கும்) — **10:00 a.m. - 2:30 p.m.**

**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., Scarborough, ON M1V 0G2 (Midland & McNicoll)**

ஒவ்வொரு வியாழன் (ஆலோசனைக்கு மருத்துவர் கிடைக்கும்) — **9:30 a.m. - 2:30 p.m.**

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**

Carefirst Family Health Team
105 Gibson Centre

Updated on February 14, 2022

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**


OPEN HOUSE
Saturday & Sunday
2 - 4 pm
111 Park Place Dr. Markham
Ontario, L6E 1Z5
4+2 Bedrooms fully detached, newly updated house in heart of the markham.
Floor to ceiling kitchen cabinets
New Roof
Newly updated bathrooms, light fixtures
$1,219.900.00
CENTURY 21
PEOPLE'S CHOICE REALTY INC. BROKERAGE
Cell: (416)-818-5493
uthayan.markandu@gmail.com
uthayan4realestate.com
UTHAYAN MARKANDU
Real Estate Broker


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON
CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்
கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'
நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.
கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.
சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
இலங்கைச் சிறப்பிதழில்
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.
தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com


புத்தி கெட்ட மனிதர் எல்லாம்
WRITTEN & DIRECTED BY
RAJ SIVARAJ
கனடா வாழ் ரசிகர்களுக்காக
யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம்
யாழ் திரையரங்குகளில் வெற்றி நடை போட்ட 'எங்கட படம்'
எழுத்தும் இயக்கமும்: ராஜ் சிவராஜ்
Scarborough NETWYN அரங்கில்
Netwyn.Place
10 Thornmount Drive
M1B 3J4 (Morningside-Sheppard சந்திக்கு அருகில்)
ஏப்ரல் 9ம் திகதி மூன்று காட்சிகளாக:
பிற்பகல் 2:00 மணி - VIP காட்சி
மாலை 4.00 மணி மற்றும்
மாலை 6.00 மணி காட்சிகள்
அனுமதி:
4:00 மணி
6:00 மணி காட்சிகளுக்கு
$10 மட்டுமே
தொடர்புகளுக்கு: (416) 732-1608 | (647) 770-7482 | (416) 669-6437


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160

# இயற்கையின் பாதுகாவலர்களாக விளங்கும் விலங்குகளை அழிக்கும் "கொலையாளிகளை அரசாங்கங்கள் தண்டிக்கத் தவறுகின்றன

உலக வனசீவராசிகள் தினம் மார்ச் 3ம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகில் பல ஆண்டுகளாக மனிதர்களால் அச்சுறுத்தலுக்கும் தங்கள் உயிர்களை இழப்பதற்கும் உள்ளாகியுள்ள வனசீவராசி இனங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும், அவற்றின் சுற்றாடல் பின்னணியை பேணும் நோக்கிலும் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் "நாம் தமிழர் கட்சி"யின் ஸ்தாபகரும் தலைவருமான "செந்தமிழன் சீமான்" அவர்களது ஒவ்வொரு பேச்சிலும் வசனத்திலும் இந்த வன விலங்குகளின் அற்புதமான வாழ்க்கையையும் அவற்றால் மனித குலத்திற்கு

*அழைப்பிதழ்...*

உதயன், நண்பன், ரூபம் ஆகிய கனடிய ஊடகங்கள் இணைந்து சென்னை மாநகரில் நடத்தும்

**பகிர்வோம்.. பாராட்டுவோம்..**


(சந்திப்பு நிகழ்ச்சி)

இடம்: QUALITY INN - SABARARI GRAND
29 Thirumalai Road
T.Nagar, Chennai 6000 917
காலம்: 12-03- 2022 - 6.30 PM

சந்திப்பு, உரையாடல், கௌரவிப்பு, இராப்போசன விருந்து..




இங்ஙனம்: ஆர். என். லோகேந்திரலிங்கம்
சங்கர் சிவநாதன்




எவ்வாறான பாதுகாப்பும் வளங்களும் நன்மைகளும் கிடைககின்றன என்பதை அழகாகக் கூறிவருகின்றார். ஆனால் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இன்னும் பல நாடுகளிலும் சமூக விரோதிகள் வன விலங்குகளை அழித்து பொருள் சம்பாதிக்க முயலுகின்றனர். அத்துடன் இயற்கையின் பாதுகாவலர்களாக விளங்கும் விலங்குகளை அழிக்கும் "கொலையாளிகளாக" விளங்குகின்றனர்.

இன்றைய சூழலில் தோலுக்காக புலிகள், இறைச்சிக்காக மான்கள், தந்தத்திற்காக யானைகள் என மனிதனால் விலங்கள் வேட்டையாடப்படுகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில் விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை உணரும் வகையில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அச்சுறுத்தலுக்குள்ளாகும் வனஜீவராசிகள் தொடர்பான உடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்டு, 40 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு, 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி பேங்கொக் நகரில் இடம்பெற்ற விசேட மாநாட்டில் இந்தத் தினம் முதன் முறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 68ஆவது அமர்வில் இந்த விடயம் தொடர்பான தினம் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 2014ஆம் ஆண்டிலிருந்து அருகிவரும் வனவிலங்குகள் மற்றும், தாவர இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாக ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 3ஆம் திகதி உலக வனசீவராசிகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உயிர் சூழலியலை கட்டமைப்பதில் விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு மிகப் பெரிய பங்களிப்பு உண்டு. நிலையான வளர்ச்சியை நோக்கிய மரபு ரீதியான மாற்றங்கள், சமூக பொருளாதார மாற்றங்கள், கல்வி மற்றும் மனிதர்களின் நலனுக்கான நடவடிக்கைகள் போன்றவற்றுக்கும் அவை உறுதுணையாக இருக்கின்றன.

வனங்களில் உள்ள மிக அழகான பல்வேறு உயிரினங்களை கொண்டாடுவதற்கு இது உகந்த நாளாக இருக்கிறது. வன விலங்குகளையும், தாவரங்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் இந்த நாள் மூலமாக ஏற்படுத்தப்படுகிறது.

வனவிலங்குகள் மற்றும் தாவரங்களில் ஏறத்தாழ 8,000 வகைகள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளன. ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரினங்கள் அழிந்து கொண்டு வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. ஒரு மில்லியன் உயிரினங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்டன. ஐ.நா. அமைப்பு கடைப்பிடிக்கும் வறுமை ஒழிப்பு, நில வளங்களை பாதுகாப்பது மற்றும் நீடித்த வகையில் பயன்படுத்திக் கொள்வது போன்ற முயற்சிகளைப் போலவே, அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களை காப்பதற்கும் ஐ.நா. அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

உயிர்ச் சூழலியலுக்கு மிகவும் இன்றியமையாத உயிரினங்களாக இருப்பவற்றை முன்னுரிமை அடிப்படையில் பாதுகாக்க வேண்டும் என்பதே உலக வனவிலங்கு தினத்தின் பிரதான நோக்கம் ஆகும். அழியும் நிலையில் உள்ள வனவிலங்குகள் மற்றும் தாவரங்களைக் கண்டறிந்து, அவற்றை பாதுகாப்பதற்கான செயல்திட்டம் உருவாக்குவது இந்த நாளின் நோக்கம் ஆகும்.

இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் வனவிலங்கு மற்றும் தாவரங்களை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலியலை மேம்படுத்தவும், மனிதர்களின் நீடித்த தேவைகளுக்கு அவற்றை பயன்படுத்திக் கொள்ளவும் உதவிகரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பொதுமக்கள் தங்களால் முடிந்த வகையில் வனங்களை காக்க இந்த நாளில் உறுதியேற்றுக் கொள்ளலாம். குறிப்பாக, சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் பொருட்களின் பயன்பாட்டை குறைத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் வேலியாக விளங்கும் காடுகளையும், விலங்குகளையும் காப்பது குடிமக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை. மனித நடவடிக்கைகளின்மூலம் விலங்குகளும் செடிகளும் பாதிக்கப்படுகின்றன. தற்போது இருக்கும் உயிரினங்களில் சுமார் 25 வீதம் எதிர்வரும் ஆண்டுகளில் அழிந்துபோகும் ஆபத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மனிதர்களால் சட்டவிரோதமாக பல வனஉயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. இவை தடுக்கப்பட வேண்டும். காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பது நம்முடைய ஒவ்வொருவரின் கடமையாகும்.


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோ
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ரொரன்ரோ-கனடா நடத்திய மகாஜனன் இளைஞர் போட்டி - 2022

மகாஜெனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ரொரன்ரோ, 2006 ஆம் ஆண்டு முதல், நமது தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் கணிதம், பொது அறிவு மற்றும் தமிழ் ஆகிய பாடங்களில் மகாஜனன் இளைஞர் போட்டியை நடத்தி வருகின்றது. இந்த ஆண்டு மகாஜனன் இளைஞர் போட்டி ஞாயிற்றுக்கிழமை பிப்ரவரி 27, 2022 அன்று டொராண்டோ மற்றும் மொண்ட்ரீலில் நடத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டுக்கான மஹாஜனன் இளைஞர் போட்டியின் புகைப்படங்களை சில இங்கே காணப்படுகின்றர். இந்த ஆண்டு 250-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.














BLESSING HANDS MISSION | BATTICALOA, SRI LANKA

## VOCATIONAL TRAINING CENTRE
## OPENING CEREMONY

MARCH 30, 2022 | 4:00PM (IST), 5:30AM (EST)

*Mylampavaly, Batticaloa, Sri Lanka*



### BLESSING HANDS MISSION WAS ESTABLISHED BY TORONTO HARVEST MISSIONARY CHURCH IN 2000, IN SRI LANKA.

Blessing Hands Mission is an organization founded by Pastor Vincent Sahayanathan and the Church in Toronto, Canada, to support the nation of Sri Lanka and its civilians through evangelical and charitable work.

Within the last decade, THMC established Blessing Hands Mission, and commenced the building of a Vocational Training Centre in Mylampavaly, Batticaloa, Sri Lanka. The aim of the Training Centre is to be a grounds upon which youth across the nation will be trained to do outreach work. Students will spend six months at the Centre where they will learn the keys to mission work. They are to take the skills equipped from the Centre and travel into the 38, 000 villages across Sri Lanka and provide help and support to people in broken homes and families, victims of abuse, the drug and alcohol dependent, and kids who have no access to education. These trained students will ultimately go out to work towards restoring hope and productivity for people in villages that currently lack opportunities to thrive. This program will run year-round, and young people who are sought out in villages will be given the opportunity to register at the Vocational Training Centre for further recovery and a chance to help others who were once lost like them, towards a path of rehabilitation.

We stand at the near completion of the non-profitable project placed in our hearts. Our mission goal is that this Training Center raises a generation who desires to serve the nation and propel its thrive. We would like to extend our invitation to you all, to participate and be involved in the grand opening of a program and Centre that will be a great blessing to the nation of Sri Lanka.




CONTACT: PASTOR VINCENT SAHAYANATHAN (416) 275-3087, (416) 289 3662, (416) 438 5200
DONATE AT: DONATE@THMC.NET

# நவ காலனித்துவ அடிமைகளின் கண்ணீர் கதை – படங்களில்



2019ஆம் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஹொலிரூட் மற்றும் லோகி பெருந்தோட்டத்திலும், பதுளை மாவட்டத்தில் ஊவா ஹைலண்ட் மற்றும் அட்டாம்பிட்டிய பெருந்தோட்டத்திலும் உள்ள இளைஞர் யுவதிகள் 40 பேரை தெரிவுசெய்து, சுமார் ஓராண்டு காலம் சில செயலமர்வுகள் ஊடாக புகைப்படபிடிப்பு பற்றிய அறிவையும் கலை மற்றும் சமூக அரசியல் அறிவையும், சமூக மாற்றுத்திற்கான கலையைப் பயன்படுத்துவது பற்றிய அறிவையும் பெற்றுக்கொண்டு அவர்களுடைய சமூக வாழ்வு அவர்களாலேயே கமராவில் பதிவு செய்யப்பட்டது.இது ஒரு ஆய்வு ரீதியான நிகழ்ச்சி திட்டமாகும். சமூக அறிவினை இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கி அவர்களுடைய வாழ்க்கையில் யதார்த்தத்தை ஆய்வு செய்தல் இதன் மூலம் இடம் பெறுகின்றது. மலையகம் தொடர்பாக பல கலைஞர்கள் பல படைப்புகளில் பல விடயங்களை கூறியுள்ளனர். உதாரணமாக சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், குறுந்திரைப்படங்கள் போன்ற கலைகளை பயன்படுத்தி மலையக சமூக முறைகளை வெளிகொண்டு வந்துள்ளனர் ஆனால் மலையக வரலாற்றின் முதன் முறையாக மலையக புகைப்பட கலைஞர்களாகிய இந்த இளைஞர் யுவதிகளின் தேயிலை சாயம் புகைப்பட கண்காட்சியின் மூலம் மலையக மக்களின் உண்மையான வாழ்க்கை முறையை வெளிக்காட்டினர். இந்த நான்கு வருட பயணத்தில் இந்த இளைஞர் யுவதிகள் சமூகம் தொடர்பாகவும் சமூக பிரச்சனைகள் தொடர்பாக பாரிய ஆய்வில் ஈடுப்பட்டே இந்த புகைப்பட கண்காட்சிகள் செய்யப்பட்டது. இந்த புகைப்பட கண்காட்சியில் இளைஞர் யுவதிகளின் 45000 புகைப்படங்களில்









இருந்து 100 புகைப்படங்கள் கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டது. இதில் மலையக மக்களின் வாழ்க்கை முறை, உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம் மற்றும் கலாச்சாரம் தொடர்பான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த புகைப்பட கண்காட்சி தலவாக்கலை, ஊவா ஹைலண்ட, பதுளை, கண்டி, கொழும்பு, யாழ்பாணம், மட்டகளப்பு மற்றும் கொட்டகலை ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்டது. கொட்டகையில் நடைப்பெற்ற புகைப்பட கண்காட்சிக்கு ஆறு நாடுகளில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களும், ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



மேலும் இந்த செயற்திட்டத்திற்கு SRP, GIZ, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), ஊவா சக்தி மற்றும் சுயசக்தி ஆகிய நிறுவனங்களின் அனுசரனை வழங்கியுள்ளது. எமது செயல்திட்டத்தின் எதிர்கால நோக்கம் மலையக சமூகத்தின் பிரச்சனைகளை மாத்திரமின்றி ஏனைய சமூகங்களின் பிரச்சனைகளையும் புகைப்படங்களின் மூலம் வெளிக்கொண்டு வருவதாகும்.

# உக்ரைன் போரால் பங்குசந்தையில் நஷ்டமடைந்த மதுரை தம்பதியினர் தற்கொலை



மதுரை பழைய குயவர்பாளையம் பகுதியைச் சேர்ந்த நாகராஜன் என்ற 46 வயது நபருக்கு மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். இவர் பங்கு சந்தையில் லட்சக்கணக்கில் முதலீடு செய்திருக்கிறார். பங்குச் சந்தை குறித்த அனைத்து விபரங்களையும் தெரிந்து வைத்துள்ள இவர் ஆலோசகராகவும் திகழ்ந்து வந்துள்ளார். அவருக்கு நல்ல லாபம் கிடைத்து வந்த நிலையில், மிகவும் வசதியாக நாகராஜன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்துள்ளார்.

உக்ரைன் நாட்டில் நடக்கும் போர் காரணமாக தற்போது பங்கு சந்தையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து மீண்டு வர முடியுமா என்ற மன உளைச்சலில் நாகராஜன் இருந்து வந்த நிலையில், நாகராஜன் தனது மனைவியுடன் சேர்ந்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். மனைவியின் சகோதரி பல முறை தொலைபேசி அழைப்பு செய்தும் எடுக்காததால் வீட்டிற்கு வந்து கதவை திறந்த பொழுது திறக்க முடியவில்லை. பின், ஜன்னல் வழியாக எட்டி பார்த்த பொழுது இருவரும் பிணமாக தொங்கியுள்ளனது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது உறவினர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# விபத்தில் சிக்கிய பிரபலங்களின் செய்தி தொடர்பாளர் ரியாஸ் – பாசத்துடன் ட்வீட் போட்ட மகள் பரஸ் ரியாஸ்



தனக்கு எப்போதும் அட்வைஸ் செய்யும் தந்தை, இன்று அவரே விபத்தில் காயமடைந்திருப்பதை பார்த்து பாசத்துடன் மகள் ட்வீட் போட்டுள்ளார். அதை அவரின் தந்தையும், சினிமா பிரபலங்களின் பிஆர்ஓ., வுமான ரியாஸ் லைக் செய்துள்ளார். கோலிவுட்டில் ரஜினி, விஜய் உள்ளிட்ட பல பிரபலங்களுக்கும் பிஆர்ஓ வாக இருப்பவர் ரியாஸ். இவர் விபத்து ஒன்றில் சிக்கி காயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் ரியாசிற்கு காலில் காயம் ஏற்பட்டு, கட்டுப் போட்டுள்ளார். இந்த போட்டோக்களை ரியாசின் மகள் பரஸ் ரியாஸ் ட்விரில் பகிர்ந்துள்ளார். அதோடு, சாலையில் வேகமாக வாகனம் ஓட்டக் கூடாது என அப்பா எப்போதும் எனக்கு அட்வைஸ் செய்து கொண்டே இருப்பார். அதனால் நான் மிகவும் கவனமாக இருப்பேன். வேகமாகவும் வாகனத்தை ஓட்ட மாட்டேன். ஆனால் அது இன்று அவருக்கே நடந்துள்ளது. நல்லவேளையாக இன்று மாலை நடந்த விபத்தில் அப்பாவிற்கு ஒன்றும் ஆகவில்லை. லேசான காயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.

தயவு செய்து நீங்கள் ஹெல்மெட் அணியுங்கள். பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டுங்கள் எனவும் மற்றவர்களை பரஸ் ரியாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். பரஸ் ரியாசின் இந்த ட்வீட்டை பார்த்து விட்டு, ரியாஸ் விரைவில் குணமடைய வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அதோடு, தொடர்ந்து வாகனத்தை கவனமாக ஓட்டும் படி பரஸ் ரியாசிற்கும் அட்வைஸ் செய்து வருகின்றனர். பிஆர்ஓ.,க்கள் கர்நாடக ரஜினி ரசிகர்கள் மன்றத்தினர் உள்ளிட்ட பலரும் ரியாஸ் விரைவில் குணமடைய வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அவர்களுக்கு பரஸ் ரியாசும் நன்றி தெரிவித்து வருகிறார்.

# மாற்றுத் திறனாளியாக நடிக்கும் சூர்யா



பாலா மற்றும் சூர்யா கூட்டணியில் வெளியான நந்தா, பிதாமகன் படங்கள் சூப்பர் ஹிட்டாக அமைந்தன. மீண்டும் பாலா இயக்கத்தில் சூர்யா நடிக்க இருக்கும் புதிய படத்தின் அறிவிப்பு சில மாதங்களுக்கு முன்பு வெளியானது. இந்த படத்தை சூர்யாவின் 2டி என்டர்டைன்மெண்ட் நிறுவனமே தயாரிக்கிறது.

கிராம வாழ்வியலை கதைக்களமாக இப்படம் கொண்டுள்ளதாகவும், இந்தப்படத்தில் சூர்யா காது கேட்காத, வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளி கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. நீண்ட நாட்களுக்கு பிறகு இணையும் சூர்யா - பாலா கூட்டணியின் இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் மதுரையில் தொடங்க படக்குழு திட்டமிட்டுள்ளனர்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 988



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் (பருத்தித்துறை சிவன் கோயில்)

புலோலி பர்வதவர்த்தினி சமேதபசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியாகிய பசுபதீஸ்வரர், சிவனின் அறுபத்திநான்கு பேதங்களுள் குறிப்பிடத்தக்கவர். இத்திருவுருவம் யோகநிலையினை நினைவூட்டுவதாகக் காணப்படுகின்றது. சிந்துநாகரிகம் வரலாற்றுச் சிறப்புடையது. தொன்மைமிகக் கொண்ட இந்நாகரிகத்திலே சைவசமயம் மிக உயர்ந்த நிலையிலே காணப்பட்டாக, சேர் ஜோண் மார்சல், மக்கே போன்ற ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்களுள் பசுபதி வடிவமும் ஒன்று. இவ்வடிவம் மிருகங்களால் சூழப்பட்டநிலையிலே காணப்படுகின்றது. இவ்வாறான யோகவடிவிலான திருவுருவங்கள் சிந்து வெளியிலே கண்டெக்கப்பட்டமை, இப்பிரதேசத்திலே சைவசமயம் வேரூன்றி இருந்தது என்பதை சுட்டுகின்றது.

மூன்று நிலைகளிலே, பதி கடவுளையும், பசு ஆன்மாவையும் குறிக்கின்றது. பசுவாகிய ஆன்மா இறைவனை அடைய மூன்றாவது நிலையாகிய மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்பதற்கமைய, ஆன்மாவும், கடவுளும் ஒன்றென்ற அமைப்பில், பசுபதீஸ்வரர் திருவுருவம் போற்றப்படுகின்றது. இவ்வாறான தொன்மையான திருவுருவத்தை மூலமூர்த்தியாக அமைக்கும்படி வாக்கு அருளிய சுவாமிகள் சிறந்த சித்தர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய திருவுருவத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயங்கள் அருமையாகவே காணப்படுகின்றன.

சுவாமிகள் வாக்கிற்கமைய சிவாலயமாகக் கட்டப்பட்ட இவ்வாலயத்திலே, மூல மூர்த்திகளாக பர்வதவர்தனி சமேத பசுபதீஸ்வரர் காணப்படுகின்றார். இக்கோயிலின் தலவிருட்சமாக, ஆரம்பகாலத்தில் சுவாமிகள் தங்கியதாகக் கருதப்படும் கொன்றைமரம் போற்றப்படுகின்றது. இவ்வாலயம் அகன்ற மூன்று வீதிகளைக் கொண்டதாக விளங்குகின்றது. இங்கு தினமும் திருப்பள்ளி எழுச்சி, உஷத்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஆறுகாலப்பூசைகளும் நடைபெறுவது வழக்கம்.

இவ்வாலயத்தின் மகோற்சவம், அம்பாளுக்கும், சிவனுக்கும் வேறு வேறு திதிகளிலே ஆரம்பமாகி நடைபெறும். சிவனின் வருடாந்த உற்சவம், ஆனி உத்தரத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும். அம்பாளின் வருடாந்த மகோற்சவம், ஆடிப்பூரத்தை இறுதிநாளாகக் கொண்டு பத்துநாட்கள் நடைபெறும். வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழாவின்போது, கட்டுத் தேரே உலாவருகின்றது. இவற்றோடு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும், மாமாங்கத் தீர்த்த உற்சவம் மிகவும் சிறப்பானது. மாமாங்கத்தீர்த்த தினத்திலே பர்வவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர், பருத்துறைக் கடற்பகுதிக்கு எழுந்தருளி, அங்கு விசேட தீர்த்தம் இடம் பெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் விசேடபூசைகள், திருவிழாக்கள் போன்ற திருநாட்களில், தேவாரம் பாடுவதற்கென்று ஓதுவார்கள் காணப்படுகின்றனர். ஆலயத்தின் அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் பூமாலை கட்டும் வேலைகளை குறிப்பிட்ட ஒரு பரம்பரையினர் நீண்ட காலமாகச் செய்து வருகின்றனர். சமயப்பணிகளோடு சமூகத்திற்குகந்த பல்வேறு பணிகளை ஆலயங்கள் செய்ய வேண்டும். இதற்கமைவாக இங்கு அம்பாள் பெயரில் அமைக்கப்பட்டுள்ள பர்வதவர்த்தினி கலாமண்டபத்திலே திருமண வைபவங்கள், சமூக, கலை கலாச்சார நிகழ்வுகள் மற்றும் அன்னதானத் திருப்பணிகள் என்பன சிறப்பாக நடைபெறுவதுண்டு. அத்தோடு கொடுக்கக் கொடுக்கக் குறையாத அறிவுச் செல்வத்தை வழங்கும் வகையில், பிரத்தியே நூல் நிலையம் ஒன்றும் ஆலயம் சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திலே சமயம் மற்றும் பல்துறை சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன. இவ்வாலயம் ஆரமம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பல தடவைகள் திருப்பணிவேலைகள் நடைபெற்று கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. 2005 ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் உள்வீதிகள் புனரமைக்கப்பட்டதோடு, மணிக்கூட்டுக் கோபுரமும் நிறுவப்பட்டது.

இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு, பரம்பரையாக தனிநபர் ஒருவரின் பரிபாலனத்திலேயே இயங்குகின்றது. ஆயினும் இப்பிரதேசத்திலே வாழும் மக்கள் சிவன்மீது கொண்ட ஆராத பக்தியினால், வயற்காணிகளை மானியமாகக் வழங்கியதோடு, மடங்களைக் கட்டவும் உதவியுள்ளனர். இவ்வாறு வழங்கப்பட்ட வயற்காணிகளிலிருந்து பெறப்படும் அரிசியைக் கொண்டே, இவ்வாலயத்திற்குரிய அமுது செய்யப்படுகின்றது. இவ்வூர் மக்கள் இவ்வாலய முன்னேற்றத்தில் கொண்ட அக்கறையினால், ஆலயத்திற்குரிய சுவாமி எழுந்தருளுவதற்குரிய, வாகனங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

ஆகமமுறைப்படி எழுப்பப்பட்ட இக்கோயிலின் திருவூஞ்சல் பாடல்களை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பாடியிருப்பதிலிருந்து, இக்கோயிலின் பெருமை புலப்படுகின்றது. பலதுறைகளிலும் புகழ்பெற்றவராக விளங்கிய திரு. வீரமணி ஐயர் அவர்கள், பசுபதீஸ்வரர்மீது பல பாடல்களைப் பாடிப் போற்றியுள்ளார். இவ்வாலயத்தின்மீது பண்டிதர் வித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்களால், புலோலி பதிற்றுப் பத்ததந்தாதி பாடப்பட்டுள்ளது. அவ்வாறே திருமதி.ச. பத்மாசனி அம்மாள் அவர்கள், புலோலி பதசுபதீஷ்வரர் பதிற்றுப் பத்தந்தாதியும், திருவாளர். சிவசம்பப் புலவர் அவர்களால் முத்துக்குமாரசாமி திருவூஞ்சலும் பாடப்பட்டுள்ளன.

புலோலி என்னும் பெயர் புலவர் - ஒலி என்ற கருத்தாழம் மிக்கதாகக் காணப்படுவதற்கமைய, இப்பிரதேசத்திலே சான்றோர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், புலவர்களும், கவிஞர்களும் தோன்றி, இவ்வூரை அறிவுவுளத்ததால் செழிக்கச் செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளால் இவ்வூர் புலவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான பெருமைகள் பல கொண்ட புலோலியில் எழுந்தருளி, பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் அருள்பாலித்து வருகின்றார்.

தொடரும்...



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# என் ஜீவப்ரியே ஷ்யாமளா

**- குரு அரவிந்தன்**

**சி**யாமளா அம்மாளின் பாட்டைக் கேட்ட நாளில் இருந்து அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனதில் துளிர்விட்டிருந்தது. கணீரென்ற அந்தக் குரல் என்னை எங்கோ இழுத்துச் சென்றது. ஈழமண்ணில் பிறந்து, ஜேர்மனிக்குப் பெற்றோர் புலம் பெயர்ந்ததால் ஜேர்மனியில் தான் நான் வளர்ந்தேன். படிப்பிலே கவனம் செலுத்தினாலும், ஓய்வு நேரங்களில் பாட்டுக் கேட்பது, அதைப்போலப் பாடிப்பார்ப்பது, சினிமா படங்கள் பார்ப்பது என்று என் வாழ்க்கை சந்தோஷமாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

முன்புபோல் அல்லாமல், இப்போதெல்லாம் தொழில் நுட்பவளர்ச்சியால் எல்லாமே உடனுக்குடன் கிடைக்கக்கூடியதாக இருப்பது, எங்கள் தலைமுறைக்குக் கிடைத்த அதிஸ்டம் என்றுதான் சொல்லவேண்டும். வீடு தேடியே சீடி, டீவீடி என்று சொல்லப்படுகின்ற குறும்தட்டு, காண்தட்டு என்று எல்லாம் ஒழுங்காக வரும். விரும்பிய நேரம் போட்டுக் கேட்கலாம், பார்க்கலாம் என்று எத்தனையோ வசதிகள் இருந்தன. இதைவிட இதற்கென்றே சில இணையத் தளங்களும் இருந்தன.

அப்பாவிற்கு பழைய பாடல்கள் என்றால் நல்ல விருப்பம். நான் சொல்வது சிவாஜி, எம்ஜிஆர் காலத்துப்பாடல்கள் அல்ல, அதையும்விட பழையது. கிராமபோன் காலத்துப் பாடல்கள். அப்போ, அவர்களது இளமைக் காலத்தில் இப்படியான வசதிகள் எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

அப்பா தன்னை மறந்து அடிக்கடி தனக்குள் முணுமுணுக்கும் ஒரு பாடல் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதுண்டு. தெருக்கூத்தோ, அல்லது நாட்டுப் பாடலோ என்றுதான் நான் முதலில் நினைத்தேன். "என் ஜீவப்ரியே ஷ்யாமளா" என்ற வார்த்தைகள், அது ஒரு சினிமா பாடல் என்று பின்புதான் எனக்குத் தெரிய வந்தது. அப்பா அடிக்கடி பாடியதாலோ என்னவே என்னுடைய மனசுக்குள்ளும் அந்தப்பாடல் வரிகள் சின்ன வயதிலேயே என்னையறியாமல் பதிந்து விட்டது.

அம்மாவுடைய பெயர் அது இல்லை என்று எனக்குத் தெரியும், அப்பா இந்தப் பாடலை எப்போதாவது முணுமுணுக்கும் போதெல்லாம், "ம்.. தொடங்கி விட்டார்!" என்று அம்மா அலுத்துக் கொள்வதும் தெரியும்.

"இந்த ஷ்யாமளா யார்?" ஒருவேளை அப்பாவின் முன்னாள் காதலியாக இருந்திருப்பாளோ, அதுதான் அம்மா அசட்டை செய்கிறாளோ என்று கூட நினைத்தேன்.

அம்மாவிடம் இதைப்பற்றிக் கேட்டேன் "அவர் ஒரு சினிமா பைத்தியம், அதுதான்" என்று அம்மா மொட்டையாகப் பதில் சொன்னாள்.

கொஞ்சம் வளர்ந்து உலகம் பிடிபடத் தொடங்கியபோது, ஒருநாள் பொறுக்க முடியாமல் "யாரப்பா இந்த சியாமளா" என்று அப்பாவிடமே கேட்டுவிட்டேன்.

"ஏன் இந்த சந்தேகம்?" என்பது போல அப்பா என்னைப் பார்த்தார்.

"இல்லையப்பா இந்தப் பாட்டை அடிக்கடி பாடுறீங்களே அதுதான் யார் இந்த ஷியாமளா" என்றேன்.

அப்பா சிரித்துவிட்டுச் சொன்னார், "இதுவா இது அந்தக் காலத்து பழைய சினிமாப் பாட்டு. என்னுடைய அப்பா நல்லகுரலில் பாடுவார், அதைப்பற்றிக் கதை கதையாச் சொல்லுவார். அந்தக்காலத்து இளைஞர்களைக் கவர்ந்த பாட்டாம். அந்தக் காலத்தில் நடிகர்களே பாடியும் நடிக்க வேண்டுமாம். உன்னோட தாத்தா இந்தப்பாட்டை தோட்டத்தில தண்ணீர் இறைக்கும் போது, துலா மிதிக்கும் போது எல்லாம் உரக்கப் படிப்பார். நான் தண்ணீர் கட்டிக் கொண்டிருப்பேன், காற்றிலே மிதந்து வந்து செவிக்குள் புகுந்து கொள்ளும், அதனால் களைப்பே தெரியாது, அதனால்தான் என்னுடைய மனசிலும் இந்தப்பாட்டுப் பதிந்து விட்டது" என்றார்.

மூன்று தலை முறையாக அந்தப் பாடல் எங்கள் குடும்பத்தில் தங்கியிருந்திருக்கிறது என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அது மட்டுமல்லல பழைய பாடல்களில், அந்த இசையில் எங்களுக்குப் பரம்பரைத் தொடர்போல, ஆர்வமும் இருந்திருக்கிறது என்பதும் எனக்குப் புரிந்தது.

அதனால்தான் "ஞானப்பழத்தை பிழிந்து" என்ற அந்தப் பாடலைக் கேட்டதில் இருந்து, அந்தக் கணீரென்ற குரலுக்கு உரியவரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, குறும்தட்டு விற்பனை நிலையத்தில் சென்று விசாரித்தேன். அவர் என்னை மேலும் கீழும் பார்த்தார்.

"படத்தில் தான் பார்க்கலாம்!" என்று சொல்லிவிட்டு, எங்கேயோ தேடி ஒரு பழைய குறும் தட்டைக் கொண்டுவந்து காட்டினார்.

"ஒருத்தரும் இப்ப வாங்கிறதில்லை. உங்களுடைய அதிஸ்டம் ஒன்று கிடைச்சுது" என்றார்.

அவர் தந்த குறுந்தட்டை வாங்கிப் பார்த்தேன். கவரிலே கே.பி. சுந்தராம்பாள் ஒளவையாராக சிரித்துக் கொண்டு, குளோசப்பில் நின்றார். நான் தடுமாறிப் போனேன். இது அப்பா காலத்துப் பாட்டல்லவா?

"இல்லை.. வந்து.. நான் கேட்டது இதில்லை. கொஞ்ச நாளைக்குமுன் கனடாவில் ஒரு மேடை நிகழ்ச்சியில் "ஞானப்பழத்தை பிளிந்து" என்ற பாட்டைப் பாடின சியாமளாவம்மாவின்ர பாட்டைத்தான்..!"

"இப்ப இப்படி எத்தனைபேர் படுகினம்" என்று முணுமணுத்தவர், அவர் அதைப்பற்றித் தனக்கு ஒன்றம் தெரியாது என்று கைவிரித்து விட்டார்.

ஏமாற்றத்தோடு வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.

ஒவ்வெரு முறையும் இப்படி யாராவது கைவிரிக்கும்போது அந்தக் குரலுக்குரிய அம்மாவைப் பார்க்கவேண்டும், இரண்டு வரி என்றாலும் பாடிக் காட்டச் சொல்லிக் கேட்க வேண்டும் என்ற ஆவலும் எனக்குள் கூடிக்கொண்ட சென்றது.

யாரைப்போல அந்த அம்மா இருப்பாள், சுசீலா மாதிரியா, ஜானகி மாதிரியா, அல்லது எல். ஆர் ஈஸ்வரி மாதிரியா என்றெல்லாம் கற்பனை பண்ணிப்பார்த்தேன். ஏன் முனியம்மா மாதிரிக்கூட இருக்கலாம்.! குரலுக்கும் ஆளுக்கும் தொடர்பே இல்லை என்பதை பலரைப் பார்த்த பிறகுதானே நானும் புரிந்து கொண்டேன்.

எப்படியோ அதைப் பாடியவரின் வாட்ஸ்அப் இலக்கம் கிடைத்ததால் வாட்ஸப்பில் அந்த அம்மாளுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. நான் ஒரு ரசிகன் என்று என்னைப்பற்றி அறிமுகம் செய்து கொண்டேன். கனடா வந்தால் சந்திக்கலாமா என்ற கேட்டபோது சம்மதம் தெரிவித்து முகவரியும் தந்திருந்தார்.

கனடா சென்ற போது, குறிப்பிட்ட தினத்திலன்று அவரது வீடு தேடிச் சென்று அழைப்பு மணியை அடித்துவிட்டு நின்றேன். வாசல் கதவு திறந்தது, எதிரே ஞானப்பழத்தோட மகளாகவோ அல்லது பேர்த்தியாகவோ இருக்கலாம் என்று மனசு கணக்குப் போட்டது, சின்ன வயசுதானிருக்கும், சிரித்த முகம், கொள்ளை அழகு!

"நீங்க ..?" என்றாள் அவள்.

நான் வந்த விடயத்தை மறந்து ஒரு கணம் தடுமாறிப் போனேன்.

"வந்து.. சியாமளாம்மா இருக்கிறாங்களா?" என்று இழுத்தேன்.

"இருக்கிறாங்க, உட்காருங்க வரச்சொல்றேன்" எனறு சொல்லி, ஹாலில் இருந்த இருக்கையைக் காட்டினாள்.

சியாமளாம்மா எப்படி இருப்பாங்க என்ற பரபரப்போடு உட்கார்ந்திருந்தேன்.

"அம்மா..!" என்று குரல் கொடுத்தபடி அவள் உள்ளே சென்றாள்.

சற்று நேரத்தால் ஒரு அம்மாள் சேலைத் தலைப்பில் கையைத் துடைத்தபடி உள்ளே வந்தாள். நெஞ்சு படபடத்தது.

"வணக்கம் அம்மா" என்று கையிலே கொண்டு வந்த மலர்க்கொத்தைக் கொடுத்து வணங்கினேன்.

"வணக்கம். நீங்க..?"

"நான் ப்ரகாஷ்..! ஞாபகம் இருக்கா?" என்றேன்.

பிரகாஷ்..? தெரியலையே..! என்றாள் தயக்கத்தோடு.

"ஜெர்மனியில் இருந்து வந்திருக்கேன்" என்றேன்.

அவரோ குழப்பத்தில் ஆழ்ந்தவர் போலக் காணப்பட்டார்.

"சியாமளா..?"

"ஓ மகளிட்ட வந்தீங்களா? சியாமளா உனக்குத்தான் விசிட்டர்" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள் அந்த அம்மாள்.

இப்போ, நான் முதல் சந்தித்த அதே பெண் மீண்டும் வந்தாள்.

"சியாமு.. உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாங்க." என்று சொன்னபடி அந்த அம்மாள் உள்ளே சென்றாள்.

"என்னையா?"

"ஆமா.."

"சியாமளா அம்மா என்று கேட்டீங்களே?"

நான் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தயங்கினேன்.

"நான் பிரகாஷ், ஞாபகம் இருக்கா? ஜெர்மனியில் இருந்து வந்திருக்கிறேன்."

"ஓ.. நல்லாய் ஞாபகம் இருக்கே எப்படி இருக்கீங்க?"

"நல்லாயிருக்கேன், தப்பு என்னோடதுதான். உங்க பாட்டைக் கேட்டதாலே உங்களுக்கு நல்ல வயசாயிருக்குமோ என்று நினைச்சிட்டேன்." என்றேன்.

சியாமளா ஒரு கணம் தலை குனிந்து அடக்க முடியாமல் சிரித்தாள்.

"மன்னிக்கணும், நானும் அப்படித்தான் நினைச்சிட்டேன். ஞானப்பழம், ஜீவப்பிரியே பாடல் ரசிகர் என்ற படியால் வயசானவர் என்று நினைச்சிட்டேன்."

இரண்டு பேருக்கும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அவள் பகாவதரையும், நான் கே. பி. சுந்தராம்பாளையும் நினைத்துக் கொண்டிருந்ததில் எல்லாமே குழம்பிப் போச்சு!

"ஜீவப்பிரியே பாட்டு ஏன் உங்களுக்குப் பிடிச்சுது?" அவளே சரளமாகக் கதைக்கத் தொடங்கினாள்.

"அதுவா, எங்க தாத்தா தியாகராஜா பாகவதர் ரசிகராம், அதனாலே ஜீவப்பிரியே பாட்டை தாத்தா அடிக்கடி படிப்பாராம், அதனாலே அப்பா அந்தப் பாட்டை அவ்வப்போது படிக்க, நானும் அதைப் பாடமாக்கிக் கொண்டேன்".

"அப்போ உங்க அப்பா ஞானப்பழம் ரசிகரா?"

"ஆமா, அப்பா மட்டுமல்ல நானும்தான்" என்றேன்.

நீங்களுமா, உங்களுக்கு அந்தப் பாட்டு பிடிக்குமா? அப்படின்னா, தாத்தாவோட ஜீன் உங்ககிட்ட இருக்கணுமே?"

"அவ்வளவுக்கு இல்லை, ஆனால் சுமாரா படிப்பேன்"

"அப்போ எனக்கு ஒருக்கா பாடிக் காண்பீங்களேன்" என்றாள்.

எனது தயக்கம் அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

"பயப்படாதீங்க, நான் மட்டும்தான் இங்கே இருக்கேன், ப்ளீஸ்.. இரண்டுவரியாவது.."

தொண்டையைச் சரிசெய்து கொண்டு பாடத் தொடங்கினேன், அவள் ரசித்துக் கொண்டிருந்தாள், என்னையா பாடலையா தெரியலை, அதுவே எனக்கு ஒருவித உட்சாகமூட்டியதால், நான் கண்களை மூடிக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டுப் பாடினேன்.

"என் ஜீவப்பிரியே ஷ்யாமளா, என் ஜீவப்பிரியே ஷ்யாமளா
என் ஜீவப்பிரியே சியாமளா.. சியாமளாதேவி!
பாதைமேல் விழியாப் பார்த்தே நொந்தேன்
பாங்குடன் தேன் மொழிபேசிட வாறாயோ சியாமளா..
என்றுனைக் காண்பேன் இன்பம் பெறுவேன்
ஏக்கமேதீர இரங்கிடுவாயே நீயே சியாமளா
ஆசை முகம் காட்டியே என் அல்லலைத் தவிராயோ
ஆடிவந்து எந்தன் அன்பினை மேவி ஆனந்தம் தாராயோ
என் ஜீவப்பிரியே ஷ்யாமளா, என் ஜீவப்பிரியே ஷ்யாமளா..!"

மிக அருகே கரவோசை கேட்டு கண்திறந்து பார்த்தேன். சியாமளாதான், "ரொம்ப நல்லாப் பாடுறீங்க, அப்படியே பாகவதர் குரல் போலவே இருக்கு, நான் என்னை மறந்து சிலிர்த்துப் போயிட்டேன்" என்றவள், அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக் குனிந்து என் நெற்றியில் சட்டென்று ஒரு முத்தம் பதித்தவள், ஒன்றுமே நடக்காதது போலத் திரும்பிச் சென்று தன் ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

நான் ஒரு கணம் உறைந்து போயிட்டேன். எல்லாமே எதிர்பாராமல் இன்ப அதிர்ச்சி தருவதாக இருந்தது. அவளுடன் ஏதாவது கதைக்க வேண்டும்போல இருந்தது.

"நீங்க எப்படி பழைய பாடல்களைத் தெரிந்தெடுத்தீங்க?" என்று கேட்டேன்.

"ஒரு நாள் அந்தப் பாடலை, அதுதான் ஞானப்பழத்தைப் பாடிப் பார்த்தேன், எங்கம்மா அப்படியே கே.பி. சுந்தராம்பாள் மாதிரி இருக்கென்று சொன்னாங்க, அப்புறம் இரண்டு மூணு தடவை பயிற்சி எடுத்து மேடையிலே பாடினேன், அமோக வரவேற்புக் கிடைச்சுது" என்றாள்.

"ஆமா, அந்தக் குரல் பிரபலமாக வந்ததற்கு காரணம் என்னவென்று யோசிச்சுப் பார்த்தேன். ஒரு உண்மை புலனாயிற்று" என்று நிறுத்தினேன்.

"என்ன காரணம் சொல்லுங்களேன்" என்றாள் அவசரமாக.

"அதுவா, இப்போ பொறுமையாக இருந்து அதிகமாகத் தமிழ் பாட்டைக் கேட்பவங்க எல்லாம் 40 வயசைக் கடந்தவங்க, அதனாலே தான் அவங்களுக்கு உங்க பாட்டு பிடிச்சிருக்கு"

தாயார் அங்கேயே வைத்துவிட்டுச் சென்ற மலர்ச் செண்டை எடுத்து அவளிடம் நீட்டினேன். என்னைவிட வயதிலே குறைந்தவள் என்பதால் பாதத்தைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வந்ததெல்லாம் தடைப்பட்டுப் போச்சு!

செண்டை வாங்கி ஆசையாய் அரவனைத்துக் கொண்டு நன்றி சொன்னாள். அப்புறம் என்னுடைய செல்போனை வாங்கித் தனது தொடர்பு இலக்கத்தைப் பதிவு செய்தாள்.

"அடிக்கடி உங்களைச் சந்திக்கணும்போல இருக்கு, நேரமிருந்தால் வாங்களேன்" என்றாள். குரலுக்கும் உருவத்திற்கும் தொடர்பில்லை என்பதை மீண்டும் உறுதி செய்து கொண்டேன்.

கலையின் பெயரால், திரும்பி வரும்போது ஆசீர்வாதம் வாங்கும் சாக்கில் குனிந்து அவளது மிருதுவான பாதத்தைத் தொட்டிருக்கலாமோ என்று இந்தப் பொல்லாத மனசை ஏங்கவைத்து விட்டாள் என் ஜீவப்ரியை ச்யாமளா!

(முடிந்தால் "ஜீவப்பிரியை" பாடலை நீங்களும் ஒருமுறையாவது கேட்டுப் பாருங்கள்.)

# புது டில்லியில் சிவப்புக் கம்பளம் தயாராகிறது 'என் உயரம் எனக்குத் தெரியும்' என்று தந்தையைப் போல தனயன் சொல்லமாட்டார்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், மார்ச் 01:



உலகின் தொல்குடியாம் தமிழ்க் குலத்தின் தலைநிலமான தமிழகத்தை செம்மாந்த முறையில் ஆளும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இன்று மார்ச் முதல் நாள் 70 வயதை எட்டுகிறார்.

இந்த மலைத்திருநாட்டிலும் மேலை நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் சார்பில் முதற்கண் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்த நாள் வாழ்த்து.

மொகலாய சாம்ராஜியம் ஆனாலும் தொடர்ந்த ஆங்கிலேயர்தம் ஆட்சியானாலும் 1947 விடுதலைக்குப் பிந்தைய சுதந்திர இந்தியா ஆனாலும் புது டில்லி கோட்டை என்பது, வஞ்சகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பெயர் பெற்றது.

சுதந்திர இந்தியாவில் ஒற்றைக் கட்சி ஆட்சி தனிப்பெரும்பான்மையுடன் எப்பொழுதெல்லாம் அமைகி-றதோ அப்பொழுதெல்லாம், மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதும் அதிகார வேட்கை கொண்டு அலைவதும் வாடிக்கை.

இதில், காங்கிரஸ் கட்சி ஆனாலும் ஆரிய அதிகாரத்திற்கு அடிகோலும் பாரதிய ஜனதாக் கட்சி ஆனாலும் நிறத்தில்தான் மாற்றமேத் தவிர, குணத்தில் ஒன்றுதான்.

தமிழ் நாட்டுக்கு சொந்தமான கச்சத் தீவை, காரணமேயின்றி இலங்கைக்கு தாரை வார்த்த இந்திரா காந்தி, தமிழக மக்களையோ, தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியையோ சிறிதும் மதிக்கவில்லை.

அதைப்போல, காவிரி நீர் ஒப்பந்தத்தை நீட்டிக்க வேண்டும் என்று முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி வழக்கு தொடர்ந்தபோது, அந்த வழக்கைத் திரும்ப பெறுங்கள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியை நம்ப வைத்து கழுத்தறுத்தவர் பிரதமர் இந்திரா காந்தி.

இன்று காவிரிச் சிக்கல் இந்த அளவுக்கு நீடிப்பதற்கும் தமிழகம் வறண்ட பூமியாக மாறிவருவதற்கும் முழு முதல் காரணம், இந்திரா காந்திதான்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், மைசூர் மாகாணத்தில் (இன்றைய கர்நாடக மாநிலம்) கட்டப்பட்ட கிருஷ்ணா ராஜ சாகர் அணைக்கும் சென்னை மாகாணத்தில் (இன்றைய தமிழகம்) கட்டப்பட்ட மேட்டூர் அணைக்கும் 1924-இல் நதி நீர் ஒப்பந்தம் செய்யப்பட்டது.



நைல் நதி, நாடு விட்டு நாடல்ல் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்தாலும் அதன் குறுக்கே எந்த நாடும் அணைக் கட்டுவதோ நீரைத் தேக்குவதோ இல்லை மேட்டில் உள்ளவர்கள் தண்ணீரைத் தேக்கி, தாழ்வான பகுதியில் உள்ளவர்களுக்கு இன்னல் தரக் கூடாது என்பது பன்னாட்டு விதி.

இதன் அடிப்படையில்தான் கிருஷ்ண ராஜ சாகர் அணைக்கும், மேட்டூர் அணைக்கும் இடையே ஒப்பந்தம் வரையப்பட்டு, இன்னும் 50 ஆண்டுகள் கழித்து அப்போதுள்ள மக்கள் தொகை, பாசன பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இரு மாநிலங்களும் நதி நீர் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் கச்சிதமாக ஒப்பந்தத்தை வரைந்திருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தைத்தான் சுதந்திர இந்தியாவின் கர்நாடக மாநிலம் புதுப்பிக்க மறுதலித்து வந்தது. அப்போது, கர்நாடக மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தவர் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் தேவராஜ் அர்ஸ்.

தமிழகத்தின் முதல்வராக இருந்த கருணாநிதியோ, பொறுத்து பொறுத்துப் பார்த்து, கடைசியில் மாநில மக்களின் நலம் கருதி புதுடில்லி உச்சமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்தியா முழுவதும் மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி, தன் அதிகார கரங்களை விரித்திருந்த நேரமது இதில் விலக்காக, கேரளம், மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களிலும் பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்)க் கட்சி வலுவடைந்திருந்தது.

ஏறக்குறைய இந்தியா முழுவதும் தன்னுடைய அதிகாரக் கொடி படபடக்கும் வேளையில் தென் கோடி முனையில் பேரறிஞர் அண்ணா த-லைமையில் ஒரு மாநிலக் கட்சி, காங்கிரஸ் கட்சியை அதிகாரக் கட்டிலில் இருந்து அகற்றுவதா? அதற்கு அம்மாநில மக்கள் துணைபோவதா என்று வெகுண்ட இந்திரா காந்தி, அகந்தை கொண்டு தமிழக மக்களை வஞ்சம் தீர்க்க முற்பட்டார்.

அதன் வெளிப்பாடாகத்தான், தமிழக மண்ணுக்கு பாத்தியப்பட்ட கச்சத் தீவை, சிரிமாவோ பண்டார நாயகேவிடம் ஒப்படைத்த சூட்டோடு, காவிரி நதி ஒப்பந்தம் புதுப்பிக்கப்படக் கூடாதென்பதில் கவனமாக இருந்தார்.

அதேவேளை, தேவ ராஜ் அர்ஸைத் தூண்டிவிட்டு, காவிரி நதிக்கு நீரைக் கொண்டுவரும் துணை நதிகளான கபினி, ஹேமாவதி, சொர்ணமுகி, சாரங்கி உள்ளிட்ட ஐந்து நதிகளிலும் அணைகளைக் கட்டி, தமிழகத்திற்கு தண்ணீரேக் கிடைக்காமல் செய்தக் கட்சி காங்கிரஸ் கட்சி.



அதைப் போல, இப்பொழுது மிருக பலத்துடன் ஆட்சி நடத்தும் மோடி தலை-மையிலான பார்ப்பனர் நலம் நாடு அரசு, தமிழக மண்ணுக்கும் மக்களுக்கும் முடிந்தவரை கேடு விளைவிக்கிறது.

மோடி ஆட்சிக்கு வந்ததும் காவிரி நீர் சிக்கல் தொடர்பான நடுவர் மன்றம் குறித்த வழக்கு புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் வந்தபோது, நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று இந்திய அரசியல் சாசனத்தில் சொல்லப்படவில்லை என்று பிரமான வாக்குமூலம் சமர்ப்பித்து, காவிரி நடுவர் மன்றத்திற்கு சமாதி கட்டினார் மோடி.

பிள்ளை பிடிப்பவன் குழந்தைகளை மயக்க பொம்மையைக் காட்டுவதைப் போலவும் மயக்க மருந்து கலந்த இனிப்புப் பண்டங்களைக் காட்டி கவருவதைப் போலவும் மோடி தமிழ் நாட்டுக்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு திருக்குறளைச் சொல்வது ஐநா மன்றத்திற்குச் சென்றால் கணியன் பூங்குன்றனாரின் வரிகளான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது என தமிழர்களை பச்சையாக ஏமாற்றி வருகிறார்.

செத்த மொழி அல்லது வழக்கு ஒழிந்த மொழி என்ற நிலையில் உள்ள சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு கோடிக் கோடியாக கொட்டித் தீர்க்கும் மோடி, இந்தியாவில் வாழும் செம்மொழியான தமிழ் வளர்ச்சிக்கு கிள்ளிக்கொடுக்கக்கூட யோசிக்கிறார்.

மண்ணுக்கு அடியில் உள்ள இயற்கை எரிவாயுவையும் பெட்ரோலிய கச்சா எண்ணையையும் எடுக்க வட இந்தியாவில் இரண்டு, மூன்று இடங்கள் அடையாளம் காணப்பட்டாலும் அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு, நெற்களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சை மண்டலத்தின் வேளாண் விளைபூமியைக் கெடுத்து தமிழ் நாட்டை வரண்ட நிலமாக மாற்றவும் கோடிக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கொள்ளை இடவும் மோடி துடியாய்த் துடிக்கிறார்.



அதைப் போல கடல்சார் தொழில் புரியும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கவும் சூச்சமில்லாமல் செயல்படுகிறது பார்ப்பனர்களின் நலம் நாடும் பாஜக அரசு.

குஜராத் மீனவர்களை பாக்கிஸ்தான் கடற்படையினர் தாக்கினால், இந்திய மீனவர்களுக்கு பாக்கிஸ்தான் மருட்டல் என்று கொக்கரிக்கும் மோடி அரசு, தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்கினால், அவர்களை இந்திய மீனவர்கள் என்பதில்லை தமிழக மீனவர்கள் என்று வஞ்சிக்கிறது மோடியின் புதுடில்லி அரசு.

கன்னியாகுமரி, இராமேஸ்வர மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக நாள் தவறாமல் இலங்கை கடற்படை தாக்கும் வேலையில், இந்திய கடலோர காவல் படை என்ன செய்கிறது?

தமிழக மாணவர்களில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மருத்துவர் ஆகாமல் தடுக்க "நேநுவு" என்னும் தேர்வு முறையை நடைமுறைப்படுத்தி, தமிழக மருத்துவக் கட்டமைப்பை சிதைக்கிறது மோடி அரசு.

தமிழ் நாட்டில் உள்ள மத்திய அலுவலகங்களில் உள்ள வேலை வாய்ப்புகளில் வட இந்தியர்களை அமர்த்தி, தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்பில் பச்சை துரோகம் இழக்கிறார் மோடி.

தமிழ் நாட்டு அரசு, தமிழக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தால், அதைத் தடுக்கப்பார்க்கிறார் மோடி அதற்காக "உதய் மின் திட்டம்" என்பதை அறிமுகப்படுத்துகிறார்.

தமிழர்களின் தொல் பெருமையை நிலைநாட்டும் அகழ்வாராய்ச்சிகளை தடுத்து நிறுத்தி, அந்த இடங்களை யெல்லாம் மூடி வருகிறார் மோடி.

இப்படி தமிழகத்தில் ஒரு தரப்பினரையும் ஒதுக்கி விடாமல், ஒட்டுமொத்த தமிழ் நாட்டிற்கும் கேடு விளைவித்து வருகிறது புது டில்லி கொத்தளம்.



பொய் சொல்வதற்கு கொஞ்சமும் அஞ்சாத மோடி, வருடத்திற்கு இரு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவேன் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தபின் அதைப்பற்றி பேசவே மறுக்கிறார் வெளிநாட்டில் இருக்கும் கறுப்புப் பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்தியவரின் வங்கிக் கணக்கிலும் 15 இலட்ச ரூபாயைச் சேர்ப்பேன் என்று சொல்லி ஆட்சிக்கு வந்துவிட்டு, இப்பொழுது கடந்த எட்டு ஆண்டுகளாக அதைப் பற்றி பேச மறுக்கிறார்.

இந்த நிலையில், தமிழக மக்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களும் தெளிவுபெறத் தொடங்கிவிட்டனர். காங்கிரஸ் கட்சி ஆனாலும் பாரதிய ஜனதாக் கட்சி ஆனாலும் வேறு எந்தக் கட்சி ஆனாலும் சரி, தனிப் பெரும்பான்மையுடன் புது டில்லியில் ஆட்சிக்கு வந்தால், மாநில உரிமைகளைப் பறிப்பதும் அந்தந்த மாநில மக்களின் நலனை சிதைப்பதும் என செயல்படுவதை உணர்கின்றனர்.

பாஜகவின் சாயமும் மோடியின் வித்தையும் மக்களுக்குத் தெரிந்து தெளிவுபெற்று விட்டதால், 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மோடியின் பாஜக தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வர வாய்ப்பில்லை.

அநேகமாக, ஒற்றைக் கட்சி ஆட்சி என்னும் அத்தியாயம் இந்தியாவில் முற்றுபெறும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியா என்பது ஒரு தனி நாடல்ல் அது தேசங்களின் தேசம் என்பதை புது டில்லி கோட்டைக் கொத்தளத்தில் இருப்போர் எண்ணிப் பார்க்க மறுத்து விடுகின்றனர்.

*(தொடர்ச்சி 29 பக்கம்)*

# அன்பின் தொனி - 644

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுத்தம் அடைவதற்கான வழி - ஞானஸ்நானத்தின் பின் செய்யவேண்டியவை**

ஞானஸ்நானம் எடுப்பது ஓர் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஆரம்பமே. அதையடுத்து தொடர்ந்து ஆவிக்குரிய அனுபவத்திலும், உத்தமமான வாழ்க்கையிலும் வளரவேண்டும், முன்னேற வேண்டும். ஆவிக்குரிய சபையோடும், சபை மக்களோடு ஐக்கியத்திலும், அந்நியோந்நியத்திலும் உறவுகொள்வதோடு, அனுதினமும் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் தரித்திருத்தல் அவசியம். மேலும் ஒவ்வொரு நினைவும், சிந்தனையும், தீர்மானமும், செயற்பாடும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பிரியப்படுத்துகிறதாயும், அவருக்கென்று சாட்சியாய் வாழ்வதாயும் அமையவேண்டும்.

**ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்காது, ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.**

**பரிசுத்த ஆவியானவர்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவ நீதியின்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்த ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் அளிக்கும் வரமே பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் வந்து அந்த விசுவாசி ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ ஆவிக்குரிய ஜீவனை அளிக்கிறார். ஆண்டவராகிய இயேசு வாக்குத்தத்தம் பண்ணின இந்த பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட முறையில் விசுவாசிக்குப் போதனையளித்து வழி நடத்து வதற்காக அவனுக்குள் வாசம்பண்ண வருகிறார். மேலும், விசுவாசிக்குள் வாசம்பண்ணும்படி பரிசுத்த ஆவியான வரை அளிப்பதோடு மட்டுமின்றி, அவன் ஊழியம் செய்யவும், இவ்வுலகில் தேவனை மகிமைப்படுத்தவும் வல்லமையைப் பெறும்படி, அவனை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பவும், அவருக்குள் அபிஷேகம் செய்யவும் தேவன் விரும்புகிறார்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது.. - **அப்போஸ்தலர் 2: 38-39**

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத் தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை. - **யோவான் 7: 37-39**

**பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்**

இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறான். அவனுக்குள் வாசம் செய்யும் ஆவியானவர், அவனுக்கும் அவன் மூலமாகவும் பின் குறிப்பிட்டுள்ள பல வகையான கிரியைகளை நடப்பிற்கிறார்.

**1. சாட்சி கொடுக்கிறார்** - நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். **- ரோமர் 8: 16**

**2. போதிக்கிறார்** - என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். **- யோவான் 14: 26**

**3. வழிநடத்துகிறார்** - மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கி றார்கள். **- ரோமர் 8: 14**


**4. நல் வாழ்வு வாழ வைக்கிறார்** - பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்பபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். - **கலாத்தேயர் 5: 16**

**5. ஜெபிப்பதற்கு உதவுகிறார்** - அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக் காக வேண்டுதல்செய்கிறார். **- ரோமர் 8: 26**

**6. சரீரத்திற்கு ஜீவனை அளிக்கிறார்** - அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித் தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங் களையும் உயிர்ப்பிப்பார். - **ரோமர் 8: 11**

**7. சாட்சி கூறுவதற்கான துணிவை அளிக்கிறார்** - பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியா விலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். - **அப்போஸ்தலர் 1: 8**

*தொடரும்...*



***மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்***




## 'மஹாகவி' பாரதி பாடல்கள்

***அத்தியாயம் - 12***

"மகாகவி" பாரதியை கொண்டாடிவரும் - அவரது நூற்றாண்டு தின நிகழ்ச்சிகளை கண்டும் - கேட்டும் பேருவகை கொள்ளும் எனக்கு, அவரது கருத்துக்களிலும் - சிந்தனை வெளிப்பாடுகளிலும் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தி எழுதியும், பேசியும் வந்தவரும் அமரத்துவம் அடைந்த எழுத்துலக ஞானியுமான ஜெயகாந்தன் ஐயா வாழ்ந்த காலத்தில் தனது ஞானகுருவான பாரதி பற்றிச் சொல்லிய சில கருத்துக்களை பதிவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

"வித்தை ஏதும் கல்லாதவன். என்னுள்ளே வேத நுட்பம் விளங்கிடச் செய்தனை", என்று பாரதியார் சொல்கிறார்.

நான் படித்த வேதமெலாம் பாரதியார் புத்தகம் ஒன்றுதான். அதிலே வேதம் எவ்வளவு இடத்திலே குறிக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணிப் பாருங்கள். நம்மை பற்றி சொல்லுகிற பொழுது, தமிழ்நாட்டைப் பற்றி சொல்லுகிற பொழுது "வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்றும், ஒரு கடவுளை வர்ணிக்கும் போது "வேதத் திருவிழியினாள்" வேத வாழ்க்கை கை பிடிப்போம்!, என்றும், பொருளாகும்! வியனுலகு முழுவதையும் அமுதென நுகரும் வேத வாழ்வு. புதுமை செய்வதென்றால் என்ன? காலத்திற்கேற்ப வேதத்தை நாம் கண்டு கொள்வது நம்முடைய கடமை. அது யாரோ சொல்லி யாரும் கேட்பதில்லை! வேதம் என்று எது எதற்கெல்லாம் பெயர்? "நான்மறை" என்று நாம் எல்லாம் பொதுவாக சொல்லும் வேதம்! "விவிலியத்திற்க்கும்" பெயர் வேதம் தான். "குர்ரானுக்கும்" பெயர் வேதம் தான்! "திருக்குறள்" கூட வேதம் தான்! இந்த வேதம் என்ற பொருள் ஏன் வருகிறது என்றால் அது காலம் தோறும் மனிதருக்கு புதுப்பிக்கப்படுகிறது. புரிந்து கொள்வதனால் தான் அது சிரஞ்சீவியானது. எது எது சிரஞ்சீவியானதோ அது காலம் தோறும் புதுமையுறும். காலம் என்பது மனிதன் மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல! அது பிரபஞ்சம் சம்பந்தப்பட்டது! மனிதன் சம்பந்தப்பட்டது நேரம். சில காலங்களில் சில மனிதர்கள் அல்ல் சில நேரங்களில் சில மனிதர்கள்! ஆகவே பாரதியை புரிந்து கொள்வதும், தமிழர்கள் பாரதியை பரிச்சயம் கொள்வதும், பாரதியை குருவாக ஏற்பதும் நமக்கு வாய்த்த நல்ல நேரம்! தொடர்ந்து பாரதி பற்றி தான் புரிந்து தெரிந்தவற்றை ஜேகே கூறியவற்றை இன்னொரு சமயம் எழுதுவேன்!

இனி இவ்வாரம் "தமிழ் சினிமாவில் பாரதி பாடல்கள்" பற்றி..." 1966-ல் வெளிவந்த "கௌரி கல்யாணம்" படத்தில் இடம் பெற்ற மகாகவி பாடல்களை குறிப்பிடலாம். (பு.சே) ஜி என் வேலுமணியின் சரவணா பிலிம்ஸ் தயாரிப்பான இப்படத்தில் - கல்லூரி தமிழ் மன்ற ஆண்டு விழா நிகழ்வில் இடம் பெறும் கடவுள் வாழ்த்துப் பாடலாக மெல்லிசை மன்னன் எம் எஸ் விஸ்வநாதன் அவர்கள் இசையமைப்பில் ஒரு நடனப் பாடலாக இடம் பெற்றிருக்கும். படத்தில் நடிகை ஷீலாவிற்காக பிரபல பாடகி சூலமங்கலம் ராஜலக்சுமி அம்மா பாட நடிகை கனகா நடனமாடி இருப்பார். இதோ படத்தில் இடம்பெற்ற பாடல் வரிகள்...


"வெள்ளைக் கமலத்திலே அவள் வீற்றிருப்பாள்..  
புகழ் ஏற்றிருப்பாள்..  
கொள்ளைக் கனி இசை தான் நன்கு..  
கொட்டு நல்யாழிணைக் கொண்டிருப்பாள்.. (வெள்ளைக்)

கள்ளக் கடல் அமுது நிகர் கண்டதோர்  
பூந்தமிழ்க் கவிதை சொல்லவே  
பிள்ளைப் பருவத்திலேயே எனைப் பேண வந்தாள்..  
அருள் பூண வந்தாள்.. (பிள்ளை)

இவ்வாறு கலைமகள் துதிப் பாடலாக இக்கவிதை வரிகள் கையாளப்பட்டன. 1952-ல் வெளிவந்த படமாகிய "பராசக்தி"யில் கூட அமரகவியின் பாடலொன்று இடம்பெற்றிருந்த தகவலை குறிப்பிட மறந்துவிட்டேன்.

படத்தின் கதாநாயகனான (குணசேகரன்) சிவாஜி ஐயா பாடுவதாக இடம்பெற்ற பாடல் அது. சுதர்சனம் அவர்களது இசையமைப்பில் இசைச்சித்தர் சி எஸ் ஜெயராமன் நடிகர் திலகத்திற்காகப் பாடியிருந்தார். "பாரத ஜனங்களின் தற்கால நிலைமை" எனும் தலைப்பில் மகாகவியினால் எழுதப்பெற்ற நொண்டிச் சிந்து கவிதைவரிகளாகும். 56 வரிகள் கொண்ட பாடல் தொகுப்பில் காட்சிக்கு தேவையான 16 வரிகளை மட்டும் பாடலாக்கி மெட்டமைத்து இசையமைத்திருந்தனர். இதோ பாடல் வரிகள்...

அன்னை "பராசக்தி" சந்நிதானத்திலிருந்து சிவாஜி ஐயா பாடுவதாக இப்பாடல் காட்சி இடம்பெறும்.



"நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த  
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்  
அஞ்சி அஞ்சி சாவார் - இவர்  
அஞ்சாத பொருளில்லை அவனியிலே  
வஞ்சனைப் பேய்களென்பார் - இந்த  
மரத்தில் என்பார் அந்தக் குளத்திலென்பார்  
துஞ்சுது முகட்டில் என்பார் - மிகத்  
துயரப்படுவார் எண்ணிப் பயப்படுவார் (நெஞ்சு)

நெஞ்சு பொறுக்கு திலையே - இதை  
நினைத்து நினைந்திடினும் வெறுக்குதிலையே?  
கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்  
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்  
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்  
பரிதவித்தே உயிர் துடிதுடித்,  
துஞ்சி மடிகின்றாரே - இவர்  
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே (நெஞ்சு)

அடுத்து 1961 இல் வெளிவந்த "பாவமன்னிப்பு" படத்திற்கு வசனம் எழுதிய எம் எஸ் சோலைமலை அவர்கள் சிவாஜி ஐயாவும், "நடிகவேள்" எம்ஆர் ராதா அவர்களும் சந்தித்து உரையாடும் காட்சி ஒன்றில் சிவாஜி அவர்களின் வாயிலாக "மகாகவி"யின் கவிதை வரிகளை ராதாவிற்கு பதில் சொல்வதற்காக வைத்திருப்பார்கள். அக்கவிதை வரிகளை கீழே தருகிறேன்.

"காக்கைக் குருவி எங்கள் ஜாதி  
நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்"  
என்று கொள்கை உடையவன் நான்" என்றும்,  
"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி  
வஞ்சனை சொல்வாரடி - கிளியே!  
வாய்ச் சொல்லில் வீரரடி!

ம்..பெரிய பதவி சின்ன புத்தி" என (ராதா) ஆளவந்தாரை பார்த்து (சிவாஜி) ரஹீம் தன் நெஞ்ச குமுறலை வெளிப்படுத்துவார்!

இதே "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி  
வஞ்சனை சொல்வாரடி - கிளியே!  
வாய்ச் சொல்லில் வீரரடி! என்ற பாடலை

"கப்பலோட்டிய தமிழன்" படத்தில் சிவாஜி ஐயாவின் (வ உ சி) கப்பல் கம்பெனியை வெள்ளைக்காரனுக்கு விற்று விட்ட தகவல் அறிந்து வேதனைபடும் காட்சியில் இசைமணி - டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் ஐயா குரலில் பாடவைத்து - இசையமைத்தவர் - சங்கீத மேதை ஜி ராமநாதன் ஐயா என்பதையும் நினைவூட்டுகிறேன்.

உலகநாயகன் "கமலஹாசன்" கூட "மகாகவி"யின் ரௌத்திரம் பொங்கும் கவிதை வரிகளை விட்டுவைக்கவில்லை. அந்த கவிதை வரிகள் எந்த படத்தில் இடம்பெற்றிருந்தது? விடை அடுத்த இதழில்...

**- வீணை மைந்தன்**

# மகளிர் தினமும் அதன் வரலாறும்




பெண்களை போற்றும் விதமாகவும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உணர்த்தும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்-8 ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. மகளிர் தினம் ஏன் கொண்டாடப்படுகிறது? அதனை உருவாக்கியவர் யார்? மகளிர் தினத்துக்கு பின்னாலும் ஒரு போராட்ட வரலாறு உள்ளது.

18ஆம் நூற்றாண்டில் பெண்கள் என்றால் வீட்டு வேலைகளுக்கு மட்டுமே சரிவருவார்கள் என்று முடக்கிவைக்கப்பட்டார்கள். இந்த நிலை மெல்ல மாறி 18520 களில் தொழிற்சாலை அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பெண்கள் கால்பதிக்க தொடங்கினர். ஆண்களுக்கு நிகராக பெண்கள் பணியில் கால்பதித்தாலும் அவர்களுக்கான ஊதியத்தில் தொடர்ந்து பாகுபாடு காட்டப்பட்டது.

ஆண்களுக்கு நிகராக வேலை செய்தாலும் உரிமையிலும் ஊதியத்திலும் தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டது. இதனால் கொதித்தெழுந்த பெண்கள் 1910ம் ஆண்டு டென்மார்க் கோபன்ஹேகனில் மாபெரும் பெண்கள் உரிமை மாநாட்டை நடத்தினர். இந்த மாநாட்டில் உலக நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

தங்கள் உரிமைகளுக்காக பெண்கள் அனைவரும் கைகோர்த்து ஒற்றுமையாக நின்றனர். அந்த மாநாட்டில் கலந்து கொண்டர்களின் முக்கியமானவர் ஜெர்மனியைச் சேர்ந்த புரட்சிப் பெண் கிளாரா ஜெட்கின்.

பெண்களின் உரிமைக்காக அவர்களை ஒருங்கிணைத்து தொடர்ந்து குரல் கொடுத்துவந்த கிளாரா, பெண்களின் உரிமைகளை பேச உலகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட நாளை பெண்கள் தினமாக கடைபிடிக்க வேண்டும் என்று கருதினார். அது குறித்து தீர்மானத்தை நிறைவேற்ற முயற்சி செய்தார்.

ஆனால் பல்வேறு காரணங்களால் அந்த தீர்மானம் நிறைவேறவில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தினத்தில் மகளிர் தினத்தை கொண்டாடி வந்தன.

அதற்கு பின் உலகை திரும்பிப்பார்க்க வைத்த புரட்சி என்றால், 1917-ல் ரஷ்யாவில் நடைபெற்ற பெண் தொழிலாளர்கள் முன்னெடுத்த புரட்சி. இந்த புரட்சியின் தாக்கத்தால் அப்போதைய ரஷ்ய மன்னர் ஜாரின் ஆட்சியே கவிழ்ந்தது என்பது வரலாறு. இதனையடுத்து 1920-ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயிண்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் ரஷ்யாவை சேர்ந்த அலெக்ஸாண்ட்ரா கேலன்ரா கலந்து கொண்டார்.

ரஷ்ய பெண் தொழிலாளர்களின் புரட்சியை நினைவுகூறும் வகையில் புரட்சி நடந்த பிப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையை பெண்கள் தினமாகக் கொண்டாட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். க்ரிகோரியன் காலண்டரின்படி அவர்கள் கோரிய கடைசி ஞாயிற்றுக்கிழமை மார்ச் 8ம் தேதியாக இருந்தது. அதனை அடுத்து உலக மகளிர் தினத்தை ஆண்டுதோறும் மார்ச் 8ம் தேதி நடத்த வேண்டும் என்று அவர் பிரகடனம் செய்தார்.

அந்த ஆண்டு முதல் உலகம் முழுவதும் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினத்துக்கு ஐநா மகளிர் அமைப்பு ஒரு கருப்பொருளை முன்மொழிகிறது. அதன்படி இந்த ஆண்டு 'சிறப்பான வாழ்க்கைக்குச் சமநிலை' என்ற கருப்பொருள் முன்மொழியப்படுகிறது.

இவ்வாறு பல போராட்டங்களின் பின் பெண்களுக்கு கிடைத்த வெற்றியே மகளிர் தின நினைவூட்டல் ஆகும். இவ்வெற்றி மேலும் தொடர்ந்து செல்லவேண்டும் என வாழ்த்துகிறேன். அனைத்து பெண்களுக்கும் எனது மகளிர்தின நல்வாழ்த்துக்கள்.

**-இரா. சஹானா**

## சிந்தனைக் களம்
### (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 837 1003 0519 **Passcode:** 974248)

12 மார்ச் 2022 (சனிக்கிழமை) 8:00pm-11:00pm (கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 13 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை 6.30am-9:30am)
(சிட்னி - 13 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை 12.00-3:00pm)

**உரைத்தொடர் - 15**

உரைப் பொருள்
***'பாஞ்சாலி சபதம்
என்னும் முத்தமிழ்க் காப்பியம்'***

உரையாளர்
***பேராசிரியர் சு. பசுபதி***



தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
ரொறன்ரோப் பல்கலைக்கழகம், கனடா


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

**0%வட்டி**

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

### எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 46)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

அப்போது அங்கு வந்த சில மனிதர்கள் அவளைப் பிடித்து கைகளைக் கட்டினார்கள் அவர்களுக்கு வழிகாட்டிய ராக்கம்மாளும் தூரமாக நின்றாள். இதைக் கண்ட பூங்குழலி படகில் இருந்து பாய்ந்து கூச்சல் இட்டுக் கொண்டு ஓடினாள். ஐந்தாறு பேர் பூங்குழலியை தூக்கி படகோடு கட்டினார்கள். ஊமைராணியை அழைத்துக் கொண்டு மறைந்து விட்டார்கள். அப்போது சேந்தன் அமுதன் பூங்குழலி இருந்த படகை நோக்கி ஓடி வந்தான் பூங்குழலி படகோடு கட்டப்பட்டு இருந்ததைக் கண்டு அவசரமாக கட்டுகளை அவிழ்த்தான். 'சிவசிவ உனது கருணை இவளை காப்பாற்றியது' என்றான். 'நீ தஞைசைக்குப் புறப்படவில்லையா உனக்கு யார் இந்த செய்தியைச் சொன்னார்கள்' என்று கேட்டாள் பூங்குழலி. அப்பொழுது அமுதன் 'நான் தஞ்சை புறப்பட்டேன் வழியில் எனக்கு தஞ்சை போக மனம் இசையவில்லை காட்டில் கூச்சலும் அழுகுரலும் கேட்டது. மறைந்து நின்று பார்த்தேன். வேல் பிடித்த மனிதர்கள் ஏழு எட்டுப் பேர் அதில் ஒரு பெண் பிள்ளையும் இருந்தாள். அவள் உன் அத்தை எனக் கண்டேன் என்றான். முடிந்தால் உதவலாம் என எண்ணினேன் ஒரு மரத்தில் உன் அண்ணி ராக்கம்மா கட்டப்பட்டு தலையில் காயங்களுடன் இருந்தாள். அவளிடம் சென்று அவள் கட்டுக்களை அவிழ்த்தேன். என்ன நடந்தது என வினவினேன் உன் அத்தையைக் கொண்டு போகிறார்கள் நான் தடுத்தேன். இவர்கள் என்னை அடித்துக் கட்டி விட்டார்கள். பூங்குழலிக்கும் ஆபத்து என்றாள். உடனே உன்னைத் தேடி ஓடி வந்தேன்' என்றான். உன் அண்ணி என்னிடம் உன் அத்தையும் பூங்குழலியும் எங்கே படகில் புறப்பட்டார் என்று கேட்டாள் நான் பதில் சொல்லவில்லை என்றும் கூறினான். பின்னர் பூங்குழலியையும் அத்தையையும் தேடி சேந்தன் அமுதனும் தஞ்சை நோக்கிப் புறப்பட்டான். மழை தூறியது அப்பொழுது பெரிய பழுவேட்டரையர் வீட்டுப் பல்லக்கு இவர்களைத் தாண்டிச் சென்றது. மழையும் பெரும் காற்றும் சேர்ந்து கொண்டது மின்னல் மின்னியது பூங்குழலியும் சேந்தன் அமுதனும் கைகள் பிடித்தபடி நடந்து வந்தார்கள் அப்பொழுது ஒரு மரம் விழுந்து கிடந்தது. அதனுள் ஆட்கள் அகப்பட்டுக் கொண்டனர் சேந்தன் அமுதன் 'பூங்குழலி வா இந்த சிறிய மண்டபத்தில் நிற்போம் மழை நின்றதும் புறப்படுவோம்' என்று கூறினான். இருவரும் அங்கே சென்றனர் மீண்டும் மின்னல் மின்னியது அந்த வெளிச்சத்தில் ஒரு பல்லக்கு அந்த விழுந்து கிடந்த மரத்தின் பக்கமாக வைக்கப்பட்டது. 'அதோ பழுவூர் ராணியின் பல்லக்கு நான் அங்கு போய் பழுவூர் ராணியைப் பார்க்கப் போகிறேன் என் அத்தையைக் காப்பாற்றி ஆக வேண்டும்' என்று கூறினாள் சிறிது நேரத்தில் அந்த பல்லக்கு இவர்கள் இருந்த மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டது யார் இங்கே என்ற குரல் கேட்டு சேந்தன் அமுதன் 'நாங்கள் மழைக்காக ஒதுங்கியுள்ளோம்' என்றான். பல்லக்கின் அருகில் வர வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார்கள் சிறிது நேரத்தில் அந்த பல்லக்கில் இருந்து ஒரு உருவம் வெளியே வந்து மெல்ல மெல்ல நடந்து வந்து பூங்குழலியின் கைகளையும் சேந்தன் அமுதன் கையையும் இழுத்துக் கொண்டு மண்டபத்தினுள் பின் பக்கம் சென்றது. பூங்குழலி அப்பொழுது அது தன் அத்தை என்று கண்டு கொண்டு மகிழ்ச்சி அடைந்தாள். பின்னர் இருவரும் பேசிக் கொண்டனர். பூங்குழலி மெதுவாக நடந்து வந்து அந்தப் பல்லக்கில் ஏறிக் கொண்டாள் திரையை மூடிக் கொண்டாள் அந்த மணடபத்தில் இன்னுமோர் மனிதனும் மழைக்கு ஒதுங்கி நின்றான். சேந்தன் அமுதன் தன் அத்தையை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். தஞ்சை கோட்டை காவலர் சின்னப்பழுவேட்டரையர் காலாந்தக கண்டர். இவர் அரண்மனை முதல் மந்திரி அநிருத்தரின் அரண்மனைக்கு பக்கம் இருந்தது. முதல் மந்திரியை பார்ப்பதற்கு அரசாங்க அதிகாரிகள், சிற்றரசர்கள், சேனைத் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகிய நிர்வாகிகள், வித்துவான்கள் என்று பலரும் வருவது வழக்கம். இதனால் பாதுகாப்பு குறைந்து செல்கிறது என்று சின்னப்பழுவேட்டரையருக்கு கோபமாக இருந்தது. ஆனால் முதல் மந்திரியிடம் சண்டை செய்ய முடியாது கோபத்துடன் இருந்தார்.

அவ்வேளை உதவி கோரி சில கட்டளைகள் பிறப்பிப்பார் பெரிய பழுவேட்டரையரிடம் இது பற்றி முறையிட வேண்டும் என்று காலந்தக கண்டர் நினைத்திருந்த பொழுது முதல் மந்திரி கோடிக்கரைக்கு அனுப்புவதற்கு சில வீரர்கள் வேண்டும், அத்துடன் பழுவூர்ராணியின் மூடுபல்லக்கும் வேண்டும் உயர் குலத்துப் பெண் ஒருவரை நான் திருவையாற்றில் இருந்து அழைத்து வர வேண்டும் இதற்கு சிவிகை தூக்கிகள் வேண்டும் என்று கோரியிருந்தார். அவர் கோரிக்கையை சின்னப் பழுவேட்டரையர் நிறைவேற்றினார். ஆனால் யார் இந்தப் பெண்மணி என்று அறிய ஆவல் கொண்டிருந்தார். இதே வேளை ஆழ்வார்க்கடியானும் கடம்பூரில் இருந்து திரும்பி வந்தான். அநிருத்தரைப் பார்க்க வந்திருந்தான். முதல் மந்திரி ஆழ்வாக்கடியானை அழைத்து 'உன்னை ஆதித்தகரிகாலரிடம் அனுப்பினேன் நடந்தது என்ன' என்று வினவினார். அதற்கு ஆழ்வாரக்கடியான் 'நான் ஆதித்தரை சந்தித்து யாவற்றையும் கூறினேன். கடம்பூர் போக வேண்டாம் என்று தடுத்தேன் அவர் கேட்கவில்லை அவர் சம்புவரையர் மாளிகையில் பிரவேசிக்கும் மட்டும் நான் அங்கிருந்து பார்த்தேன் இரா உபசாரம் மிகச் சிறப்பாக நடந்தது சனங்கள் மிக உற்சாகமாக இருந்தார்கள். வந்தியத்தேவனும் பாத்திபேந்திரனும் அங்கே இருக்கிறார்கள்.' என்றான். நேற்று பெரும் புயலும் மழையும் அடித்ததால் என் காரியத்தில் தடங்கல் ஏற்பட்டது இரவு என்னால் தூங்க முடியவில்லை. உன்னை முன்பு ஊமை ராணியை அழைத்து வரும்படி அனுப்பினேன் ஆனால் உன்னால் அது முடியவில்லை. ஆனால் பினகபாணியால் அது முடிந்தது. ஊமைராணியை மூடுபல்லக்கில் வைத்துக் கொண்டு வந்தார்கள். அவளை வீட்டுப் பெண்களை விட்டு வரவேற்றேன். இரவு சாப்பிட்டுவிட்டுத் தூங்கி விட்டாள். இப்பொழுது அவளைப் பார்க்க அங்கே போகிறேன் திருமலை 'நீ அங்கே வா' என்று அழைத்தார். இருவரும் புறப்பட்டனர். தாதியர் அந்த ஸ்திரியை அழைத்து வந்து நிறுத்தினர். அநிருத்தர் அவளைப் பார்த்து திகைத்துப் போனார். ஆழ்வார்க்கடியான் அங்கே நின்ற பூங்குழலியை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். 'இவள் மந்தாகினி தேவியா? வைத்தியர் மகன் பினகபாணியை சிறையில் இருந்து விடுவித்தேன் அவனை எங்கள் ஒற்றர் படையில் சேர்க்கலாம் என்று எண்ணி அவனை மந்தாகினி தேவியை அழைத்து வர கோடிக்கரை அனுப்பினேன். அவனும் அப்படியே செய்தான். எல்லாம் வெற்றி என்று செய்தி அனுப்பினான்' என்றார் அநிருத்தர். மேலும் 'இடையில் புயல் காற்றினால் மரம் முறிந்து விழுந்தது அவன் காயப்பட்டதால் இங்கு வரவில்லை எப்படி இந்தப் பல்லக்கில் இவள் வந்தாள். இவள் யார்' என்று முதல் மந்திரி ஆழ்வார்கக்கடியானிடம் கேட்டார். பின்னர் 'பெண்ணே நீ யார் எப்படி இந்த பல்லக்கில் வந்தாய்? என்று வினாவினார். அதற்கு பூங்குழலி 'நான் கலங்கரை விளக்கக் காவலர் தியாகவிடங்கர் அருமைப் புதல்வி அந்த பாவி பினாகபாணி என்னை படகில் சேர்த்துக் கட்டி விட்டு என் அண்ணியை மரத்தில் கட்டிவிட்டு என் அத்தையை கட்டி இழுத்து வந்தான். அதனை செய்ய வைத்தது நீர் என்பது தெரிந்து கொண்டேன் ஏன் இப்படி செய்தீர்' என்று கேட்டாள். 'பூங்குழலி அது ராஜாங்க விடயம்' என்றார் அநிருத்தர்.




சரி எப்படி நான் இந்தப் பல்லக்கில் வந்தேன் என்பதும் நான் சொல்வதற்கில்லை உமக்குத் தெரியாமல் எதுவும் இந்த சோழ நாட்டில் நடப்பது இல்லை என்று மக்கள் பேசுகிறார்கள். பெரிய மதிப்பு வைத்திருக்கறார்கள் பின்னர் என்னை ஏன் கேட்கிறீரே தெரிந்து கொள்வது தானே? சரி உன்னை பாதாள சிறைக்கு அனுப்புகிறேன் அங்கு இருந்து யாரும் தப்பியது இல்லை' என்றார். அதற்கு பூங்குழலி 'என் அத்தை மகன் சேந்தன் அமுதன் பாதாள சிறையில் இருந்து வந்தவன் அவனுடன் தான் தஞ்சை வந்தேன் இந்த தஞ்சையில் உள்ள மாடமாளிகைகள் கோபுரங்கள் யாவையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை சக்கரவர்த்தி சுகமா அவர் எப்படியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் மற்றும் அவரின் தர்மராஜ்ஜியத்தில் பெண்களை எப்படி பலவந்தமாக பற்றிக் கொண்டு வரும் அக்கிரமத்தை சொல்லி நியாயம் கேட்க வேண்டும்' என்றாள். 'பெண்ணே சக்கரவர்த்தி உடல் நலம் மிகவும் மோசமாக இருக்கிறது உன்னால் அவரைப் பார்க்க முடியாது உன்னை நான் பலவந்தமாக பற்றி இழுத்து வரக் கட்டளையும் இடவில்லை' என்றார் முதல் மந்திரி. 'சுவாமி நேற்று முன் தினம் நான் கோட்டை வாசலை நெருங்கிக் கொண்டிருந்தேன். பெரும் மழையும் புயலும் அடித்தது பெரும் இருட்டு என்றதால் தொடர்ந்து நடக்க முடியவில்லை மரங்களும் முறிந்து விழுந்தது சாலை ஓரம் இருந்த யாத்திரிகள் மண்டபத்தில் தங்கச் சென்றேன் அப்பொழுது ஒரு சிவிகையை அங்கு வைததிருந்தனர். அதில் இருந்த பெண்மணி இறங்கி இவளிடம் வந்தாள் இவள் அருகில் சேந்தன் அமுதன் நின்றான். மூவரும் மண்டபத்தின் பின்னால் சென்று பேசிக் கொண்டனர். பின்னர் இவள் திரும்பி வந்து அந்தப் பல்லக்கில் ஏறிக் கொண்டாள். இதை நான் பார்த்தேன் ஆனால் இது உங்கள் ஏற்பாடு என்று எனக்குத் தெரியாது இப்பொழுது இந்தப் பெண்ணை குந்தவையிடம் ஒப்படையுங்கள் அவருக்கு இவளின் உதவி தேவைப்படும் மந்தாகினி தேவி சேந்தன் அமுதன் வீட்டில் இருப்பாள் நான் சென்று அழைத்து வருகிறேன்' என்றான் ஆழ்வார்க்கடியான். அதற்கு முதல் மந்திரி 'ஏன் இவ்வளவு நேரமும் வாயை மூடிக்கொண்டிருந்தாய் எதற்காக இவளை குந்தவையிடம் அனுப்புமாறு சொல்கிறாய்' என்று கேட்டார். 'நாகைபட்டினத்துக்கு பெரிய ஆபத்து என்று கேள்விப்பட்டேன் கடல் பொங்கி நகரையே மூடிவிட்டது இளைய பிராட்டி முதல் மந்திரியை தேடி வந்து கொண்டிருப்பார்' என்றார். இதைக் கேட்டு பூங்குழலியும் அநிருத்தரும் திடுக்கிட்டனர். அவ்வேளை குந்தவையும் வானதியும் கவலை படர்ந்த முகத்துடன் வந்து நின்றனர். அவர்களை வரவேற்று நின்றார் முதல் மந்திரி. குந்தவை 'ஐயா நேற்று அடித்த புயலால் என் தந்தை தன் மனதை மேலும் புண்படுத்தி விட்டார். குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் என்ன பாடுபடுகிறார்களோ என்று எண்ணித் தூங்கவில்லை பொக்கிஷ அறை பூட்டப்பட்டுள்ளது பெரிய பழுவேட்டரையர் திரும்பி வரும் வரை என்ன செய்வது என்று யோசிக்க வேண்டாம் அரண்மனையில் உள்ள எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு என் உடமைகள் முழவதையும் நான் தருகிறேன் என் அன்னையும் அவ்வாறே செய்கிறார் ஏழை மக்களுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள்' என்றாள். அநிருத்தர் 'உடனே ஏற்பாடு செய்கிறேன் கோடிக் கரைமுதல் நாகைபட்டினம் வரை கடலோரமுள்ள ஊர்கள் எல்லாம் மூழ்கடித்து விட்டதாம் என்றவுடன் குந்தவை, வானதி, பூங்குழலி எல்லோர் முகங்களும் வாடிய மலர்கள் மரத்தில் தொங்குவது போல் காட்சி தந்தது. அதைக் கண்ட அநிருத்தர் இன்று மதியம் வந்த இந்த செய்தி உண்மை என்பதனை தெரிந்து கொள்ள முடியாது தூதுவர்கள் வந்து சேர மதியம் ஆகிவிடும் எம்மால் முடிந்தவைகளைச் செய்வோம்' என்றார்.

அப்பொழுது குந்தவை பூங்குழலியைப் பார்த்து விட்டு 'தந்திர வித்தைகளில் கைதேர்ந்த மந்திரி இவர் அருள்மொழியைப் பற்றி அறியவே அழைத்திருக்கிறாரோ' என்ற சந்தேகத்துடன் அநிருத்தரை பார்த்து 'இவள் யார் பூங்குழலிதானே' என்று கேட்க அவரும் நடந்ததை கூறினார். குந்தவை மிக்க மகிழ்ச்சி பொங்க 'இவள் அத்தையை உடனே கண்டு பிடித்து கொண்டுவர வேண்டும் அவர் அமுதன் வீட்டில் இருக்கிறார் என்றால் நானே சென்று அழைத்து வருகிறேன்' என்றாள். அதற்கு ஆழ்வார்க்கடியான் 'இல்லை இளவரசி மந்தாகினி தேவி புதிய மனிதர்களைக் கண்டால் ஓடிவிடுவார் நானே போகிறேன் பூங்குழலியை அழைத்துக் கொண்டு போகிறேன்' என்று புறப்பட்டான். அநிருத்தரும் அரண்மனை ஆசார வாசலுக்கு சென்று காத்திருந்து பார்த்துப் பேசி விட்டு வந்தார். 'தேவி அந்த ஊமைத்தாய் மந்தாகினி பற்றி உனக்கு எப்படி தெரியும் எவ்வளவு தெரியும்' என்றார் அநிருத்தர். அதற்கு குந்தவை 'என் தந்தை எனக்கு யாவும் சொல்லியிருக்கிறார். ஆனால் அவரை இறந்துவிட்டதாகச் சொன்னார் என் நண்பன் அநிருத்தர் அவள் இறந்துவிட்டதாகச் சொன்னான் அவளுக்கு நான் செய்த பாவம் இன்று அவள் ஆவியாக வந்து என்னைக் கொல்கிறாள் என் பிள்ளைகளைப் பழிவாங்க எண்ணுகிறாள் என்று புலம்பினார். தன் மகன் அருள்மொழிவர்மனை அவள் தான் கொன்றிருக்க வேண்டும் என்றார். அதற்கு நான் எப்படி அவரை ஆறதல் படுத்துவது என்று தெரியவில்லை. ஆனால் அவர் உயிரோடு இருக்கிறார் என்று நான் தெரிந்து கொண்டேன். வாணர் குலத்து வீரன் ஈழத்தில் இருந்து வந்து அந்த மாதரசி தங்களை காப்பாற்றியது பற்றியும் அருள்மொழிவர்மரிடம் காட்டிய அன்பு பற்றியும் நந்தினி அவர் சாயலில் இருக்கிறாள் என்பது பற்றியும் எனக்குச் சொன்னார். இதனால் நான் அவரை எப்படியாவது பார்க்க வேண்டும் என்று எண்ணினேன் அருள்மொழிவர்மன் கூட எனக்கு அவர் பற்றி சொன்னான்' 'எப்பொழுது சொன்னான்' என்று அநிருத்தர் கேட்க குந்தவையும் தான் தவறு செய்து விட்டேன் என்று உணர்ந்து 'மன்னிக்க வேண்டும் ஐயா அருள்மொழியை கடல் கொண்டதாக வந்த செய்தி பொய் அவர் நாகபட்டினத்தில் இருக்கிறார். அது யாவும் தெரிந்த தங்களுக்கும் தெரியும் என்று சந்தேகப்படுகிறேன்' என்றாள். அதற்கு முதல் மந்திரி 'ஆமாம் எனக்கும் தெரியும் ஆனால் குந்தவை தேவி செய்யும் விடயங்களில் நான் தலையிட விரும்பவில்லை அவள் அறிவு ஆற்றல் இந்த சோழ தேசத்தையே ஆளும் வலிமை படைத்தது என்பது எனக்குத் தெரியும். அதனால் அந்த விடயத்தை பற்றி நான் எதுவும் பேசவில்லை அவர் அப்படி மறைந்திருப்பது மிக நன்மை பயக்கும் மக்கள் பழுவேட்டரையர்களிடம் மதுராந்தரிடமும் பெரும் கோபம் கொண்டுள்ளார்கள் அருள்மொழியைக் கண்டால் அவரை முடி சூடும்படி மக்கள் ஆர்ப்பரிப்பார்கள் பின் உள் நாட்டு சண்டை மூண்டுவிடும் நீ செய்த காரியம் மிக நன்று' என்றார். அப்பொழுது குந்தவை 'மிக்க மகிழ்ச்சி நான் நாகபட்டினம் சென்று அருள்மொழியைப் பார்த்தேன் அவனும் ஊமைத் தாயைப் பற்றியெல்லாம் சொன்னான். நாங்கள் இருவரும் அவரைத் தந்தையிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் அவர் உயிரோடு இருக்க வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும்' என்றாள். அதற்கு முதல் மந்திரி 'ஆம் அம்மா நான் செய்த குற்றத்திற்கு அவ்வாறு செய்ய வேண்டும் என்று எண்ணி ஏற்பாடு செய்தேன் என் ஏற்பாட்டை இந்த பொல்லாத பெண் பூங்குழலி கெடுத்து விட்டாள்' என்றார்.

*(தொடரும்...)*

---

**Jenita.Jaffna@gmail.com**
**தொகுப்பு, எழுத்தாக்கம்:** மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---

(_25_ பக்கத் தொடர்ச்சி)

# புது டில்லியில் சிவப்புக் கம்பளம் தயாராகிறது 'என் உயரம் எனக்குத் தெரியும்' என்று தந்தையைப் போல தனயன் சொல்லமாட்டார்



பல இனங்களைச் சார்ந்த, பன்மொழிகளைப் பேசுகின்ற, பல பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்கள்தான், இந்திய மக்கள் என்பதை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, "ஒரே நாடு ஒரே மொழி" என்னும் ஆதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்தும் மோ-டியைப் பற்றியும் பாஜக பற்றியும் வடவிந்தியம் முதல் தென்குமரி முனை-வரை உள்ள மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டனர்.

2024 பொதுத் தேர்தலுக்குப் பின் புது டில்லி கொத்தளத்தை ஆளப்போகும் தலைவரை-பிரதமரை அடையாளம் காட்டப்போவது வேட்டி கட்டிய ஒரு தமிழரான மு.க. ஸ்டாலின்தான் என்று பேசப்பட்டு வருகிறது. 1996-பொதுத் தேர்தலுக்குப் பின், இந்தியப் பிரதமர் யார் என்பதை வேட்டி கட்டிய இரண்டு தமிழர்கள் (கலைஞர் மு.கருணாநிதி, ஜி.கே. மூப்பனார்) முடிவு செய்வார்கள் என்று ப.சிதம்பரம் சொன்னது இவ்வேளையில் நினைவுக்கு வருகிறது.

கர்நாடகத்தைச் சேர்ந்த தேவ கௌடா பிரதமர் ஆகும்முன், அந்த வாய்ப்பு முதலில் கலைஞரைத்தான் தேடி வந்தது் காலமெல்லாம் தமிழ்க் கடலில் முத்தெடுத்துக் கொண்டிருந்த கலைஞர் "என் உயரம் எனக்குத் தெரியும்" என்று சொல்லி விலகிக் கொண்டு, "கிங் மேக்கர்" ஆனார்.


2024-இல் அப்படிப்பட்ட வாய்ப்பு வந்தால், தந்தையைப் போல ஒதுங்கிக் கொள்ளாமல் உடனே தயாராக வேண்டும் அதற்கான அடித்தளத்தையும் ஆயத்தையும் இப்பொழுது முதலே மு.க. ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டும்.

காரணம், புது டில்லி செங்கோட்டையின் சிவப்புக் கம்பளம் தயாராகி வருவதற்கான கூறுகள் இப்பொழுதேத் தென்படுகின்றன.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**




# ரஞ்சன் விஜயரத்னேவும் ஈழத் தமிழ் இளைஞர்களும்



**கோ**லாலம்பூர், மார்ச் 02:

மலேசியாவின் வெள்ளி மாநிலம் ஈப்போவில் பிறந்த தமிழீழ தந்தை செல்வா தலைமையில் இலங்கை மண்ணில் ஈழத் தழிழர்களுக்காக ஜனநாயக முறையில் நடைபெற்ற உரிமைப்போர் ஒரு தலைமுறைக் காலத்திற்கு மேலாக நீடித்தும் பயனற்றுப் போன நிலையில், அங்கு ஆயுத கலாச்சாரமும் கொரில்லா முறையிலான போராட்டமும் ஒருசேர தலைதூக்கத் தொடங்கின.

எந்தெந்த நாடுகளில், அரசியலில் மதம் கலந்துள்ளதோ அந்தந்த நாடுகளில் அரசியல் நிலைத்தன்மையும் நிலைக்காது இன இணக்கமும் இருக்காது.

ஆசியக் கண்டத்தைப் பொறுத்தவரை இலங்கை, பாகிஸ்தான், ஆ.ஃ.ப்கானிஸ்தான், மியன்மார் போன்ற நாடுகள் இதற்கு தக்க சான்றாகும். தற்பொழுது, வங்க தேசமும் இந்தியாவும் அந்த நிலையை எட்டிவருகின்றன.

பௌத்த மதவாதம், பிக்குகளின் ஆதிக்கத்துடன் சிங்கள மேலாதிக்கமும் கைகோத்து இலங்கைஅரசியலை இடைவிடாமல் ஆட்டிப்படைப்பதால் இலங்கைத் தீவு நாட்டில், இனங்களுக்கு இடையேயான பூசல் நீங்கி சமத்துவமும் சமாதானமும் மலர்வதற்கான வாய்ப்பு ஏற்படவே இல்லை இனியாவது ஏற்படுமா என்பதும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தென்படவில்லை.

இதனால்தான், தந்தை செல்வா மேற்கொண்ட ஜனநாயக வழியிலான அமைதிவழிப் போராட்டத்திற்கு மதிப்பில்லாமல் போனது. இந்தக் கட்டத்தில்தான் ஈழத் தமிழ் மக்களின் உரிமை வேட்கை அடுத்தக் கட்டத்தை எட்டியது் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தமிழீழ இளைஞர்களைத் தள்ளியது.



நக்கீரன்

இது, ஏறக்குறைய உள்நாட்டுப் போருக்கும் ஜனநாயகப் போராட்டத்திற்கும் இடைப்பட்ட காலமாகும்.

இந்தக் காலத்தில், சிங்கள காவல் படையினரால் அழைத்துச் செல்லப்படும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவார்கள் அல்லது குதிகால் நரம்பு வெட்டப்பட்டு வருவார்கள்.

இரவு பகல் என பாராமல் எந்தத் தருணத்திலும் எந்தக் காரணமும் தெரிவிக்கப்படாமல் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும் இளைஞர்களை, அவர்களின் குடும்பத்தினர் காண்பது அநேகமாக அதுதான் கடைசித் தருணமாக இருக்கும்.

சிங்கள காவல் படை அல்லது இராணுவ அதிகாரிகளால் வளைக்கப்படும் தமிழ் இளைஞர்களின் எதிர்காலமும் பாதுகாப்பும் அந்த அளவுக்கு நிச்சயமற்று இருந்தன.

இப்படியான சூழலில்தான் இலங்கை அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராகவும் இலங்கை அரசத் தலைவர் ரணசிங்க பிரேமதாசாவின் நெருங்கிய சகாவாக இருந்தவருமான ரஞ்சன் விஜயரத்னே தொலைவில் இருந்து இயக்கப்பட்ட வாகன வெடிகுண்டு வெடிப்புக்கு ஆளாகி இறந்தார்.

அத்தீவு நாட்டின் தலைநகரம் கொழும்பில் இடம்பெற்ற முதல் கார் குண்டு வெடிப்பு இது இந்தச் சம்பவம் இடம்பெற்ற நாள், 1991-ஆம் ஆண்டில் இதே மார்ச்-02ஆம் நாள்.

விடுதலைப் புலிகளின் கன்னி முயற்சி இது சொல்லி அடித்த நிகழ்ச்சியும்கூட!. இலட்சக் கணக்கான தமிழீழ மக்கள் தங்களின் இன்னுயிரை ஈகம் செய்ததற்கான கணக்கை நேர் செய்யும் நாள், எந்நாள்???

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# மொகலாயப் பேரரசர் ஔரங்க சீப், நல்லவரா? கெட்டவரா??



**கோ**லாலம்பூர், மார்ச் 03:

அக்பர் பாதுஷாவைப் போல இந்திய மொகலாய சாம்ராஜியத்தை 49 ஆண்டுகள் 1658 முதல் 1707 வரை ஆண்ட இன்னொரு பேரரசர் ஔரங்க சீப் இன்றைய ஆ.ஃ.ப்கானிஸ்தான் தலைநகரம் காபூலில் இருந்து தமிழ் நாடுவரை பரந்து விரிந்திருந்தது இவரின் சாம்ராஜ்யம்.

சிவாஜி வழிவந்த மராட்டிய மன்னர்களுடனும் இராஜபுத்திர சிற்றரசர்களுடனும் அனைத்து சுல்தான்கள் மற்றும் பேரரசர்களும் இணக்கமாக இருந்த நிலையில் ஔரங்க சீப் மட்டும் அனைத்துத் தரப்பினரையும் அழித்து நசுக்கி துவம்சம் செய்தார். எதிரிகளை மட்டுமல்ல் உடன் பிறந்த சகோதரர்களையே ஈவு இரக்கமின்றி வேட்டையாடி பதவியைக் கைப்பற்றிய இவர்மீது, வரலாற்று ஆய்வாளர்கள் இன்னமும் கடுமையான விமர்சனத்தை வைப்பதுண்டு.

தன்னை எதிர்க்க நினைத்த ஒரு தம்பியின் கண்களில் பழுக்க வைத்த வாளைச் செருகிய இவர், தாஜ்மகாலை எழுப்பிய தன் தந்தை ஷாஜகானை சாகும்வரை அரண்மனைக் கைதியாக வைத்திருந்தார்.

இத்தனை மூர்க்கத்தனம் கொண்ட ஔரங்க சீப், சொந்த வாழ்க்கையிலும் சமய நெறியிலும் எளிமையிலும் எளிமையாக வாழ்ந்தார்.

அரசாங்க கருவூலத்தில் இருந்து சொந்த செலவுக்காக ஒரு காசுகூட எடுத்ததில்லை. எத்தகைய நெருக்கடியான கட்டமாக இருந்தாலும் ஐந்து வேளை தொழுகை நடத்த தவறியதே இல்லை. சொந்தமாக குல்லா தயாரித்தும் குர்ரான் மறை நூலை பிரதி எடுத்தும் அவற்றை விற்ற பணத்தில்தான் வாழ்ந்தார்.

இறந்தபின் தன் உடலில் போர்த்த வேண்டிய "க.ஃ.பன்" துணிக்கும் நல்லடக்க செலவுக்கும் முன் கூட்டியே பணத்தை ஒதுக்கி வைத்ததுடன், இறந்தபின் நல்லடக்க நிகழ்வும் எளிமையாக நடைபெற வேண்டும் என்று உயில் எழுதி வைத்தவர் ஔரங்கசீப். அவரின் நினைவு நாள் இன்று.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

## 04-03-2022 வெள்ளி தொடக்கம் 10-03-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். பூமியால் லாபம் உண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். புதிய சிந்தனை உருவாகும். விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். வில்லங்கள் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல் வாய்ப்புக்கள் நாடி வரும். மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். உபயோகமான தருணம். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆலய தரிசனம் அமைதி தரும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். ஆரோக்யம் திருப்தி தரும். வழக்கு வெற்றி தரும். புத்தி வழியில் தொல்லை உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். புத்துணர்வோடு செயல்படுவீர். வாய்பேச்சில் கவனம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,7,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A




**ரிஷபம்:** பணவரவு கிடைக்கும் வாரம். மனம் மகிழும் காலம். உள்ளம் பூரிப்படையும். மனைவியால் அமைதி கெடும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுபக்காரியச் செய்தி வரும். வேலைத்திறன் அதிகரிக்கும். அலைச்சலால் அசதி ஏற்படும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கிடைக்கும். வெளியூர் பயணம் உண்டு. விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சாதனை படைக்கும் காலம். பாராட்டுக்கள் உயரும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசை ஆர்வம் கூடும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பூர்வீக சொத்து கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,5,7,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**மிதுனம்:** தொட்டது துலங்கும் வாரம். எண்ணம் கைகூடும். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு தேவை. திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். நண்கர்களால் நன்மை உண்டு. உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். புதிய கடன் ஏற்படும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிரிகளின் தொல்லைக் குறையும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். பணிவும் துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். இடமாற்றம் நன்மை தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். தொல்லைத் தந்தவர் விலகிடுவர். வங்கி சேமிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K




**கடகம்:** புண்ணியம் சேரும் வாரம். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பண நடமாட்டம் கூடும். செய்தொழில் சிறப்படையும். பெண்களுக்கு மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். சகோதரியி-னால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,D




**சிம்மம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்க வரும். பழைய பகை தீரும். வெற்றிச் செய்தி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். பழையக் கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச்சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு மேம்படும். பணம் புரளும். குடும்ப வளர்ச்சி பெருகும். புதுமையை விரும்புவீர்கள். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்புகள் மாறும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பெற்றோர் வழ-ியில் பிரியம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் ஒழியும். கண் நோய் வந்து போகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நடராஜப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,H




**கன்னி:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பொறுப்புக்கள் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். வெளிநாட்டு பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தியாகும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். ஷேர்மார்கெட்டில் லாபம் தரும். விரும்பிய பொருள் கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். விபரீத எண்ணம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,C



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**துலாம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. குடும்பச் சுமை கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். ஆண்களின் அதிகாரம் உயரும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக்கள் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு உண்டு. வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகனச் செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனை தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். வளமான வாழ்வு அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குலதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I





**விருச்சிகம்:** விரக்திகள் மறையும் வாரம். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். பொன், பொருள் சேரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். விருப்பமான தொழில் அமையும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். அன்னதானம் செய்வதால் ஆரோக்கியம் கூடும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சிகள் பலன் தரும். மருத்துவச் செலவுகள் உண்டு. பொருளாதாரம் உயரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பதவி உயர்வு வரும். வருமானம் கைகூடி வரும். நண்பர்களால் நன்மையுண்டு. பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும். அணிகலன் ஆர்வம் கூடும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். கர்மவினைகள் அகலும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,2,4,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**தனுசு:** குதூகலம் தாண்டவமாடும் வாரம். பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். சமூக ஆர்வம் கூடும். மற்றவரிடம் பழகும் விதம் அன்பாக இருக்கும். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா மனபயங்கள் நீங்கும். உற்சாகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தையில் லாபம் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் கூடும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியை தரும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்ப கௌரவம் உயரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். வராத கடன் வந்து சேரும். பொறியியல் துறை லாபம் தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஸ்டே'னரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பொறாமைகள் வில்கும். பழையக்கடன் தீரும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மகரம்:** மனிதநேயம் மிகுதியாகும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. எதார்த்தமாக செயல்படவும். பட்டம் பதவி தேடி வரும். பெண்வழிப் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். நன்மைகள் நாடி வரும். வம்பு தும்புக்கள் ஒழியும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழைய கடன் அடையும். வீண் வம்பு விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலு மங்கை, அதிர்ஷ்ட எண்: 9,8,5,2
அதிர்ஷ்டநிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,E




**கும்பம்:** தர்ம சிந்தனை மேலோங்கும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். வேலைப்பளு கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு தும்புகள் ஒழியும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். காரியங்கள் கை கூடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி உண்டாகும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். வீட்டுத்தொல்லைகள் விலகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வியாபாரம் வெற்றித் தரும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலில் வெற்றி காண்பீர்கள். மூத்தோர்கள் மனக்குறை அகலும். குழப்பங்கள் நீங்கும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான காலம். பித்தளைத் தொழில் லாபம் தரும். திருமண பேச்சு முடிவிற்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 6,4,9,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**மீனம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். முன் கோபத்தை குறைக்க வேண்டும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெயர் புகழ் கௌரவம் உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்தொழில் வியாபாரம் சிறக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். பணப்புழக்கம் சரளமாகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். கடன் பிரச்சனை தீரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். சோதனைகள் நீங்கும். கனவு தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. காதலால் மகிழ்ச்சியுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உளுந்து தானம் சிறந்த பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X

# நீத்தார் துயர் பகிர்வு



மலர்வு 27 ~ 02 ~ 1952

மறைவு 27 ~ 02 ~ 2022

## திரு.சரவணமுத்து சிறிஸ்கந்தராஜா
*(Electrian)*

**இல. 748, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.123 புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிறிஸ்கந்தராஜா அவர்கள் 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - கனகம்மா ஆகியோரின் அன்பான சிரேஷ்ட புத்திரனும்,
காலஞ்சென்றவர்களான பிலிப் ஜோசப் (றோய் ஆட்ஸ் ஸ்ரூடியோ) நல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும்,
ஜெயசிந்தா (சோதி), (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை -யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மிகுந்த கணவரும்,
சகிலா (பிரான்ஸ்), சரண்யா (Nirushana Building construction PVT.Ltd), சௌமியா (ஆசிரியை, கிளிநொச்சி, இரணைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை), ஆகியோரின் பாசமிகு தந்தையும்,
சசிகரன்(பிரான்ஸ்), பிரசன்னா(மருத்துவப் பிரதிநிதி) ஆகியோரின் அன்பு மாமனாரும்,
காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, ஜெகசோதிமலர், சத்தியகுமார் மற்றும் செல்வமணி, ஆனந்தவடிவேல் (ஓய்வு நிலை சிரேஷ்ட முகாமையாளர் மக்கள் வங்கி), பேபி சறோஜா (கனடா), நித்தியானந்ததேவி (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,
காலஞ்சென்றவர்களான ஜெயசீலி, ஜெயராணி, ஜெயதேவி, விக்ரர் மற்றும் ஜெயவதி, அன்ரன் அருட்சகோதரி லூசியா(திருச்சிலுவை கன்னியர் சபை), ஜெயக்குமார், ஜெயமலர், பிலிப் துரைராஜா, மரியதாஸ், அலோசியஸ், ஞானேந்திரா, இராஜலிங்கம், ஜேன், ஜெயகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
பிரியங்கா (பிரான்ஸ்), ஆதுரி, அஸ்மிதா, ஆதர்சன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

**அன்னாரின் நல்லடக்கமானது 04.03.2022 (வெள்ளிக்கிழமை) பி.ப. 2.30 மணியளவில் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

123, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: ஞானேந்திரா குடும்பம்.
கனடா - 416 287 1867
416 930 9426

குடும்பத்தினர்:
வடிவேல் (சகோதரன்) 0771539158
மனைவி - 077 240 9709
சரண்யா (மகள்) 077 393 2680
சௌமியா (மகள்) 077 579 0751


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1352 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 4, 2022

# மாலைதீவில் உயிரிழந்த தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸினது பூதவுடல் இலங்கையை சென்றடைந்தது



மாலைதீவில் கடந்த மாதம் 26 திகதி மரணமடைந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸ் இன் பூதவுடல் இன்று (3) வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கையை சென்றடைந்தது.

இந்த நிலையில் குறித்த பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூதவுடலை பெற்றுக் கொள்ள அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

சடலப் பரிசோதனையின் பின் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்பட உள்ள நிலையில் உடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு அஞ்சலிக்காக எடுத்து வரப்படும்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரும் வழியில் பூநகரி, முழங்காவில் , தேவன் பிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த கால்பந்தாட்ட கழக வீரர்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பவனியாக எடுத்து வரப்படும்.

எதிர் வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் காலமான திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளையின் 31ம் நாள் நினைவு நாளையொட்டி ஓமந்தை பெண் தலைமைதாங்கும் ஒரு குடும்பத்திற்கு பசுமாடு ஒன்று வழங்கப்பெற்றது



அண்மையில் கனடாவில் காலமான திருமதி செல்வநாயகி வேலுப்பிள்ளை அவர்களின் 31ம் நாள் நினைவு நாளையொட்டி ஓமந்தையைச் சேர்ந்த பெண் தலைமைதாங்கும் குடும்பத்தின் நலன் கருதி பசுமாடு வழங்கப்பெற்றது இந்த வாழ்வாதார உதவியானது கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் கனடா வன்னிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

*(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)*

# கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து தொடர்ந்து அரசியல் செய்கின்றனராம்

கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அரசியல் செய்கின்றனர் என தமிழ் பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்களின் பிரதித் தலைவர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

திருப்பழுகாம இந்து கலாமன்றத்தின் 47ஆம் ஆண்டு பொங்கல் விழாவும், அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு என்பன பழுகாம திரௌபதையம்மன் ஆலய முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த காலங்களில், பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட பல பிரச்சினைகளை கூட்டமைப்பு அசமந்தப் போக்கிலேயே அணுகியிருந்தது. தமிழ்மக்கள் மீது அக்கறையாக இருந்திருப்பின் தமிழ் மக்களின் பலத்தோடு ஆட்சி செய்த காலத்திலேயே பிரதேச செயலகங்களையும் வைத்தியசாலைகளையும் பாடசாலைகளையும் தரமுயர்த்தி, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் செய்யாது இப்போது மாத்திரமே கூச்சலிடுகின்றனர்.


பொதுஜன பெரமுனவினால் பல்வேறு துறை சார் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற வண்ணம் காணப்படுவதனால், பொதுஜன பெரமுனவின் அரசியல் இருப்பு காலம் பூராகவும் தொடரும் என்பதை தமிழ்மக்கள் அறிவதுடன், கூட்டமைப்பினால் தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யமுடியாது என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர் என்றார்.

# கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம் 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' காணத் தயாராகுங்கள்

கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு அற்புதமான திரைப்படம். ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஸ்காபுறோ நகரில் திரையிடப்படுகின்றது.

*(உள்ளே 18ம் பக்கம் உள்ள அறிவித்தலைப் பார்க்கவும்)*

# கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் முதற் தடவையாக "தமிழர் மரபுரிமை மாதம்" தொடர்பாக உரையாற்றிய உறுப்பினரை கௌரவித்த மொன்றியால் திருமுருகன் ஆலய பிரதிநிதிகள்



கியுபெக் மாகாணப் பாராளுமன்றத்தில் முதற் தடவையாக "தமிழர் மரபுரிமை மாதம்" தொடர்பாக உரையாற்றிய உறுப்பினர் கார்லோஸ் ஜே. லீடாவ் (ராபர்ட் பால்ட்வின் பாராளுமன்ற உறுப்பினர்) **MNA Carlos Jleitao** அவர்களை நேரடியாக பாராட்டி கௌரவித்த மொன்றியால் திருமுருகன் ஆலய பிரதிநிதிகள் தமிழ் மக்கள் சார்பில் தமது நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

JOGO
DIGITAL THERAPEUTICS + DIGITAL CLINIC
MAKING MUSCLE AND BRAIN WORK TOGETHER
2900 Markham Rd,
Majestic City Mall, Unit A9,
Scarborough,
Ontario, M1X 1E6
Canada
Phone: +1 (416) 723-2000
Toll Free : +1 (877) 569-8282
Fax: +1 (647) 946-6480
Web: www.jogohealth.com
Email: torontoclinic@jogohealth.com

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker